February 2022
தமிழ்
12-ம் ஆண்டில்
நற்றமிழரின் நாடித்துடிப்பு

VARSHA™

IDLI/DOSA BATTER

Let's eat the Best!

இதழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

February 2022

சுவடி — 11
ஓலை — 12

வணக்கம் பல

'கடன்பட்டார் நெஞ்சம் போல கலங்கினான் இலங்கை வேந்தன்!' என்பது தமிழ் இலக்கிய வரலாற்றில் நிலைத்து நிற்கும் ஒரு சொற்றொடர்! இலங்கையை ஆள்பவர்கள் கலங்குகின்றனரா என்பது கேள்விக்குறிதான்! ஆனால் இலங்கை மக்கள் கலங்கித்தான் போயிருக்கிறார்கள். அம்பாந்தோட்டத் துறைமுகத்தை 99 ஆண்டுகளுக்கு குத்தகை விட்டதன் மூலம் இலங்கை தன்னுடைய தார்மீக உரிமையை விட்டுக்கொடுத்து விட்டது. கடன் பொறியை ஒவ்வொரு நாடுகளின் மீதும் சீனா ஆதிக்கத்தோடு செலுத்திக் கொண்டே வருகிறது.

சீனாவின் ஆதிக்கத்தில் ஜூபூட்டி, லாவோஸ், ஜாம்பியா, கிர்கிஸ்தான் போன்ற நாடுகளின் பட்டியல் நீண்டு கொண்டேயிருக்கிறது. இந்த நாடுகளின் அத்தியாவசிய கட்டுமானப் பணிகளுக்காகத் தனது கடன் கரத்தை நீட்டுகின்ற சீனா, பின்னாளில் அந்நாடுகளின் மேல் பொருளாதார ரீதியில் அதிகாரம் செலுத்தி, அந்தந்த நாடுகளின் தார்மீக உரிமைக்குச் சிக்கலான நிலையை ஏற்படுத்துகிறது. சீனா பிற நாடுகளின் மீது பொருளாதார ஆதிக்கம் செலுத்துவதற்கு, உலக நாடுகள் தனது கண்டனத்தை தெரிவித்து வந்தாலும், சீனாவின் நிலைப்பாடு மாறியதாக இல்லை! ஒட்டுமொத்த நாடுகளும் கடும் கட்டுப்பாடுகளை விதித்து பிற நாடுகளின் மீது ஆதிக்கம் செலுத்துகின்ற சீனத்தின் போக்கை அறவே ஒழித்து, அதன் ஆதிக்க கரம் நீள்வதற்கு எதிரான எதிர்ப்பு அரசியலை முன்னெடுக்க வேண்டும் என்பது இன்றைய காலத்தின் கட்டாயமாக இருக்கிறது.

உலகெங்கும் தீநுண்மி தொற்றுக்குக் கடும் கட்டுப்பாடுகள் நிலவி வந்த நேரத்தில், இத்தொற்றை எதிர்கொண்டு உலகம் இயல்பு நிலைக்குத் திரும்புவதில் பல புதிய முடிவுகளும், தீர்வுகளும் காணப்பட்டிருக்கின்றன. எதிர்வரும் சந்ததிகள் மட்டுமல்லாது, இன்னலுற்ற இக்கால மக்களும் வளமான வாழ்வுக்குத் திரும்புவார்கள் என்ற நம்பிக்கைக்கு உத்தரவாதமாக இந்தப் புத்தாண்டு தொடங்கியிருக்கிறது என்று நம்புவோமாக!

படைப்புகளும், படைப்பாளிகளும் எப்பொழுதுமே எதிர்காலத்தின் போக்கைத் தீர்மானிப்பதில் பெரும்பங்கு வகிப்பதை மறுப்பதற்கியலாது! அத்தகைய எதிர்காலச் சிந்தனைகளுக்கு அடித்தளமிடும் படைப்புகளோடும், சிந்தனைகளோடும் மலர்கின்ற இம்மாத 'அய் தமிழ்' இதழை வாசியுங்கள்!... நேசியுங்கள்!...வரவேற்று மகிழுங்கள்!

நேசப்பகிர்தலுடன்

ஆசிரியர் குழு

உள்ளே...



- விரியும் வலை
- விலக்குமா வெறியை
- நின்றறுக்கும் வினை!
- தமிழே தமிழே
- சேரமான் கனவு
- தல வரலாறு
- அறிவோம் தமிழர் பெருமை
- சிவகாமியின் சபதம்
- கலங்கும் இயற்கை
- மருத்துவ தமிழ்
- முதிர்ந்தோர் பெருமை

Chief Editor & Publisher
Sivanesan

Editor
Khottravan

Editorial Team
Ganesan
Navani
Shanthakumar

Art Editor
Sriram

Art & Marketing Director
Jaya

Printers
Kanagam Pathippagam

Contact us:
editor@ithamil.com

*இதழில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் படைப்பாளரின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியது

விரிவும்

சீனாவின் கடன் வலை:

சீனாவின் கடன் குறித்து நமக்கு என்ன தெரியும்?

ஏழை நாடுகளுக்கு கடன் வழங்குவது தொடர்பாக சீனா விமர்சனங்களை எதிர்கொள்கிறது. சீனா கடன் கொடுத்த நாடுகள், தங்கள் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் தவிப்பதாகவும், அந்நாடுகள் பெய்ஜிங்கின் அழுத்தத்தால் எளிதில் பாதிக்கப்படுவதாகவும் குற்றம் சாட்டப்பட்டது.

உலகின் மிகப்பெரிய கடன் வழங்கும் நாடுகளில் சீனாவும் ஒன்றாகும். குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளுக்கான அதன் கடன்கள் கடந்த பத்தாண்டுகளில் சுமார் மூன்று மடங்கு அதிகரித்து, 2020ஆம் ஆண்டின் இறுதியில் $170 பில்லியனைத் தொட்டது. சீனாவின் ஒட்டுமொத்த கடன்கள், இந்த புள்ளிவிவரங்களில் குறிப்பிடப்பட்டிருப்பதை விட அதிகமாக இருக்கலாம்.



ஆனால் அக்கருத்தை சீனா நிராகரிக்கிறது. தங்கள் பிம்பத்தை கெடுக்கும் வகையில், மேற்கு நாடுகளில் சிலர் இக்கருத்தை கூறி வருவதாகக் குற்றம் சாட்டுகிறது. "சீனாவிடம் கடன் வாங்கியதன் விளைவாக ஒரு நாடு கூட 'கடன் பொறி' என்று அழைக்கப்படும் சூழலில் சிக்கவில்லை." என்கிறது சீனா.

அமெரிக்காவின் வில்லியம் & மேரி பல்கலைக்கழகத்தில் உள்ள சர்வதேச மேம்பாட்டு அமைப்பான எய்ட் டேட்டாவின் ஆராய்ச்சி, வளரும் நாடுகளுக்கு சீனா வழங்கும் பாதி கடன்கள் கடன் புள்ளிவிவரங்களில் தெரிவிக்கப்படவில்லை என்பதைக் கண்டறிந்துள்ளது.

இது பெரும்பாலும் அரசாங்க குறிப்பிலிருந்து

வலை!

விலக்கி வைக்கப்படுகிறது, அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள், வங்கிகள், கூட்டு முயற்சிகள் அல்லது தனியார் நிறுவனங்களுக்கு மாற்றப்படுகின்றன.

இப்போதும் 40 க்கும் மேற்பட்ட குறைந்த மற்றும் நடுத்தர வருமான நாடுகள் தங்களின் மொத்த ஜிடிபியில் 10 சதவீதத்துக்கு மேலான கடன்களை சீனாவிடமிருந்து பெற்றுள்ளன.

ஜின்பிங்கின் பெல்ட் அண்ட் ரோடு திட்டத்தின் கீழ் சாலைகள், ரயில்வே, துறைமுகங்கள், சுரங்கம் மற்றும் எரிசக்தி துறை சார்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

சீனாவின் கடன் வளர்ச்சி

பிரிட்டனின் வெளிநாட்டு உளவு அமைப்பான எம்.ஐ 6—ன் தலைவரான ரிச்சர்ட் மூர், சீனா

ஜிபூட்டி, லாவோஸ், ஜாம்பியா, கிர்கிஸ்தான் ஆகிய நாடுகள், தங்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் குறைந்தபட்சம் 20 சதவீதத்தை சீனாவிடமிருந்து கடனாகப் பெற்றுள்ளன.

சீனாவிற்கு செலுத்த வேண்டிய கடனில் பெரும்பகுதியான கடன்கள், அதிபர் ஷி

மற்ற நாடுகளை தன் கைக்குள் வைத்திருக்க கடன் பொறிகளை பயன்படுத்துவதாகக் கூறினார்.

சீனா மற்ற நாடுகளுக்குப் பணத்தைக் கடனாகக் கொடுக்கிறது, அந்நாடுகளால் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத போது முக்கிய சொத்துக்களின் கட்டுப்பாட்டை விட்டுக்கொடுக்க

வேண்டியதாகிறது — இக்குற்றச்சாட்டை சீனா நீண்டகாலமாக மறுத்து வருகிறது.

சீனாவை விமர்சிப்பவர்களால் அடிக்கடி குறிப்பிடும் ஓர் உதாரணம் இலங்கை. பல ஆண்டுகளுக்கு முன் சீன முதலீட்டுடன் ஹம்பந்தோட்டாவில் ஒரு துறைமுகத் திட்டம் தொடங்கப்பட்டது.

சீன கடன்கள் மற்றும் சீன ஒப்பந்ததாரர்களைப் பயன்படுத்தி பில்லியன் கணக்கில் செலவழிக்கப்பட்ட திட்டம், எதார்த்தத்தில் சாத்தியமாக லாபம் ஈட்டக் கூடியது தான் என உந்தப்பட்டது என்றும், மேலும் சீனா ஒருபோதும் துறைமுகத்தின் முறையான உரிமையைப் பெறவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையின் ஒட்டுமொத்த கடனில் பெரும்பகுதி கடன் சீனாவிடமிருந்து பெறப்படவில்லை என்பதையும் சுட்டிக் காட்டுகிறது. எனவே, துறைமுகத்தில் ராணுவ ரீதியிலான அனுகூலத்தைப் பெற, சீனா தனக்கு சாதகமாக இருக்கும் சூழலைப் பயன்படுத்தியதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்று அது சுட்டிக்காட்டுகிறது.

கடந்த தசாப்த காலத்தில் இலங்கையில்



நிரூபிக்க முடியாமல் திணறி சர்ச்சையில் சிக்கியது இலங்கை. அது அந்நாட்டை பெருங்கடனில் ஆழ்த்தியது.

இறுதியாக, கடந்த 2017 ஆம் ஆண்டில், மேற்கொண்டு சீனா முதலீடு செய்வதற்கு ஈடாக, துறைமுகத்தில் 70% கட்டுப்பாட்டை சீன வணிகர்களுக்கு 99 ஆண்டு குத்தகைக்கு வழங்க இலங்கை ஒப்புக்கொண்டது.

இலங்கை

பிரிட்டனைத் தளமாகக் கொண்ட சிந்தனைக் குழுவான சாதம் ஹவுஸ், துறைமுகத் திட்டத்தைப் பற்றிய பகுப்பாய்வில், "கடன் பொறி" கருத்து பொருந்துமா என கேள்வி எழுப்பியுள்ளது. இந்த ஒப்பந்தம் உள்ளூர் அரசியல் உள்நோக்கங்களால் சீனாவின் பொருளாதார ரீதியிலான தலையீடுகள் அதிகரித்துள்ளதோ என சிறிய சந்தேகம் இருக்கிறது. மேலும் அது அப்பிராந்தியத்தில் தன் அரசியல் லட்சியங்களை முன்னேற்றப் பயன்படுத்தப்படலாம் என்கிற கவலைகள் தொடர்கின்றன.

உலகின் பிற பகுதிகளிலும் சீனா கடன் வழங்குவது சர்ச்சைக்குரிய ஒன்றாக நிரூபிக்கப்பட்டுள்ளன. கடன் ஒப்பந்தங்களின் விதிமுறைகள் முக்கிய சொத்துக்களை சீனாவுக்கு அளிக்கும் வகையில் சாதகமாக இருக்கும் என்று கூறப்பட்டது.

ஆனால் எய்ட் டேட்டா மற்றும் வேறு சில ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு செய்த நூற்றுக்கணக்கான கடன் விவகாரங்களில், ஒன்றில் கூட, கடனை செலுத்தத் தவறினால்,



கடன் வழங்கியவர்கள், ஒரு பெரிய சொத்தை உண்மையில் கைப்பற்றிய நிகழ்வு எதுவும் இல்லை.

உலகின் மிகப்பெரிய கடன் வழங்குநர் சீனா

சீனா தனது வெளிநாட்டுக் கடன் விவரங்களை வெளியிடுவதில்லை, மேலும் பெரும்பாலான சீன கடன் ஒப்பந்தங்களில், கடன் வாங்குபவர்கள், கடன் குறித்த விவரங்களை வெளியிடக் கூடாது என்கிற விதியும் சேர்க்கப்பட்டுள்ளது. சர்வதேச கடன் ஒப்பந்தங்களில் இத்தகைய ரகசியத்தன்மை பொதுவான நடைமுறை என்று அது வாதிடுகிறது.

"சர்வதேச வணிகக் கடன்களில் ரகசிய ஒப்பந்தங்கள் மிகவும் பொதுவானவை. சீனாவின் வளர்ச்சிக்கான நிதியுதவியானது அடிப்படையில் ஒரு வணிக நடவடிக்கையாகும்." என்கிறார் லண்டன் குயின் மேரி பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் லீ ஜோன்ஸ். பெரும்பாலான தொழில்மயமான நாடுகள், பாரிஸ் கிளப் என்று அழைக்கப்படும் உறுப்பினர்களின் மூலம் தங்கள் கடன் நடவடிக்கைகள் குறித்த தகவல்களைப் பகிர்ந்து கொள்கின்றன.

சீனா இந்த குழுவில் சேர்வதில்லை என முடிவு செய்தது. ஆனால் கிடைக்கக்கூடிய உலக வங்கியின் தரவைப் பயன்படுத்தி, மற்ற நாடுகளின் கடன் விவரங்களோடு ஒப்பிடுகையில் சீனாவின் கடன்களின் விரைவான வளர்ச்சியை தெளிவாகக் காணலாம். சீனா மேற்கத்திய அரசாங்கங்களை விட அதிக வட்டி விகிதத்தில் கடன் கொடுக்க முனைகிறது.

ஏறக்குறைய 4% வட்டிக்கு கடன் கொடுக்கிறது. இந்தக் கடன்கள் வணிகச் சந்தை விகிதங்கள் அளவுக்கு உள்ளன. உலக வங்கி அல்லது பிரான்ஸ் அல்லது ஜெர்மனி போன்ற தனிப்பட்ட நாடுகள் மற்றும் அமைப்புகள் வட்டி வசூலிப்பதை விட இது நான்கு மடங்கு அதிகம்.

விடவும், அதிக அளவில் கடனைத் திருப்பிச் செலுத்துவதில் தான் பங்களித்துள்ளதாகக் கூறுகிறது சீனா.

இந்தத் திட்டத்தின் கீழ் ஜி20 நாடுகள் மொத்தம் 10.3 பில்லியன் டாலர் கடன் நிவாரணமாக

சீனக் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கான காலக் கெடு 10 ஆண்டுகளுக்கும் குறைவு தான். வளரும் நாடுகளுக்கு கிடைக்கும் சலுகை விலை கடன்களுக்கு 28 ஆண்டுகள் வரை கிடைக்கின்றன. சீன அரசுக்குச் சொந்தமான கடனளிப்பவர்கள், கடனளிக்கும் நிறுவனம் அணுகக்கூடிய ஒரு வெளிநாட்டுக் கணக்கில் குறைந்தபட்ச ரொக்க இருப்பை வைத்திருக்க வேண்டும் என்கிறது.

"ஒரு கடனாளி தனது கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறினால், நீதிமன்ற செயல்முறையின் மூலம் மோசமான கடனைச் வசூலிக்காமல், இந்த கணக்கிலிருந்து பணத்தை எடுத்துக் கொள்ளலாம்." என்கிறார் எய்ட் டேட்டாவின் நிர்வாக இயக்குநர் பிராட் பார்க்ஸ்.

மேற்கத்திய நாடுகள் வழங்கும் கடன்களில் இந்த அணுகுமுறை அரிதாகவே காணப்படுகிறது. மிகப்பெரிய மற்றும் வேகமாக வளரும் பொருளாதாரங்களைக் கொண்ட நாடுகள் — பெருந்தொற்றின் தாக்கத்தை சமாளிக்க ஏழை நாடுகளுக்கு கடன் நிவாரணம் வழங்கி உதவும் திட்டத்தை ஜி20 நாடுகள் முன்னெடுத்துள்ளன. சீனாவும் அதனுடன் இணைந்துள்ளது. மேலும் அத்திட்டத்தில் பங்கேற்ற எந்தவொரு நாட்டை

வழங்கப்பட்டுள்ளதாக உலக வங்கி கூறுகிறது. உலக வங்கியிடம் நாடு வாரியாக அவ்விவரத்தைக் கேட்ட போது, தகவல்களைப் பகிர முடியாது என்று கூறியது.

ஒரு காலத்தில் அமெரிக்கா எப்படி, சர்வதேச அளவில் பல நாடுகளையும் தன் பக்கம் வளைத்து வைத்திருக்குமோ, அப்படி இன்று சீனா பல நாடுகளை நட்பு, பணம், அதிகாரம், தந்திரம் என பல வழிகளில் தன் கையில் பிடித்து வைத்திருக்கிறது. பாகிஸ்தானை நட்பு ரீதியாகவும், எதிரிக்கு எதிரி நண்பன் என்கிற கணக்கிலும் தன் நட்புக் கரத்தை நீட்டிக் கொண்டு இருக்கிறது சீனா.

பண பலம்

உலகில் சுமாராக 68 நாடுகளை, சீனா, தன் பண பலத்தால் வளைத்துப் போடும் இடத்தில், ஒரு பண வலையை விரித்து இருக்கிறது என, ஆசியா.நிக்கி பத்திரிகைச் செய்திகள் சொல்கிறது. இந்த 68 நாடுகளை எப்படி பண பலத்தால், தன் பக்கம் இழுக்கிறது அல்லது தன் கையில் வைத்திருக்கிறது? இதனால் சீனாவுக்கு என்ன பலன்? என்பதை எல்லாம் விரிவாகப் பார்ப்போம்.

பண வலை என்பது கடன் வலை பண வலை என்பது கடன் வலை உலகில் வளர்ந்து வரும் 68 நாடுகளுக்கு சீனா தாராளமாக கடன் கொடுத்து இருக்கிறதாம். அப்படி என்ன பெரிதாக கடன் கொடுத்துவிட்டது என்று கேட்டால் உலக வங்கி இந்த 68 நாடுகளுக்கு கொடுத்து இருக்கும் கடன் அளவுக்கு கொஞ்சம் குறைவாக கொடுத்து இருக்கிறார்களாம்.

உலக வங்கிக்கு சமமாக சீனா

உலக வங்கிக்கு சமமாக சீனா 2018—ம் ஆண்டு கணக்குப் படி, உலக வங்கி இந்த 68 வளரும் நாடுகளுக்கு கொடுத்திருக்கும் கடனில், பாக்கி நிலுவைத் தொகை (balance of lending), சுமாராக 103 பில்லியன் அமெரிக்க டாலராக இருக்கிறது. இதுவே சீனாவுக்கு, இந்த நாடுகள் கொடுக்க வேண்டிய பாக்கி கடன் தொகை (தீணீறீணீஸீநீமீ ஷீயீ றீமீஸீபீவீஸீரீ) சுமாராக 101 பில்லியன் அமெரிக்க டாலர் கடன் கொடுத்து இருக்கிறார்களாம்.

இந்த 68 நாடுகள், ட்ராகன் தேசத்துக்கு கொடுக்க வேண்டிய கடன் பாக்கி தொகை கடன் 4 ஆண்டுகளில் 90 % அதிகரித்து இருக்கிறது. அதாவது, சீனா இந்த 68 நாடுகளுக்கு, கடந்த 4 ஆண்டுகளில், கூடுதலாக கடன் கொடுத்து இருக்கிறது. உலக வங்கி மற்றும் சர்வதேச பன்னாட்டு நிதியத்தின் கணக்கு என்ன?

மிவிதி & உலக வங்கி உலக வங்கிக்கு, இந்த 68 நாடுகள் கொடுக்க வேண்டிய பாக்கி தொகை கடந்த 4 ஆண்டுகளில் 40 % தான் அதிகரித்து இருக்கிறதாம். சர்வதேச பன்னாட்டு நிதியத்தின் கணக்கு இதை விட குறைவு. கடந்த 4 ஆண்டுகளில் 10 % தான் அதிகரித்து இருக்கிறது. ஆக இந்த இரண்டு உலக நிதி அமைப்புகளும், 68 வளரும் நாடுகளுக்கும் அதிகம் கடன் கொடுக்கவில்லை. சரி சீனா எவ்வளவு கடன் கொடுத்து இருக்கிறது? சீனாவின் சொல் பேச்சைக் கேட்கும் அளவுக்கு அதிகம் கடன் கொடுத்து இருக்கிறார்களா என்ன?

எவ்வளவு கடன் ஜிடிபி — சீன கடன் இந்த 68 வளரும் நாடுகளில் 26 நாடுகள், தங்களின் மொத்த ஜிடிபியில் 5 %—க்கு மேலான அளவுக்கு, கடன் தொகையை சீனாவுக்குத் திருப்பிச் செலுத்த வேண்டி இருக்கிறது. 14 நாடுகள், தங்களின் மொத்த ஜிடிபியில் 10 % அளவுக்கு கடன் தொகையை சீனாவுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டி இருக்கிறதாம். டிஜிபூட்டி (Djibouti) என்கிற நாடு தன் மொத்த ஜிடிபியில் 39 % அளவுக்கு சீனாவுக்கு கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டுமாம்.

சீனாவை நம்பும் நாடுகள்

இன்று கொரோனா வைரஸ் பிரச்சனையால் பொருளாதார ரீதியாக பலத்த அடி வாங்கிக் கொண்டு இருக்கும் பல வளரும் நாடுகளும், சீனாவின் உதவியை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டு இருக்கிறார்களாம். அந்த அளவுக்கு, சீனாவின் கடன், பல நாடுகளுக்கு

அத்தியாவசியமாக மாறிவிட்டது. பழகிவிட்டது. சீனாவும் அந்த வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்கிறது.

வலையில் சிக்கித் தவிக்கும் நாடுகள், சீனாவின் வெளி உறவுக் கொள்கை மற்றும் ராஜ தந்திர நடவடிக்கைகளில் ஆதரவு கொடுக்கிறார்கள்.

வட்டி விகித கணக்கு இதில் இன்னொரு சுவாரஸ்யமான விஷயம் என்ன என்றால், உலக வங்கியை விடவோ அல்லது மிவிதி அமைப்பை விடவோ, சீனா அதிக வட்டி வசூலிக்கிறார்களாம். உலக வங்கி 1% வட்டி வசூலிக்கிறார்களாம். மிவிதி 0.6 % வட்டி வசூலிக்கிறார்களாம். ஆனால் சீனா 3.5 % வட்டி வசூலிக்கிறார்கள்.

இருப்பினும் வளரும் நாடுகள் சீனாவிடம் கடன் வாங்க என்ன காரணம்? ஏன் உலக வங்கி & மிவிதி கடன் அதிகரிக்கவில்லை .உலக வங்கி மற்றும் மிவிதி போன்ற அமைப்புகளிடம் கடன் வாங்க வேண்டும் என்றால், அந்த அமைப்புகள் சொல்லும் பல்வேறு விதிகளைப் பின்பற்ற வேண்டும். அதை கடை பிடிக்கவில்லை என்றால் அடுத்தடுத்த கடன் தவணைகள் ரத்தாகலாம். ஆனால் சீனாவில் இருந்து வரும் கடன்களில் எந்த விதிகளும் இருக்காதாம்.

சீனாவுக்கு என்ன லாபம்

சுமாராக 101 பில்லியன் டாலர் கடனை, இன்னும் இந்த வளரும் நாடுகள், சீனாவுக்கு கொடுக்க வேண்டி இருக்கிறது என்று பார்த்தோம். இதனால் சீனா என்ன பலன் அடைந்தது..? இவ்வளவு கோடி கணக்கில் கொட்டிக் கொடுக்கும் இந்த நாடுகள் சீனாவுக்கு திருப்பிச் செய்வது என்ன?

சீனாவுக்கு கிடைக்கும் பலன்கள் சீனாவின் கடன் சொல்லப் போனால் ஆதரவு கொடுக்க வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகிறார்கள். இதை எல்லாம் தியரியாக சொல்லலாம், உண்மையில் நடந்து இருக்கிறதா? நிஜ எடுத்துக்காட்டு ஹாங்காங் தேசிய பாதுகாப்புச் சட்ட பிரச்சனைகளை நாம் அறிவோம். இந்த ஹாங்காங் பிரச்சனை குறித்து United Nations Commission on Human Rights நடத்திய கூட்டத்தில், சீனாவிடம் கடன் வாங்கி இருக்கும் 68 நாடுகளில், 14 நாடுகள், ஹாங்காங் பிரச்சனையில் சீனாவுக்கு தங்கள் ஆதரவைத் தெரிவித்தார்களாம்.

ஆக சீனாவின் கடன், அவர்களுக்கு வட்டியை சம்பாதித்துக் கொடுப்பதோடு மட்டும் அல்லாமல் சர்வதேச அரங்கில் பல நாட்டின் ஆதரவுகளையும் சம்பாதித்துக் கொடுக்கிறது.

சீனாவின் சூட்சும தந்திரம்

இப்படி, சீனா தன் பண வலையை கடன் வலையாக விரித்து, பல நாடுகளை அதில் சிக்க வைத்துக் கொண்டு இருக்கிறது. மேற்கத்திய நாடுகள் செய்வதறியாமல் இருக்கிறார்கள். போகிற போக்கைப் பார்த்தால், சீனா இந்த கடன் வலையை வைத்தே உலகில் பாதி நாடுகளை தன் கைக்குள் கொண்டு வந்துவிடும் போலிருக்கிறதே! இனியாவது உலக வங்கியும், பன்னாட்டு நிதியமும் விழித்துக் கொள்ள வேண்டும்.

கருத்துப் ப(ர)டம்

நன்றி : தினமலர்



சொல்றாங்க...

"அனைத்து மாநிலங்களிலும் உள்ள ஒடுக்கப்பட்ட சமூகங்களின் பிரதிநிதிகள், தலைவர்களை இணைத்து அகில இந்திய சமூக நீதி சம்மேளனத்தை உருவாக்குவோம்!"

மு.க.ஸ்டாலின்

(ஊரெங்கும் திண்ணை கட்டி.. வெறும் பேச்சு வெள்ளை வேட்டி..)

நான் முஸ்லிம்தான்! ட்விட்டர் பக்கத்தில் 'நக்கத்கான்' எனப் பெயர் சேர்த்ததற்கு யாருடைய மிரட்டலோ அச்சுறுத்தலோ காரணம் இல்லை!"

குஷ்பு

(அம்மணி எப்போதுமே அதிரடிதான்! சரவெடிதான்!)

"ஆட்சிப் பணி விதி திருத்தம் செய்யும் முடிவை மத்திய அரசு கைவிட வேண்டும்!"

கமல்ஹாசன்

(அடிச்சி ஆடறாங்க ஆளவந்தார்!... அடிச்சு விடுறார் ஆளவந்தார்!...)

"தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களுக்கு அரசு ஒத்துழைப்பு தர வேண்டும்!"

கே.அண்ணாமலை

(எல்லா வகையிலும் ஒத்துழைத்தது அந்தக் காலம்!.... எதுக்கும் ஒத்துழைக்காதது இந்தக்காலம்!....)

சொல்றாங்க...

விலக்குமா

உத்தர பிரதேச தேர்தல்:

நரேந்திர மோதி, யோகியின் பாஜகவில் அதிகரிக்கும் அதிருப்தி தலைவர்கள் – மவுசு குறைகிறதா?

சுவாமி பிரசாத் மௌரியா ராஜிநாமா செய்தவுடன், அகிலேஷ் அவருடன் எடுத்துக் கொண்ட புகைப்படத்தை தனது சமூக வலைதளங்களில் வெளியிட்டார். மௌரியா இன்னும் அதிகாரபூர்வமாக சமாஜ்வாதி கட்சியில் சேரவில்லை.

48 மணி நேரத்தில் உத்தர பிரதேச மாநிலத்தில் யோகி அரசின் இரண்டு பெரிய தலைவர்கள் ராஜிநாமா செய்துள்ளனர். முதலில் சுவாமி பிரசாத் மௌரியா, பிறகு தாரா சிங் சௌஹான். விவசாயிகள், தாழ்த்தப்பட்டோர், மற்றும் பிற்படுத்தப்பட்டோரை அரசு புறக்கணித்து வருவதாக இரு தலைவர்களும் தங்களது ராஜிநாமாவில் தெரிவித்தனர்.

அதேபோல,உத்தர பிரதேசத்தில் பாரதிய ஜனதா கட்சியின் ஷிகோஹாபாத் தொகுதி எம்எல்ஏ முகேஷ் வர்மாவும் கட்சியில் இருந்து விலகியுள்ளார். சுவாமி பிரசாத் மௌரியாவே தனது தலைவர் என்றும் அவர் எங்கு சென்றாலும் அவருடன் தாமும் செல்லப்போவதாக, பதவி விலகிய முகேஷ் வர்மா தெரிவித்திருக்கிறார்.

இவர்கள் தர, பாஜகவில் இருந்து வெளியேறும் அல்லது வெளியேறத் தயாராகும் பல தலைவர்களின் பெயர்கள் ஊடகங்களிலும், சமூக வலைதளங்களிலும், அரசியல் வட்டாரங்களிலும் அடிபடுகின்றன.

என்ன காரணம்?

ஷாஜஹான்பூரில் உள்ள தில்ஹர் தொகுதியின்

வெறியை?

தில்நவாஸ் பாஷா

எம்எல்ஏ ரோஷன்லால் வர்மா, பில்ஹோர் எம்எல்ஏ பகவதி பிரசாத் மற்றும் திந்த்வாரி எம்எல்ஏ பிரஜேஷ் பிரஜாபதி ஆகியோர் ராஜினாமா செய்துள்ளதாகவும் செய்திகள் வந்துள்ளன. தலித்துகள், பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் புறக்கணிக்கப்படுவதாகவே இந்தத் தலைவர்களும் தங்கள் ராஜினாமா கடிதத்தில் குற்றம்சாட்டியுள்ளனர். அடுத்த சில நாட்களில் பாஜக எம்எல்ஏக்கள் மற்றும் அமைச்சர்கள்



பலர் சமாஜ்வாதி கட்சியில் இணைய உள்ளதாக எதிர்கட்சியான சமாஜ்வாதி கட்சி வட்டாரங்கள் சமூக வலைதளங்களில் எழுதி செய்தியாளர்களுக்கு தகவல்களைக் கசிய விடுகின்றன.

இந்நிலையில் "பாஜகவில் இருந்து விலக விரும்பும் பல தலைவர்களுடன் சமாஜ்வாதி கட்சி தொடர்பில் உள்ளது. இவர்கள் அனைவரையும் நாங்கள் வரவேற்கிறோம். வரும் நாட்களில் மேலும் பலர் பாஜகவை விட்டு சமாஜ்வாதி கட்சியில் சேருவார்கள்," என்று சமாஜ்வாதி கட்சியின் செய்தி தொடர்பாளர் அப்துல் ஹஃபீஸ் காந்தி குறிப்பிட்டுள்ளதும் கவனம் பெறுகிறது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில், "பாஜகவில் இருந்து தலைவர்கள் வெளியேறும் நடவடிக்கை தொடருமா?", "இது குறித்து பாஜக கவலை கொண்டுள்ளதா?" என்பது பற்றிய ஊகங்கள் அரசியல் களத்தில் சூடுபிடித்துள்ளன.

கேசவ் பிரசாத் மௌரியா

பாஜகவில் இருந்து ராஜினாமா செய்த சுவாமி பிரசாத் மௌரியா ஒரு அனுபவமிக்க அரசியல்வாதி. 2017 தேர்தலுக்கு முன்பு பகுஜன் சமாஜ் கட்சியில் இருந்து விலகி பாஜகவில்

இணைந்து அமைச்சரானார். இவர் யாதவர்கள் அல்லாத பிற பிற்படுத்தப்பட்ட சமூக வாக்குகளை ஈர்க்கும் செல்வாக்கு மிக்கவராக கருதப்படுகிறார்.

இதற்கு முன்பு பகுஜன் சமாஜ் கட்சியை விட்டு வெளியேறியபோது, தமது கட்சிக்கு மௌரியா மிகப்பெரிய நன்மை செய்துவிட்டார் என்று மாயாவதி கூறியிருந்தார்.

தற்போது உருவாகி வரும் சூழ்நிலையும், கட்சியை விட்டு தலைவர்கள் வெளியேறுவதும் ஓபிசி தலைவர்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

அவர்கள் பா.ஜ.க மற்றும் யோகி ஆதித்யநாத்தை விட்டுச்செல்கிறார்கள். பாஜகவின் வகுப்புவாத அரசியல் தோல்வியடைந்து வருகிறது



மௌரியா பாஜகவுக்கு வந்தபோது பல தலைவர்களை தம்முடன் அழைத்து வந்தார். இப்போது அவர் பாஜகவை விட்டுச்சென்றபோதும், பல தலைவர்களை தன்னுடன் அழைத்து செல்வார் என்று தோன்றுகிறது.

இதன் அடிப்படையில், தங்கள் சாதிக்கு முக்கியத்துவம் தரப்படுவதில்லை என்ற உணர்வு கட்சியில் உள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்புத் தலைவர்களுக்கு ஏற்படுகிறது என்பதன் தெளிவான அறிகுறிதான் மௌரியா மற்றும் இதர தலைவர்கள் பாஜகவை விட்டு வெளியேறுவது என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இது குறித்து மூத்த பத்திரிக்கையாளர் ஷரத் பிரதான் பேசியபோது "பாஜக உயர்சாதி (ஆதிக்க சாதி) கட்சியாக மாறியிருப்பதை இவர்கள் உணர்ந்து கொண்டுள்ளனர் என்பதை மௌரியா மற்றும் பிற தலைவர்களின் ராஜிநாமாக்கள் காட்டுகின்றன. குறிப்பாக கடந்த ஐந்தாண்டு ஆட்சியில் யோகி ஆதித்யநாத், தாக்கூர் வகுப்பினருக்கு முக்கியத்துவம் கொடுத்தது, இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினரிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

என்றே தோன்றுகிறது" என்று ஷரத் பிரதான் குறிப்பிட்டார். மறுபுறம், பாஜகவில் பீதி எதுவும் இல்லை என்றும் கட்சியின் நிலை முன்பை விட வலுப்பெற்றுள்ளதாகவும் பா.ஜ.க.கூறுகிறது.

"பாஜகவில் யாரும் பீதி அடையவில்லை. புதன்கிழமை இரண்டு எம்எல்ஏக்கள் பாஜகவில் இணைந்துள்ளனர். காங்கிரஸில் இருந்து நரேஷ் சைனியும், சமாஜ்வாதி கட்சியில் இருந்து முலாயம் சிங்கின் சம்மந்தி ஹரிஓம் யாதவும் கட்சியில் இணைந்துள்ளனர். ஹரி ஓம் யாதவ், ஃபிரோஸாபாதின், சிர்சாகஞ்ச் எம்எல்ஏ.ஆவார். சமாஜ்வாதியின் கோட்டையிலிருந்து எம்எல்ஏக்கள் பா.ஜ.க.விற்குள் வருகின்றனர். பாஜகவில் ஒரு வித பீதி நிலவுகிறது என்று கூறுவது முற்றிலும் தவறு," என்று அக்கட்சியின் செய்தித் தொடர்பாளர் ராகேஷ் திரிபாதி குறிப்பிட்டார்.

அதாவது, கட்சியை விட்டு வெளியேறும் தலைவர்களை விட கட்சிக்குள் வரும் தலைவர்களின் எண்ணிக்கை அதிகம் என்று பாஜக கூறுகிறது. "ஒரு மாதத்துக்குள் காங்கிரஸ், பகுஜன் சமாஜ், சமாஜ்வாதி ஆகிய கட்சிகளின் பல எம்.எல்.ஏ.க்களை பா.ஜ.க சேர்த்துள்ளது.

VARSHA™

Ready to Cook

Made with Quality Natural Products

Idli / Dosa Wet Mix

ఇడ్లీ దోస పిండి

இட்லி / தோசை மாவு

ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು

ഇഡ്ഡലി / ദോശ മാവ്

100% Pure Vegetarian

ઈડલી ડોસા નું ખીરું

इडली/ दोसा आटा

மக்களின் பேராதரவு ,சுத்தமான இமேஜ் உள்ள தலைவர்கள் கட்சியை நோக்கி வருகிறார்கள். எங்கள் கட்சியில் சேர விரும்பும் பல தலைவர்களின் விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன. நாங்கள் அவற்றை பரிசீலனை செய்து வருகிறோம். மக்கள் ஆதரவு கொண்ட தலைவர்களை கட்சி தொடர்ந்து சேர்த்து வருகிறது," என்று திரிபாதி கூறினார். பாஜகவில் இருந்து வெளியேறும் தலைவர்கள் சமாஜ்வாதி பக்கம் செல்கின்றனர்.

"கடந்த 5 ஆண்டு ஆட்சிக் காலத்தைப் பார்த்தால், உத்தரப்பிரதேசத்தில் யோகி ஆதித்யநாத் தன்னை முதன்மைப்படுத்திக் கொள்ள முயன்றார். உத்தர பிரதேசத்தில் யோகி தான் எல்லாம் என்று மீண்டும் மீண்டும் செய்தி கொடுக்கப்பட்டு வருகிறது. யோகி தனது கட்சி தலைவர்களைக்கூட எளிதில் சந்திக்கமாட்டார் என லக்னௌ அரசியல் வட்டாரத்தில் செய்தி அடிபடுகிறது. கட்சியை விட்டுச்



"அவர்களை தங்களுடைய கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ் மனதார வரவேற்கிறார். சமூக நீதிக்காக போராடும் எந்த ஒரு தலைவரும், நபரும் கட்சியில் அங்கம் வகிக்க வேண்டும் என்பதே கட்சியின் முதல் முயற்சி. பா.ஜ.க, மீது கோபப்பட்டு வெளியேறும் தலைவர்களை சமாஜ்வாதி கட்சி மனமார வரவேற்கிறது. இதனால் சமூக நீதிக்கான போராட்டம் வலுப்பெறும்," என்று அக்கட்சியின் செய்தி தொடர்பாளர் அப்துல் ஹஃபீஸ் காந்தி தெரிவித்தார்.

உத்தரபிரதேசத்தில் முதல்வர் யோகி ஆதித்யநாத் தனது ஐந்தாண்டு ஆட்சியில் பாஜகவுடன் கூடவே தனக்கும் ஒரு சமமான பிம்பத்தை உருவாக்கியுள்ளார். மாநில அரசு, பாஜக அரசு என்பதைவிட யோகி அரசு என்றே பெரும்பாலும் அழைக்கப்படுகிறது. இப்படிப்பட்ட நிலையில், கட்சியை விட்டு வெளியேறும் தலைவர்கள், குறிப்பாக முதல்வர் யோகி ஆதித்யநாத் மீது கோபம் கொண்டுள்ளார்களா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

இதில் சந்தேகமேயில்லை என்று ஷரத் பிரதான் கூறுகிறார்.

செல்பவர்களும் இதை உணர்ந்திருக்கக்கூடும். யோகி ஆதித்யநாத்தை சந்திப்பது எளிதல்ல என அதிகாரப்பூர்வமற்ற முறையில் பல அமைச்சர்கள் புகார் கூறுகின்றனர்,"என்கிறார் அவர்.

உத்தர பிரதேச தேர்தல்

இது யோகி ஆதித்யநாத்தின் பிம்பத்தை பாதிக்குமா? என கேட்டதற்கு, "யோகி ஆதித்யநாத் தனக்கென ஒரு பெரிய பிம்பத்தை உருவாக்கி இருக்கலாம், ஆனால் உண்மை என்னவெனில், பாஜகவில் அங்கம் வகித்ததன் மூலம் மட்டுமே அவரால் முதல்வராக முடிந்தது.

கட்சியை விட தான் பெரியவர் என்று யோகி ஆதித்யநாத் நினைத்தால், இது முதிர்ச்சியற்ற சிந்தனை. கட்சியை விட்டு வெளியேறும் தலைவர்கள் யோகி ஆதித்யநாத் மீது கோபத்தில் இருந்தாலும், இதன் தாக்கத்தை பா.ஜ.க.சந்திக்க நேர்ந்துள்ளது," என்று ஷரத் பிரதான் கூறினார்.

அமைச்சர்கன் ராஜினாமாவால் முதல்வர் யோகி ஆதித்யநாத்தின் செல்வாக்கு பாதிக்கப்படும் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இந்தப் படத்தை எதிர்க்கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ் ட்வீட்

செய்துள்ளார்.கட்சியில் இருந்து சுவாமி பிரசாத் மௌரியா ராஜினாமா செய்ததை அடுத்து, அந்த முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு கேசவ் பிரசாத் மௌரியா வேண்டுகோள் விடுத்துள்ளார். அவர் திரும்பி வர விரும்பினால் அவரை மீண்டும் வரவேற்க பாஜக தயாராக உள்ளது.

"மாநிலத்தில் அமைச்சராக சுவாமி பிரசாத் மௌரியா சிறப்பாக பணியாற்றியிருக்கிறார் என்று பாஜக நம்புகிறது. கட்சியை விட்டு வெளியே சென்ற பிறகும் இந்தப்பணியை தனது சாதனையாக அவர் கூறிக்கொள்கிறார். கட்சியுடன் அவர் பேச விரும்பினால் அது வரவேற்கப்படுகிறது. அவர் கட்சியில் நீடிக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம், ஆனால் அவர் வேறு பாதையைத் தேர்ந்தெடுத்தால், அது அவரது விருப்பம்," என்கிறார் திரிபாதி.

"பாஜக என்பது குடும்ப கட்சியல்ல, கட்சியே குடும்பம். குடும்பத்திற்குள் ஏதேனும் மனக்கசப்பு அல்லது பிளவு ஏற்பட்டால், கட்சியினருடன் வந்து , தொடர்பு கொண்டு, பிரச்னைகளை தீர்க்க முயற்சி செய்யவேண்டும். கட்சிக்குள் அமர்ந்துதான் தீர்வு காண வேண்டும். இருந்தாலும், கட்சியை விட்டு வெளியேறும் அளவுக்கு ஒருவரின் மனக்கசப்பு இருந்தால், அவர் தன் வழியை தேர்வு செய்யும் சுதந்திரம் அவருக்கு உள்ளது. யாரையும் கட்டிப்போட முடியாது. கட்சி, பேச்சுவார்த்தையில் நம்பிக்கை கொண்டுள்ளது. ஏதாவது பிரச்னை என்றால் கட்சியை தொடர்புகொண்டு பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்" என்றார் அவர்.

சுவாரஸ்யமாகும் அரசியல் களம்

சுவாமி பிரசாத் மௌரியா, பிற அமைச்சர்கள் மற்றும் எம்.எல்.ஏ.க்கள் ராஜினாமா காரணமாக உத்திர பிரதேச அரசியலில் சூடு பிடித்துள்ளது. சிக்கலை சீர்செய்யும் பணியில் பாஜக ஈடுபட்டுள்ளது. மறுபுறம், பாஜக பலவீனமடைந்து வருவதாகக்கூறி சமாஜ்வாதி கட்சி இந்த சூழ்நிலையை தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்கிறது. கண்ணுக்குப் புலப்படுவதை விட அதிகமான நிகழ்வுகள் திரைக்குப் பின்னால் நடக்கின்றன.

"கடந்த இரண்டு நாட்களாக நடந்த சம்பவங்கள் தேர்தலை சுவாரசியமாக்கியுள்ளன. மூத்த பாஜக தலைவர்கள், அமைச்சர்கள் வெளியேறியதால், தேர்தலில் பாஜக பலவீனமாக இருக்கலாம் என்ற சிமிஞ்சை சென்றுள்ளது. உண்மை என்னவாக இருந்தாலும் சரி, இதுபோன்ற சிமிஞ்சைகள் தேர்தலில் முக்கியமானவை. அவை தேர்தல் மீது தாக்கத்தை ஏற்படுத்தும்," என்று இதுகுறித்து ஷரத் பிரதான் குறிப்பிட்டார்.

கட்சிக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பை எப்படி சரிசெய்வது என்பதுதான் பாஜகவின் முன் உள்ள சவால். ஆனால் பாஜகவால் இதை செய்ய முடியுமா என்பதுதான் இப்போதைய கேள்வி.

நின்றறுக்கும்

”இலங்கையில் தமிழ், சிங்களத்துக்கு குறையும் மவுசு – சீன மொழி ஆதிக்கம் ஓங்குகிறதா?”

இலங்கையில் சீன வெளி விவகார அமைச்சர் வாங் யி மேற்கொண்ட அரசுமுறை பயணத்தின்போது அவர் நாட்டின் அதிபர், பிரதமருடன் பங்கேற்ற அரசு நிகழ்ச்சியில் தேசிய ஆட்சி மொழிகளான சிங்களம், தமிழ் ஆகியவற்றில் எந்த குறிப்போ விளம்பங்களோ இடம்பெறாதது பலரது புருவங்களையும் உயர்த்தியிருக்கிறது. இதன் மூலம் இலங்கையில் சீன மொழியின் ஆதிக்கம் இலங்கை மண்ணில் ஓங்குகிறதா என்றும் சிலர் கேள்வி எழுப்பியுள்ளனர்.

சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யி, இலங்கைக்கு ஒரு நாள் விஜயத்தை மேற்கொண்டு, பல்வேறு சந்திப்புக்களை நடத்திய பிறகு உடனடியாக அவரது தாயகத்துக்கு திரும்பியிருக்கிறார்.

இந்த நிலையில், சீனாவின் முதலீட்டில் நிர்மாணிக்கப்பட்டு வரும் கொழும்பு துறைமுக நகரின் சில திட்டங்களை சீன வெளிவிவகார அமைச்சர் ஜனவரி 9 அன்று திறந்து வைத்தார். உடற்பயிற்சி நடைபாதை மற்றும் சிறு படகுப் பிரிவு ஆகியன சீன வெளிவிவகார அமைச்சரினால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஸ, வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஸ உள்ளிட்ட மேலும் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த உடற்பயிற்சி நடைபாதை மற்றும் சிறு படகு பிரிவு ஆகியன திறந்து வைக்கும் நிகழ்வின்

வினை!

ரஞ்சன் அருண் பிரசாத்

போது, காட்சிப்படுத்தப்பட்டிருந்த பதாகை குறித்து தற்போது அதிகளவில் பேசப்படுகின்றது. இவ்வாறு காட்சிப்படுத்தப்பட்டிருந்த பதாகையில், ஆங்கிலம் மற்றும் சீன மொழி மாத்திரம் அச்சிடப்பட்டிருந்தன.

இலங்கையின் அரச கரும மொழியாக அரசியலமைப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள சிங்களம் மற்றும் தமிழ் ஆகியன எந்தவொரு இடத்திலும் காட்சிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

அரச நிகழ்வொன்றில், அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அரச கரும மொழிகளுக்கு முன்னுரிமை வழங்காது, அரசியலமைப்பில் இல்லாத ஒரு மொழிக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளமை பாரிய சர்ச்சைக்குரிய விடயம் என அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இந்த சர்ச்சை தொடர்பில் முன்னாள்

அரச கருமமொழிகள் அமைச்சரும், இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், தனது டுவிட்டர் தளத்தில் பதிவொன்றை வெளியிட்டுள்ளார்.

''எங்கே எங்கள் இரண்டு ஆட்சி தேசிய மொழிகள்? அல்லது துறைமுக நகர் முழுமையாக சீனாவின் சொத்தா? எமது 65 நட்புறவை இப்படித்தான் கொண்டாடுவதா? யாருக்கு பொறுப்பு, அக்கறை..? ஒருவருக்கும் வெட்கமில்லை..! தேசத்திடம் மன்னிப்பு கோருங்கள்..!" என மனோ கணேசன் தனது டுவிட்டர் பதில் கூறியுள்ளார்.

கொழும்பிலுள்ள சீன தூதரகம், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஸ மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஸ ஆகியோரை நோக்கி, இந்த பதிவை மனோ கணேசன் வெளியிட்டுள்ளார்.

இந்த நிலையில், கொழும்பிலுள்ள சீன தூதரகம், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ ஆகியோரே, தேசத்திடம் மன்னிப்பு கோர வேண்டும் என மனோ கணேசன் கூறினார். இலங்கையில் தமிழ் மொழி புறக்கணிப்பானது தொடர்ச்சியாகவே முடிவின்றி இடம்பெறும் ஒன்றாக காணப்படுகின்றது.

அரசியலமைப்பில் தமிழ் மொழி கட்டாயப்படுத்தப்பட்டுள்ள போதிலும், அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், வீதி சமிக்ஞைகள், பெயர் பலகைகள் என

அனைத்து இடங்களிலும் தமிழ் மொழி புறக்கணிக்கப்படுகின்றது.

அவ்வாறு தமிழ் மொழி காட்சிப்படுத்தப்பட்டிருந்தாலும், அநேகமான இடங்களில் அவற்றில் நிச்சயம் தமிழ் பிழைகள் இருப்பதை கவனிக்க முடிகின்றது. இலங்கையில் சீனாவினால் முன்னெடுக்கப்படும் திட்டங்களில் தமிழ் மொழி கடந்த காலங்களிலும் புறக்கணிக்கப்பட்டிருந்தது.



சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகள் காட்சிப்படுத்தப்பட வேண்டும் என கூறப்பட்டுள்ள போதிலும், தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டு, அந்த இடத்திற்கு சீன மொழி உள்வாங்கப்பட்ட சம்பவங்களும் கடந்த காலங்களில் பதிவாகியிருந்தன.

சீனாவினால் நிர்மாணிக்கப்படும் கொழும்பு துறைமுக நகர் மற்றும் சீனாவின் உதவியில் சட்ட மாஅதிபர் திணைக்களத்தின் நிர்மாணிக்கப்பட்ட பெயர் பலகைகளில் சீன மொழி உள்வாங்கப்பட்டு, தமிழ் மொழி கடந்த காலங்களில் புறக்கணிக்கப்பட்டிருந்தன. சட்டத்தை நடைமுறைப்படுத்தும் ஒரு உயரிய இடத்திலேயே, தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டமை குறித்து, எழுந்த சர்ச்சையை அடுத்து, அந்த பெயர் பலகை பின்னர் மாற்றப்பட்டது.



அநுராதபுரத்தில் கடந்த அக்டோபர் மாதம் 10ஆம் தேதி ஜனாதிபதியினால் திறந்து வைக்கப்பட்ட சாலியபுர கஜபா படையணி கிரிக்கெட் மைதானத்தின் பெயர் பலகையிலும் தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டிருந்தது.

நாட்டின் முதல் பிரஜையின் பெயரில் உருவாக்கப்பட்ட மைதானத்திலேயே, தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டமையும், அன்று பேசுபொருளாக அமைந்திருந்தது.

இலங்கையில் படிப்படியாக தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டு, சீன மொழி உள்வாங்கப்பட்டு வந்த நிலையில், தற்போது சிங்கள மொழியும் புறக்கணிக்கப்பட்டு முழுமையாகவே சீன மொழியின் ஆதிக்கம் உள்வாங்கப்பட்டுள்ளது.

அரச நிகழ்வொன்றில் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகள் புறக்கணிக்கப்பட்டிருக்குமானால், அதனைச் சரி செய்ய வேண்டும். இவ்வாறான நிகழ்வுகளில் கட்டாயம் அரச கருமமொழிகள் உள்ளடக்கப்பட வேண்டும்.

தமிழே

மொழிய மொழிய வளரும் மொழி

ஒரு சொல், ஒற்றைச் சொல் மட்டுமல்ல. ஓராயிரம் சொற்களை விளைவிக்க வல்ல நெல்மணி ஒத்தது. களஞ்சியத்தில் வைத்துப் பாதுகாக்கப்பட்டு, களத்தில் விதைக்கப்படும் ஒரு தானிய மணி, உரிய முறையில் விளைந்து, ஓராயிரம் தானிய மணிகளை எவ்வாறு உருவாக்கித் தருமோ, அப்படிப்பட்டதுதான், நாம் பயன்படுத்தும் ஒவ்வொரு சொல்லும்.

நெல்மணிகளை மண்ணில் விதைப்பதுபோல, சொல்மணிகளை மனங்களில் விதைக்க வேண்டும். அதற்கேற்ற கழனிகள் நிகர்த்தவை, மழலைகள் ஆகிய பிள்ளைகள். அவர்கள் மனங்களில், தானே விழுந்து முளைப்பவையும் உண்டு. அவை கவையாகிக் கொம்பாகிப் பயன்தரும் பழமரங்களாகப் பரிணமிக்கும் ஆற்றல் உடையவை; சுவையாகிப் பின்னர் கேட்போர்க்குச் சுவைக்கத் தருகிற தேன்நிறை இசையாக மலர்கிற அழகும் உடையவை; மனம் நிறைக்கும் மணமும் தருபவை.

பொருள் அறிந்தோ அறியாமலோ முதன்முதலில் தன் செவியில் விழுந்த சொல்லைப் பலபட நாவசைத்துச் சொல்லிப் பார்க்கும் மழலை, அதற்கு இனமான எதுகைகளையும் மோனைகளையும் இணைத்துச் சொல்லும்; இணைச் சொற்களையும் எதிர்ச்சொற்களையும் தானே உருவாக்கிக் கொள்ளும். “வைக்காதே’ என்று கட்டளையிடும் சொல்லுக்கு எதிராக, “நான் அப்படித்தான் வைப்பேன்’ என்று உறுதிபட மொழிய நினைக்கும் குழந்தை, “வைக்கேன்’ என்பதுண்டு. “கிடையாது’ என்பதற்கு மழலை மொழியின் எதிர்ச்சொல், “கிடையும்‘.

கொஞ்சம் நேரம் ஒதுக்கி, அவரவர் தத்தம் குழந்தைகளிடம் கொஞ்சிப்பார்த்தால், இப்படிப் புதிய புதிய சொற்களைச் செவிமடுக்கலாம். அவை, அவரவர்க்கே உரிய குரல்களில் இசையொழுங்கோடு பிறப்பதையும் கேட்டு அனுபவிக்கலாம்.

ஒரு சொல்லை, எல்லாக் குழந்தைகளும் ஒரே மாதிரி சொல்வது இல்லை. ஒவ்வொன்றுக்கும்

உலகத்தில் ஏழு அதிசயங்கள் உள்ளது என்று சொல்கிறார்கள்... எனக்கு ஒரே அதிசயம் என் தமிழ் மொழி மட்டுமே!

கிருங்கை சேதுபதி

சுருதி பேதம் உண்டு. அவை அபசுருதியாகாமல் சுபசுருதியாக மலர்வதைக் கேட்பது சுகம். பத்துக் குழந்தைகளைப் பக்கத்தில் வைத்துப் பாடம் சொல்லிக்கொடுக்கிறபோது இந்தச் சுகத்தை நான் மிகமிக அனுபவித்து மகிழ்ந்திருக்கிறேன். அப்போது, எனக்குள் ஆயிரம் சிந்தனைப் பூக்களைச் செந்தேன் சுவையுடன் மலர்த்தித் தந்தது, இந்தத் திருக்குறள்.

குழல் இனிது யாழ் இனிது என்பதம் மக்கள்
மழலைச் சொற் கேளாதவர்

குழலும் யாழும் கருவிகள். அவை உயிரற்றவை. அவற்றுக்கு உயிரளிப்பது வாசிப்பவர்களின் உணர்வு. முன்னதாய்ச் சொல்லப்படும் கருவியை முத்தமிட்டு முத்தமிட்டு உயிர்மூச்சை உட் செலுத்தினால் உண்டாவது இசை. குழல் நமது ஆதிக் கருவி. புல் இனத்து மூங்கிலை வண்டு துளைத்துவிட, இளம் காற்று உள்புகுந்து முன்மொழியத் தோன்றிய இசையைக் கண்டு எடுத்த முதற் கலைஞன் யாரோ, அவன்தான் புல்லாங்குழலை இயற்கையிடமிருந்து பெற்றிருக்க

வேண்டும். அது புல் ஆம் குழல். அசையும் மூங்கிலில் துளைக்கப்பட்டு விளங்கும் துளைவழியாக உள் சென்று வெளிவந்த கோடையாகிய மேற்காற்று குழல் இசையைக் கொடுக்கின்றது. இது இயற்கை விளைத்த இசைக்கருவி. இதை, அகநானூற்றுப் பாடல் ஆக்கி இசைக்கிறார் கபிலர்.

ஆடமைக்குயின்ற அவிர்துளை மருங்கின்
கோடை அவ்வளி குழல் இசையாக (அகம்—82)

கண்டு, எடுத்துக் காலகாலத்திற்கும் இசைக்கிற கருவியாய் ஆக்கிக் கொடுத்தவன் இறை நிகர்த்தவன். மலை சார்ந்த குறிஞ்சி நிலத்தவனுக்கும், காடுஉடைய முல்லை நிலத்தவனுக்கும் சொந்தமானது குழல். குழல் உடைய முருகனைக் குழலன் என்று "திருமுருகாற்றுப்படை' குறிக்கிறது. மாயவனாகிய கண்ணனுக்கு இசைந்த கருவியாய்க் குழலைக் கொடுத்தவை, நமது இலக்கியங்கள். இதற்கு மூச்சுக் காற்றே முதல். முத்தமிடும் குழந்தை, இரகசியமாகச் செவிக்கு அருகில் செந்தேன் சொரியச் சொல்லும் அனுபவத்தை, இந்த இசையோடு ஒப்பிட்டுப் பார்த்து உணரலாம். அப்போது அது மொழியும் உறவுச் சொல், உயிர்ச்சொல்லாய்ப் பரிணமிக்கும் அற்புதம், எழுதி மாளாது.

அடுத்ததாய்ச் சொல்லப்படும் கருவி யாழ். நரம்புகளால் யா(ஆ)க்கப்பட்டமையால், இது யாழ். நரம்புக்கருவிகளுக்கெல்லாம் ஆதிக் கருவி இது.வேட்டைக்குப் பயன்படுத்திய வில்லையே யாழாகப் பயன்படுத்தியவனின் உள்ளத்து இசைதான் இதன் முதல் மெல்லிசையாக ஒலித்திருக்க வேண்டும். வில்யாழில் இருந்துதான் விதவிதமான யாழ்கள் தோற்றம் கொண்டன. இதனை, ஆரத் தழுவி அணைத்து மெல்விரல் கொண்டு மீட்டுவதால் உருவாவது நல்லிசை. ஓடிவந்து தோள் தழுவி இறுக அணைத்துக் கொள்ளும் குழந்தையை மடியில் கிடத்திய பிறகு, அது சொல்லத் தொடங்கும் அனுபவங்களைச் செவிமடுத்தால் அதனைவிட அதிசய இராகம் வேறு ஏது?

இந்த மழலை அவரவர் தாம் பெற்ற சொந்த மழலையாகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை. சொந்தம் என்று சொல்லிக் கொள்ளாமலேயே பந்தமாகிவிடுகிற பாசத்தால் உருவாகிற தன்மை உடையவை. தாய் மாமனை விடவும் தாங்கிக் கொள்கிற வாடகைக்கு வந்து குடியிருக்கும் புதுமாமன் குழந்தையின் நேசத்துக்கு உரியவன். தாய்ச்சொல்லைக் கூடத் தவிர்த்துவிடும் குழந்தை, அது பயிலும் வகுப்பு "மிஸ்' சொல்லை, "மிஸ்' பண்ணுவதே இல்லை.

நாவொடு நவிலா நகைபடு
தீம் சொல்,
யாவரும் விழையும் பொலந்தொடிப் புதல்வனை,
(அகநானூறு: மருதம்: 16)

வாரியணைத்த பெண்ணொருத்தியைப் பார்த்து, "நீயும் தாயை இவற்கு' எனக் கூறிய மருதநிலத்தாய் சங்க இலக்கியத்தில் இன்னும் வாழ்கிறாள்.

இப்போதிருக்கும் அவசர யுகத்தில் பெற்ற பிள்ளைகளைக் கொஞ்சும் நேரம் பெற்றோர்க்கு வாய்ப்பதில்லை. தத்தம் பிள்ளைகளைக் கொஞ் சமுடியாத குறையைப் பேரக்குழந்தைகளைக் கொண்டு தீர்த்துக் கொள்கிறார்கள் பெரியவர்கள். அதுவும் இந்த பொதுமுடக்கக் காலத்தில், கேட்டு மகிழ்ந்த மழலைச் சொற்கள் மிகமிக அதிகம். திட்டப் பயன்படுத்திய சொற்களைக் கூட, திகட்டாத அமுதமாகத் திருப்பி வழங்கிய குழந்தைகள் பலர். இந்தப் பின்புலத்தோடு திருக்குறளை இணைத்துப் பார்த்தால், அது மழலையிசையின் மாண்பை, விரித்துக்கொண்டே செல்வதை அனுபவித்து உணரலாம்.

குழலையும் யாழையும் கொண்டுவந்து இசைத்துக்

காட்டி, குழந்தையின் மழலைக் குரலுக்கு இவை இணையில்லை என்று மூடிவைக்கிற அழகில்தான், திருக்குறள் இசைநூலைவிடவும் இனிமையாகிறது.

இதற்கு உரையெழுதிய காலிங்கர், "பரதம் பற்றிய குழலின் ஓசையும் பண்ணினைப் பற்றிய யாழின் ஓசையும்' எனக் குறித்துள்ளார். குழல் நாட்டியத்திற்கு உரியது. அதாவது பரதத்திற்குப் பக்கவாத்தியம் (வங்கியம்). யாழ் இசைக்குரிய துணை வாத்தியம். இதனை இன்னும் நயம்பட விளக்குவார் தண்டபாணி தேசிகர். "யாழோசை போல மழலைச் சொல் மனம் ஒன்றச் செய்வது எனவும், பரதத்திற்குத் துணையான குழலோசை போல மழலை சுவைத்து மெய்ப்பாட்டால் ஆடவும் செய்வது எனவும் அறிய உதவுகிறது' என்பது அவர்தம் விளக்கம்.

ஆட முடியாத பாட்டியை ஆட்டுவிப்பதும், பாட முடியாத பாட்டனைப் பாட்டுவிப்பதும் இந்த மழலைகள் அல்லாமல் வேறு யார்? தங்களை முதுகில் சுமக்கும் யானைகளாய்ப் பெரியவர்களை ஆக்கிவிடுவதில் இவர்களுக்கு நிகர் எவர்? "ஆனை ஆனை ஐயா யானை' என்று தானே பாடும் குழந்தைதானே, பின்னர் கவிஞனாகிறது.

இவ்வாறு,பேசுமொழியாவும்ஆசுகவிஆகவிடாமல் அதட்டி, ஆங்கிலம் புகட்டப்படுவதால்,அவர்கள் இதழ்களில், தானே உதயமாகும் தாய்மொழி மறுக்கப்படுவதால், அனேகக் குழந்தைகள் தத்தம் மழலைமையை இழக்கிறார்கள் என்பதை மீளவும் வலியுறுத்துகிறது, இந்தக் குறள்.

மழலை மிழற்றும் அமுத மொழி "தமிழ்' என்று

சொல்வதில் தயக்கம் தேவையில்லை. இதைத்தான் "தென்றலுடன் பிறந்த பாஷை' என்று மொழிகிறார் மகாகவி பாரதி.

"திங்களொடும் செழும்பரிதி தன்னோடும் விண்ணோடும் உடுக்களோடும் மங்குல் கடல் இவற்றோடும் பிறந்த தமிழ்' என்று பாடினார் பாரதிதாசன். வாயைத் திறந்ததும் வருகிற காற்றில் ஒலியாய் விளைவது மொழி. மொழியப்படுவதால்தான் மொழி.

திருவள்ளுவர் காட்டும் மழலைச் சொல் எந்த மொழிக்கு உரியது? அவரவர்தம் சொந்த மொழிகளுக்கெல்லாம் உரியது. அது எது? அவரவர்தம் பெற்றோர் பேசும் மொழி. அதனால்தான், "தம்மக்கள்' என்ற தனிச்சொல்லை, மழலைக்கு முன்னர் வைக்கிறார் அவர். அது தாய்மொழியாகவும் இருக்கலாம்; தந்தை மொழியாகவும் இருக்கலாம். தாயும் தந்தையும் வெவ்வேறு மொழிக்காரர்களாய் இருந்தால், பேசப்படும் மொழி, இரண்டுக்கும் உரியதாகத்தானே இருக்கும்? அண்டை வீட்டார் இரண்டு மொழிகளும் அறியாதவர் ஆயின், அவர்வீட்டு மொழியையும், குழந்தை, தானே கற்றுக் கொள்ளும் என்பதே நடைமுறை உண்மை.

"உன் தாய்மொழி மதிக்கப்படவில்லை என்றால், உன் குரல்வளை நெரிக்கப்படுகிறது என்று பொருள்!!"

- பிரான்ஸ் பழமொழி

தமிழ் மொழி

தடுக்கி விழுந்தால் மட்டும் அ... ஆ...
சிரிக்கும் போது மட்டும் இ... ஈ...
சூடு பட்டால் மட்டும் உ... ஊ...
அதட்டும் போது மட்டும் எ... ஏ...
ஐயத்தின் போது மட்டும் ஐ...
ஆச்சர்யத்தின் போது மட்டும் ஒ... ஓ...
வக்கணையின் போது மட்டும் ஔ...
விக்கலின் போது மட்டும் ஃ...
என்று தமிழ் பேசி மற்ற நேரம்
வேற்று மொழி பேசும்
தமிழர்களிடம் மறக்காமல் சொல்
உன் மொழி
தமிழ் மொழியென்று !!!

ஐய! காமரு நோக்கினை, "அத்தத்தா'
என்னும் நின்
தே மொழி கேட்டல் இனிது (கலித்தொகை: 80)
என்கிறார் மருதனிளநாகனார்.

மேலும், இந்தக் குறள் இன்னொரு நுட்பத்தையும் எடுத்து விளக்கக் காணலாம், மழலையின் இனிமைக்கு உவமையாக எடுத்துச் சொல்லி, விளக்கிக் காட்டிப் பின்னர் விலக்கவும் படுகிற இக்கருவிகள் இரண்டும் நம் ஆதிக்கருவிகள். எடுத்தவுடன் இக்கருவிகள் பாடலைத் தருவது இல்லை. சற்றே சரிசெய்யும் வரை, அவை தன் போக்கில்தான் ஒலியெழுப்பும். மழலை மொழியின் மாண்பும் அத்தகையதுதான்.

புத்தம்புது இராகங்கள் இந்தக் கருவிகளில் இருந்து புறப்படுவதுபோல, புத்தமுதச் சொற்களை விளைக்கும் உயிர்த்தன்மை, மழலைக்கு உண்டு. கவனித்துப் பார்த்தால், அகராதிகளில் அகப்படாத பல புதிய சொற்களை, குழந்தைகளின் குரல்வழியாகச் செவிமடுக்கலாம்.

ஆக, மழலை தன் நாவில் மிழற்றும் மொழி அமுதம் ஆகிறது. மொழிய மொழியத்தான் வளரும் மொழி. பெரியவர்கள் பேசுவதைவிடவும் பிஞ்சுமழலைகள் பேசும்போதுதான், மொழிக்கு உயிராற்றல் வருகிறது என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

VARSHA™
IDLI/DOSA BATTER
Eat Fresh!
eat the Best!
VARSHA
1Kg
Traditional taste that Lingers
VARSHA
VARSHA

சரித்திரத் தொடர்

சேரமான் கனவு

21

21 கடலரசியின் கன்னிப் பயணம்!

கொற்றவன்

பகிற்கூட்டம் ஏதுமில்லாமல் தெள்ளத் தெளிவான வானத்தில் நீந்தும் வெள்ளிநிலவின் ஒளி பளிச்சென பரவியதில், கடற்பரப்பின் வெகுதூரத்திலும் வெள்ளித் துண்டென மீன்கள் துள்ளிக் குதிப்பது தெளிவாகத் தெரிந்தது.

கடலரசியை முழுதுமாகப் பார்வையிட்டபின், கப்பல் முகப்பின் மேல்தளத்தில் நின்றிருந்தார்கள் அரச குழாத்தினர்.

அவர்களுக்காகக் கப்பல் முகப்பின் கீழே அன்னப்பறவை வடிவத்தில் நீண்டிருந்த ஒரு ஓடம் காத்திருந்தது. அதில் நடுநாயகமாக அமர்ந்திருந்தார் ஒற்றர் படைத் தலைவர் உதயணன். அன்னத்தின் கழுத்துப் பகுதியில் ஒருவனும், வால் பகுதியில் ஒருவனுமாக அமர்ந்திருந்த ஓடக்காரர்கள் கடலரசியின் பிரம்மாண்டத்தை வைத்த கண் வாங்காமல் பார்த்தவண்ணம் இருந்தனர்.

"தாங்கள் நினைத்தது போலவே கடலரசியை வடிவமைத்து விட்டீர்கள் அல்லவா?" ஆவலுடன் வினவினார் பேரரசி.

"அப்படித்தான் நினைக்கிறேன்! எப்பேர்பட்ட கடற்கொள்ளையர்கள் வந்தாலும், வேற்றுநாட்டு கப்பற்படை வந்தாலும், அதனைத் தோற்கடிக்கும் அத்தனை அம்சங்களும் கொண்டிருக்கிறாள் கடலரசி. கடும் புயலையும் தாங்கக் கூடிய வல்லமையும் கடலரசிக்கு உண்டு!" என்றார் சேரப் பேரரசர்.

"ஆம் சகோதரி! சேரநாட்டின் பலத்தை மட்டுமல்ல, புகழையும் கடல்கடந்து பறைசாற்றுவாள் இந்தக் கடலரசி!" என்றார் சோழ வேளிர் பெரியவர்.

அதைக் கேட்டதும், அருகில் நிற்கும் தியோதாராவின் கரத்தைப் பிடித்து உயர்த்தி, உறுதிமொழி அளிப்பதுபோல், "பெரியவர் கூற்றை நாங்கள் வழிமொழிகிறோம்!" என்றாள் தாலியா.

அக்கணம் ஓரக்கண்ணால் வில்லவனைப் பார்த்து குறுநகை புரிந்தாள் தியோதாரா.

"அந்தப் பெருமையெல்லாம் இவரைத்தான் சாரும்!" எனத் தன் அருகில் நிற்கும் பெரியவர் முதுகண்ணனாரைக் கைகாட்டினார் சேரமான் செங்குட்டுவர்.

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை! பேரரசரின் விருப்பம் எதுவோ அதை அடியேன் நிறைவேற்றினேன். அவ்வளவே! பெருமை அனைத்தும் நம் பேரரசரைத்தான் சாரும்!" கைகளை மார்புக்குக் குறுக்காகக் கட்டியபடி தளர்ந்த குரலுடன் மென்மையாகவும், அடக்கமாகவும் கூறினார் முதுகண்ணனார்.

ஒடுங்கிய உருவமும், இடுங்கிய கண்களுமாய்,

அகவை எண்பதைத் தாண்டிய என்புதோல் போர்த்திய உடலாக தளர்ந்து காட்சியளித்த அவரைக் கட்டியணைத்து, பின் அவர் கரங்களில் முத்தமிட்டார் செங்குட்டுவர்.

"முதுகண்ணனாரே! இந்த வயதிலும் தங்களின் தன்னடக்கம் மெய்சிலிர்க்கச் செய்கிறது. தாங்கள் இக்கப்பலின் தலைமைப் பொறுப்பை ஏற்க வேண்டும் என்ற எங்கள் விருப்பத்தை தக்க காரணங்களோடு மறுத்தவிதமும், அதில் தங்களுக்கு இருக்கும் பிடிப்பும் வியப்பளிக்கிறது!" என வியந்தார் செங்குட்டுவர்.

"இதில் வியப்பதற்கு ஒன்றுமில்லை! என் வயோதிகத்தால், நான் பார்த்துப் பார்த்துக் கட்டமைத்த இக்கடலரசிக்கு பங்கம் வருவதற்கு நானே இடமளித்து விடக்கூடாது என்ற எண்ணம்தான் காரணம்! தவிரவும் வளவத்திரையனை குழந்தைப் பருவம் தொட்டுப் பார்த்து வருகிறேன். கடலோடுவதில் அசாத்திய வல்லவன்! காற்றின் திசையையும் காலநேரத்தையும் மிகத் துல்லியமாக அறிவான். இக்கடலரசி மட்டுமல்ல, இதுபோன்ற இன்னும் நான்கு கலங்களைக் கொடுத்தாலும், அவன் ஏககாலத்தில் தலைவனாக இருந்து செலுத்த வல்லவன்." எனச் சற்றே நிறுத்தி மூச்சு விட்டுக் கொண்ட முதுகண்ணனார் மேலும் தொடர்ந்தார்.

"சுருங்கச் சொன்னால், நான் அறிந்தவரையில் கடலோடிகளில் அவன் முதன்மையானவன். அவன் பாட்டனார் வைத்த பெயரான திரையன் என்பதற்கு பொருத்தமானவன் என்பது சோழ நாடு அறிந்ததே! அதனால்தான் இக்கப்பலை அங்குலம் அங்குலமாகத் தெரிந்து வைத்திருந்தும் நான் தலைவனாகாமல், திரையனையே தலைவனாக ஏற்றுக் கொள்ளச் சம்மதித்தேன்!" என விளக்கினார் முதுகண்ணனார்.

"ஆகா! சூழலை ரத்தினச் சுருக்கமாக விளக்கி விட்டீர்கள் முதுகண்ணனாரே!"

பந்தர் மாளிகையில் இருந்து வந்தவர்கள் அனைவரும் அந்த மேல்தளத்தில் கூடியிருந்த போதிலும், கயல்விழியும் வளவத் திரையனும் அங்கே இல்லாதிருப்பதை அப்போதுதான் உணர்ந்தார் பரணர்.

"எங்கே நமது கடமை வீரன் வளவத்திரையன்? கப்பலில் ஏறியவுடனே தனது கடமையில் மூழ்கி விட்டானா?"

அவர்கள் நின்றிருக்கும் அந்த முகப்புக்கு நேர் கீழே, தீப்பந்தத்தின் மெல்லிய

வெளிச்சம் ஊடுருவிய அக்கப்பலின் கீழ்த்தளத்தில் நின்றிருந்த கயல்விழியின் பார்வை ஆழியின் அலைகளில் நிலைத்திருந்தது.

அவளுக்குப் பின்புறமாக நெருங்கி நிற்கும் வளவத்திரையனின் அருகாமையால் அவள் உணர்ச்சிப் பிழம்பாக இருந்தாள்.

அவளது நிலையை உணர்ந்து கொண்ட வளவத்திரையன் பேச முற்பட்டான்.

காதில் விழும்படி சத்தமிடாதீர்கள்!"

"அருகில்தான் நிற்கிறேன் இளவரசி!" என்றவன், மேலும் ஒரு அடிவைத்து நெருங்கினான். அவனது மேலங்கி தன் முதுக்குப்புறம் உரசுவதை உணர்ந்தவளுக்குள் வெப்பம் கூடியது.

"என்னிடத்தில் தங்களுக்கு இல்லாத உரிமை வேறு யாருக்கு இருக்கப் போகிறது?" அவளுக்கு மட்டும் கேட்கும்படி குனிந்து காதருகில் அவன் கூறியபோது அவனது அதரங்கள், அவளது

"இளவரசி, ஏன் இந்த அடர் மௌனம்? என் மீது ஏதேனும் கோபமா?"

அவன் அவ்விதம் கேட்ட போதுதான், அவளுக்கு உண்மையிலேயே அதுதான் காரணமோ என்ற எண்ணமும் தோன்றியது. அந்த கிரேக்கப்பதுமை தாலியா நெருங்கி நெருங்கி வந்து வளவத்திரையனிடம் உரையாடிய காட்சிகள் அப்போது கயல்விழிக்குள் ஓடியது.

"தங்கள் மீது கோபப்பட எனக்கென்ன உரிமை இருக்கிறது?"

அதைக்கேட்ட கணமே, "இளவரசி..." எனப் பதறினான் வளவத்திரையன்.

"அருள்கூர்ந்து அருகில் நின்று அமைதியாக உரையாடுங்கள். மேலே நிற்கும் பெரியவர்களின் செவிமடலைத் தீண்டியதில் அவளுக்குள் மோக யாழ் மீட்டப்பட்டது. அப்படியே தன்னை அணைத்துக் கொள்ளமாட்டானா எனத் துடித்தது அவள் மனது.

"இன்னும் சில நொடிகளில் கடலரசி புறப்பட்டு விடுவாள்! இதோ நாம் இங்கு நிற்கும் நொடிகள்தான் என் நினைவில் ஓடிக் கொண்டிருக்கும்!" இம்முறை அவன் அதரங்கள் அசைவும், அவை உதிர்த்த வார்த்தைகளும் அவளைத் தன்னிலை மறக்கச் செய்தன. மெதுவாய் அவனை நோக்கித் திரும்பியவள், பதிலளிக்க வகையற்று திணறினாள்.

அந்த நெருக்கத்தில் அவளிடமிருந்து பெருமூச்சுக் கிளம்பியது. அப்பெருமூச்சின் பொருள் உணர்ந்தான் வளவத்திரையன்.

"இளவரசி! இந்தப் பிரிவு தற்காலிகமானதுதான்! அதுவரை என் நினைவாக இந்தக் குறுவாளை

வைத்துக் கொள்ளுங்கள்!" எனத் தன் இடையில் மறைத்து வைத்திருந்ததனை எடுத்து அவளிடம் நீட்டினான். மறுப்பேதும் கூறாமல் அதனை வாங்கிக் கொண்டவளின் கரங்களைப் பற்றினான் வளவத்திரையன்.

அவன் கரங்கள் பட்டதுமே கயல்விழி உருகத் தொடங்கினாள். கண்கள் கிறங்கத் தொடங்கின.

அப்போது "வளவா!" எனச் சத்தமாக ஒலித்தது வில்லவனின் குரல்!



அதைக்கேட்டதும், "தேவி, நீங்கள் இடப்புறமாக மேலேறுங்கள். நான் வலப்புறமாக செல்கிறேன்!" என்றவனிடத்தில், "இந்தாருங்கள்! இது எங்கள் அரச குலத்தின் கணையாழி. என் நினைவாக வைத்துக் கொள்ளுங்கள்!" என அவன் வலக்கரத்தில் கொடுத்துவிட்டு கப்பலின் முகப்பு நோக்கிய பாதையில் ஓடினாள் கயல்விழி.

அவள் தலைமறையும்வரை நின்று அவளையும் அக்கணையாழியையும் பார்த்திருந்தவன், சட்டதேனே தன் இடைக்கச்சையில் அதனைப் பத்திரப்படுத்திக் கொண்டு கப்பலின் பின்பக்கம் விரைந்து ஓடி மேலே ஏறினான். அதற்குள் மீண்டும் ஒலித்தது வில்லவனின் குரல்!

"இதோ வந்துவிட்டேன்!"

கப்பலின் பின்பக்கத்தில் இருந்து மேலேறியவனை எதிர்கொண்ட வில்லவன், "திடீரென எங்கே மாயமானாய் திரையா? பேரரசர் புறப்படவிருக்கிறார்" என்றான் பரபரப்புடன்.

"கீழ்த்தளத்தை ஆராய்ந்து கொண்டிருந்ததில் சற்று நேரம் ஓடிவிட்டது!"

அவர்கள் இருவரும் பேசிக் கொண்டே கப்பலின் முகப்பு நோக்கி விரைந்தார்கள்.

"கடலரசி நான் நினைத்ததை விடவும் பெரிதாக இருக்கிறாள்!" என்றான் வில்லவன்.

"ஏறக்குறைய இவ்விதத்தில்தான் கரிகாற் பெருவளத்தார் காலத்திய கப்பல் ஒன்றும் இருந்தது. ஆனால் கடலரசி அதனையும் விஞ்சும் வண்ணம் புதுமைகள் பல கொண்டிருக்கிறாள்!"

"அப்படியா?..." என்ற வில்லவன், தனக்கு எதிரே வந்த இரு இளைஞர்களைக் கண்டதும் சில நொடிகள் அமைதியாகிப் பின்னர் குரல் தாழ்த்தியபடி சிந்தனையுடன், "ஏன் திரையா, இக்கப்பலில் உள்ளவர்களுக்கு என்னை இன்னாரென்று தெரியாதல்லவா?" என வினவினான்.

"ஏன்? தெரியவேண்டுமென்று நினைக்கிறீர்களா?"

"என்ன?"

"இவ்வாறு ரகசியக் குரலில் அடிக்கடி வினவினால் பார்க்கும் எவருக்கும் ஐயம் எழத்தான் செய்யும்." என நகைத்தான்.

"இப்படிச் சிரித்து வைத்து நீயே காட்டிக்



கொடுக்காமல் இருந்தால் சரி!"

"நான் காட்டிக் கொடுப்பது இருக்கட்டும்! தியோதாராவிடம் உரையாடும்போது, கப்பலில் உள்ளவர்களிடம் தாங்கள் மாட்டிக் கொள்ளாமல் இருந்தால் சரி!"

அவ்விதமாக உரையாடிக் கொண்டே அவர்கள் கப்பலின் முகப்பை நோக்கி வந்தபோது, "வாருங்கள் கப்பல் தலைவரே!" என இரு குரல்கள் ஒலித்தன.

மாமன்னரும் அரசியும்தான் அவ்விதம் ஒரே நேரத்தில் அழைத்தார்கள்.

அதைக் கேட்டு வளவத்திரையன் அதிர்ச்சியில் திகைத்தான். வில்லவனோ மகிழ்ச்சியில் திளைத்தான்.

அங்கே நின்றிருந்த பரணரோ, "திரைகடல் ஓடும் திரையரே! திறமை மிகுந்த திரையரே! திகைத்திடத் தகுமோ திரையரே!" எனப் பண்ணிசைத்தார்.

அதைக் கேட்டு தியோதாராவும், தாலியாவும் களுக்கென்று சிரித்தார்கள். கயல்விழிக்கும் பெருமிதப் புன்னகை படரவே செய்தது.

"வளவா! நாங்கள் விடைபெற வேண்டிய நேரம் தாண்டி விட்டது!" என்றவர், சட்டென தன் விரலில் இருக்கும் இலச்சினைப் பொறித்த கணையாழியைக் கழற்றியவாறே, "முன்பே எட்டப்பட்ட முடிவுதான் என்றாலும், நாம் அனைவருமே இது குறித்து நிறையவே பேசியிருக்கிறோம் என்றாலும், இதோ!... அதிகாரப்பூர்வமாக இக்கணம் முதல் உன்னைக் கடலரசியின் தலைவனாக அறிவிக்கிறேன்!" என்றபடி வளவத்திரையனுக்கு அக்கணையாழியை அணிவித்தார்.

"வாழ்க வளவத்திரையர்!" என்றபடி மகிழ்ச்சிப் பெருக்கில் வாழ்த்தினார் பெரியவர் முதுகண்ணனார்.

அடுத்த சில நொடிகளில் அரசரும் அரசியும், பரணரும் சோழவேளிர் பெரியவரும் கப்பலில் உள்ளவர்களுக்கு ஆசிகளை வழங்கியபின் புறப்பட ஆயத்தமானார்கள்.

கடலரசியிடம் இருந்து மேல் தளத்துக்கு கொண்டு வரப்பட்ட படகில் ஏறி அவர்கள் அமர, கயிறு மூலம் அப்படகு அங்குலம் அங்குலமாகக் கவனமாக கீழிறக்கப்பட்டது.

கீழே ஆயத்த நிலையில் இருந்தது அவர்கள் வந்த ஓடம். இருபது பேர்கள் பயணிக்கும் வண்ணம் நீண்டிருந்த அந்த ஓடத்தில் நின்றிருந்த ஒற்றர்படைத் தலைவர் உதயணன் தலைவணங்கி அவர்களை வரவேற்றார்.

அவர்கள் ஓடத்துக்கு இடம் மாறியதும், இறங்கிய படகு மேலாக உயர்த்தப்பட்டு, மிகக் கச்சிதமாக கடலரசியின் முகப்புக்குப் பக்கவாட்டில் அதற்கான இடத்தில் நிலைநிறுத்தப்பட்டது.

சிறகை மடக்கி மரக்கிளையில் அமரும் பருந்தினைப் போல் அப்படகு தனக்கான இடத்தில் வெகு கச்சிதமாய் அடங்கி அக்கப்பலின்

முகப்பினை அணிசெய்ததையும், அப்படகினைப் போல் கடலரசியின் ஒரு பக்கவாட்டில் மட்டுமே நான்கு படகுகள் மடங்கிய சிறகென இருப்பதையும் அப்போதுதான் கயல்விழி அறிந்தாள்.

எட்டு பக்கவாட்டுப்படகுகளும்,முன்னும்பின்னும் ஒவ்வொரு படகு என பத்து துணைப் படகுகளை அலங்காரமாகவும், அதேநேரம் தகுந்த பாதுகாப்புடனும் கொண்டிருந்த அந்தக் கடலரசியின் தோற்றமே அவளுக்கு மிரட்சியை உண்டாகியது.

முதன்முறையாக இப்படியொரு பிரம்மாண்டத்தைக் கண்டவளாதலால் அவள் கண்களில் கடலரசி பெரும் விந்தையாகவே தோன்றினாள்.

ஓடத்தில் நின்று நிமிர்ந்து பார்த்தபடி இருந்தவர்களை வளவத்திரையனும், வில்லவனும் கைகூப்பி வணங்கினார்கள்.

“கடலரசி புறப்பட தாங்கள்தான் ஆணையிட வேண்டும்!” என்றான் வளவத்திரையன்.

“அது உனது பொறுப்பல்லவா திரையா!” என்றார் பேரரசர்.

“இல்லை! இந்த முதல் பயணத்தைத் தாங்களே ஆணையிட்டு ஆசி கூறி துவக்கி வைக்க வேண்டும்!”

செங்குட்டுவருக்குப் புரிந்தது. அனைவரையும் அமைதியாகப் பார்த்து தலையசைத்தவாறே, “ஆகட்டும்! கடலரசி புறப்படட்டும்!” என்றவாறு கரமசைத்து ஆணையிட்டார்.

அடுத்த நொடி வளவத்திரையன் பெருங்குரலில் கூவினான்.

“நங்கூரத்தைத் தூக்குங்கள்! கப்பலை மேற்கு நோக்கிச் செலுத்துங்கள்!”

வளவத்திரையனின் அந்த ஆணை அக்கப்பலின் பின்பக்கம் முதல் அடித்தளம் வரை சென்று சேர்ந்தது.

அதேநேரம் பேரரசரின் ஓடம் கரையை நோக்கிப் பயணிக்கத் தொடங்கியது.

சற்றைக்கெல்லாம் நங்கூரம் நீக்கப்பட்ட அந்தப் பெரும் மரக்கலம், பெரிதாக எழுந்த கடலலைகளைப் புறந்தள்ளியபடி கம்பீரமாக முன்னோக்கி நகர்ந்தது.

பாய்மரத்தில் புகுந்த காற்று கடலரசியை இன்னும் வேகமெடுக்க வைத்தது.

கரையை நோக்கித் திரும்பிக் கொண்டிருந்த அந்த ஓடத்தில் நின்றபடியே கடலரசியைக் கண்ட கயல்விழியைக் கட்டுங்கடங்காத சோகம் கவ்வியது. கண்கள் குளமாகின. பெரியவர்கள் முன்னிலையில் தன்னிலையை அடக்குவதற்கு அவள் மிகவும் அல்லற்பட்டாள்.

கடலரசியுடன் தன் மனமும் ஓடுவதாகவே எண்ணித் துயறுற்றாள். வளவத்திரையனைப் பிரிந்த அவள், தன் காதலுக்கு இது தற்காலிகப் பிரிவா அல்லது எப்போதுமான பிரிவா என்பது தெரியாமல் துக்கம் தொண்டையை அடைக்க ஏங்கினாள். அந்த ஏக்கம் சுவாசத்தைத் தடைபடச் செய்ததால், அவள் இதயம் வேகமாகத் துடித்து அதைச் சரிசெய்ய முனைந்ததில், மார்பு வேகவேகமாய் ஏறி இறங்கியது.

அடுத்த கணமே கப்பல் அவள் கண்முன் விட்டு மறைந்தாற்போல இருந்ததில் நினைவிழந்து நிலை தடுமாறிச் சாய்ந்தாள்.

சரியான நேரத்தில் அவளைத் தாங்கிப் பிடித்த சேரமாதேவியார், அவளைத் தன் மடிமேல் கிடத்திக் கொண்டார்.

அந்தக் காட்சி துல்லியமாகக் கண்களுக்குத் தெரியாவிட்டாலும், கயல்விழி மயக்கத்தில் சாய்ந்துவிட்டாள் என்பதை வளவத்திரையனால் அனுமானிக்க முடிந்தது.

ஆனால் கடலரசியோ தன் கன்னிப் பயணத்தில் கடமையே கண்ணாக, எதிர்ப்படும் பெரும் பெரும் அலைகளைத் துச்சமெனப் புறந்தள்ளியபடி, புரவிப் பாய்ச்சலாகப் பறக்கத் தொடங்கியிருந்தாள்.

(கனவு தொடரும்...)

படைப்பாளிகளுக்கு...
* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!
*இதழில் வெளியாகிற
கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள்
யாவும் படைப்பாளிகளின்
பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!
தொடர்புகளுக்கு
editor@ithamil.com

ஞான ஊற்றே பெருக்கெடு

முத்தமிட்டு முத்துகளாக
சிதறிய மழைத்துளி சேர்ந்து
பெருவெள்ளமாய் மாறி
பள்ளம் நோக்கி பாயும்,
பள்ளமும் மேவியே மேட்டை நாடி பாயும்,
அறியாத அறிவியல் விதி என்னவோ?
வியும் மாறும் விந்தை காணாயோ?

காணாத விதிகள் பல அகிலத்தில் உண்டு,
எல்லாம் கண்டதாய் குலைக்காதே நீயும்,
மொழியால் வளர்ந்து
மெலியார் விதியை சட்டமிட்டு
தீர்மானித்த நீயும்
மண்ணுள்ளே புதையும் காலம் அறிந்து
புதையாமல் தப்பித்துக் கொள்வாயோ?

கொள்வாய் உன்னை நீயே
ஏமாற்றிக் கொள்வாய்,
கடவுள் என்று மதவெறியன்
காலில் விழுந்தால் அதைவிட அறியாமை
உண்டோ இழிவாய் மொழிந்திட,
எந்த கடவுளாவது சாதி, மதம்,
பிறப்பு இனம் மொழி என்று
பிரிவினை பாராட்டி
தம் மக்கள் நிம்மதியை அழிப்பாரோ?

அழிப்பார் என்று
அழிவார் என்று எண்ணுபவரை விட
அழிக்காது வாழும்முறையை
கண்டடைபவரே மேலானவர்,
நேர்வழியில் வாழ நெஞ்சில் துணிவு வேண்டும்,
பாகுபாடுகள் ஒழிந்திட
பகுத்தறிவு பயன்பட வேண்டும்,
ஏற்றமிகு எண்ணங்களை
எல்லுலகும் எடுத்துரைக்க
அள்ளக்குறையாத அன்பாகிய
ஞான ஊற்றே பெருக்கெடு....

மித்திரன்

இது... நாத்திகமாகவும் இருக்கலாம்

கண்களுக்கு அகப்படாது
அந்தத் துகள்கள்...
பார்த்தவர்களும் யாருமில்லை!
உணர்ந்தவர்கள்
அவர்களுக்கே வெளிச்சம்...
நோன்பு துறந்து மதம் காணாமல்
மனிதத்திற்காக இரத்ததானம் செய்தவரின்
குல்லா நூலிழையில்
தென்படலாம்...

ஒடுக்கப்பட்டவர்
முன்னேற்றத்திற்காக
ஓய்வில்லாமல் உழைப்பவர்தம்
சிலுவையின் சிதைந்த
மரச்சீவின் இடுக்கில் கிடைக்கலாம்....

எங்கோ சிரியத்தின் போரில்
மரித்த குழந்தைக்காக
கண்ணீர் வடித்தவரின்
விபூதியின் ஒற்றைத் துகளை
பிடிக்க நேர்ந்தால் அதில்
அகப்படக்கூடும்...

பிசைந்து வைத்த எச்சில் சோற்றைத்
தின்றுவிட்டு அன்போடு
முகம் பார்க்கும்
நாயின் கண்களில் கூட
புலப்படலாம்...

உருவத்தில் தேடாமல்
தூய்மையான உள்ளத்தால்
தேடினால்...
அந்தக் கடவுள் துகள்களை!

சுரேஷ் குமார்

உறையிலே உறங்குவதா ?

தீராத நோயாக மாறாத சாபமாய்
பணமெனும் விஷம் மனித ஜாதிக்குள்!
வாக்குகள் கால் குப்பி
மதுவிற்கு விற்பனையாகிறது
தேசமோ கட்சிகளிடம் அடகு போகிறது!

கட்சிகளோ உரிமைகளையும்
நசுக்கி நம்மை அடிமையாக்கி ஆளுகிறது!
உயிர் நீத்து பெற்ற சுதந்திரம் எங்கே?

நல்ல தலைவனை
பொம்மையாக அரியணையில்
அமர்த்தி பொம்மலாட்டம்
ஆடும் அரக்கர்கள் காலிலே!

விழுப் புண்ணை அணிகலனாக
அணிந்த வீரம் எங்கே?
தூங்குகிறது நிம்மதியாக
மெத்தையிலும் மதுவிலும்
வீறுகொண்டு எழுகிறது
தெருவிலே மங்கையிடமும்
சாதிச் சண்டையிலும்!

எல்லையிலே அத்து மீறல்
கோட்டையிலே நாட்டை விற்க பேச்சுவார்த்தை
ஆனால் காதலுக்காக போராடும்
குருட்டு சமூகம்!

மதத்தை மைதானமாக்கி
சாதியை இரையாக்கி தேசத்தை வேட்டையாடும்
அரசியல் ஓநாய்கள்!

தேசியக் கொடியை
தலைக் கீழாக தொங்கவிடும்
தேசபிதாக்கள் !!
இவர்களின் மத்தியிலே நான்
என்ன செய்வது ?

ஊழலைத் தட்டிக் கேட்க நாதியில்லை!
வேர்வை சிந்தியும் வயிறு நிறையாமல்
சாகும் உழைப்பாளியின் மரணத்தில்
மகிழ்ச்சியுறும் முதலாளிகள்!

சாமியையெல்லாம் கண்ணைக்கட்டி
காட்டுக்கு அனுப்பிவிட்டு
காவியணிந்து களியாட்டமாடும்
போலிச் சாமியார்களுக்கு
சிறையும் அந்தப்புரமாம்!
நீராட கங்கை நீராம்!

இன்னும் எத்தனை எத்தனையோ
அவலங்கள் கண் முன்னே கணக்கிட்டு
எழுத முடியவில்லை !
தீர்ந்தது என் பேனாவின் மை!

வீர வாளாய் பிறந்தும்
உறையிலே உறங்குவதா?
மறக்குடி மங்கையெனக்கு
வேண்டாம் அந்த அவப்பெயர்!

நான் எழுதுகோலை வாளாக்கி
எழுத்துக்களால் பட்டைதீட்டி
போராடப் போகிறேன்! நீங்கள் எப்படி?

விருப்பம் உங்களுடையது!
ஆனால் தேசத்தின் தலையெழுத்து
உங்கள் கையில்
மறந்துவிட வேண்டாம்!

புரட்சிப் பெண்

2டி எண்டர்டெயின்மென்ட் சார்பில் சூர்யா தயாரித்துள்ள 'விருமன்' படத்தில் கார்த்தி நாயகனாக நடித்துள்ளார். இவருக்கு ஜோடியாக இயக்குநர் ஷங்கரின் இளைய மகள் அதிதி நடித்துள்ளார். யுவன் ஷங்கர் ராஜா இசையமைத்துள்ள இந்தப் படத்தில் ராஜ்கிரண், சூரி, பிரகாஷ் ராஜ் உள்ளிட்டோர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர். தற்போது இந்தப் படத்தின் முதல் பார்வை போஸ்டர் வெளியாகியுள்ளது.

முதல் பார்வையில் 'விருமன்'

என்றென்றும் நிற்கும் காதல்!

முழுப் பார்வைக்கும் விரைவில் வரட்டும்!

'சிவப்பு மஞ்சள் பச்சை' படத்துக்குப் பிறகு இயக்குநர் சசி இயக்கும் படம் 'நூறு கோடி வானவில்.' இதில் ஹரிஷ் கல்யாண் நாயகனாக நடிக்க, அவருக்கு ஜோடியாக சித்தி இத்னானி நடிக்கிறார். முழுவதும் காதல் சார்ந்த திரைப்படமாக உருவாகியுள்ள இந்தப் படத்தின் டீசரை நடிகர் சிவகார்த்திகேயன் பெங்களூரில் வெளியிட்டார். சித்து குமார் இசையமைக்கும் இப்படத்தை மாதவ் மீடியா மற்றும் அருண் அருணாச்சலம் புரொடக்சன்ஸ் நிறுவனங்கள் தயாரிக்கின்றன.

கார்த்திக் நரேன் இயக்கத்தில் தனுஷ் நாயகனாக நடித்துள்ள 'மாறன்' திரைப்படம் ஹாட்ஸ்டாரில் நேரடியாக வெளியாவதாக அறிவிக்கப்பட்டு படத்தின் மோஷன் போஸ்டர் வெளியாகியுள்ளது. இதில் தனுஷுக்கு ஜோடி மாளவிகா மோகனன். மேலும் கிருஷ்ணகுமார், மகேந்திரன், சமுத்திரக்கனி, ஸ்மிருதி வெங்கட் உள்ளிட்டோர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர். சத்யஜோதி ஃபிலிம்ஸ் இந்தப் படத்தை தயாரித்துள்ளது. ஜி.வி.பிரகாஷ் இசையில் படத்தில் தனுஷ் பாடிய பாடல் விரைவில் வெளியாகவுள்ளது.

ஓடிடியில் வெளியாகும் மாறன்!

எதற்கும் துணிவாரா சூர்யா?

ஓடி ஜெயிக்கட்டும் மாறன்!

காலம் நேரம் ஒத்துழைக்குமா?

கொரோனா மற்றும் ஓமைக்ரான் பரவல் காரணமாக பொங்கலை முன்னிட்டு வெளியாகவிருந்த நடிகர் அஜித்தின் வலிமை, ராஜமௌலியின் ஆர்ஆர்ஆர், பிரபாஸின் ராதே ஷ்யாம், சிரஞ்சீவி — ராம் சரண் இணைந்த ஆச்சாரியா படங்களின் வெளியீடு தள்ளிவைக்கப்பட்டதையடுத்து சிறிய முதலீட்டுப் படங்கள் பொங்கலுக்கு வெளியாகின. பாண்டிராஜ் இயக்கத்தில் சூர்யா நடித்துள்ள 'எதற்கும் துணிந்தவன்' திரைப்படமும் பிப்ரவரி 4 ஆம் தேதி வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில்,இதன் வெளியீடும் தள்ளிப்போகுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

தலவலம்

காட்டுமன்னார்கோயில்

புவனகிரி செயபாலன்

வைணவத்தில் ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்டது நூற்றியெட்டு திவ்யதேசங்கள். ஸ்ரீ முஷ்ணம், காட்டுமன்னார்குடி போன்றவை அபிமான தலங்கள். காட்டு மன்னார் கோவில் நாலாயிர திவ்விய பிரபந்தம் இசையோடு பாடப்பெற்ற தலம். நாதமுனிகள், ஆளவந்தார் போன்றோரின் அவதாரத் தலம்.

இறைவன் — வீரநாராயண பெருமாள். இறைவி — மரகதவல்லி தாயார். தல விருட்சம் — அடுக்கு நந்தியாவட்டை. தீர்த்தம் — வேத புஷ்கரிணி.

புராணம்

ஜிரும்பனராஜா மகரிஷியின் பிரார்த்தனையால் மகாவிஷ்ணு, மகாலட்சுமியை அரசனின் குழந்தையாகப் பிறக்க செய்தார். திருமண வயதில் சுயம்வரம் நடத்த ஏற்பாடானது. வந்த அரசர்களை இறைவன் (விஷ்ணு) தன் கருடமலையில் தோன்றி அவர்களுடன் போரிட்டு தோற்கடித்து, லட்சுமியை அழைத்து சென்றார் .இதனால் அவர் தைரியமான போர் வீரன் எனக் கூடிய நாமமாக வீரநாராயணப் பெருமாள் என்று அழைக்கப்பட்டார்.

மாதங்க முனிவர் வேத பாராயணத்தில் தவறு செய்ததால், பிரம்மாவால் சபிக்கப்பட்டார். சாபத்திலிருந்து விடுபட வேண்டி ஸ்ரீ முஷ்ணம் பூவராகசாமியிடம் முறையிட்டார்.

இறைவன் அவர் முன் தோன்றி 'காட்டுமன்னார் கோயிலின் முன் உள்ள வேத புஷ்கரணி அருகே தவம் செய்!' என்றார். முனிவரும் அவ்விதமே செய்ததுடன், அவரின் வேண்டுகோளின்படி வீரநாராயணர் என்ற திவ்விய நாமத்துடன் இங்கே காட்சியளிக்கிறார்.

நாதமுனியைத் திரும்ப வரச் செய்து நாலாயிர திவ்ய பிரபந்தத்தைத் தொகுக்க இறைவன் வழி காட்டினார். மேலும், ஒரு மன்னராக வந்து காட்டியதால் இது காட்டுமன்னார்கோயில் என்றானது. முதலாம் பராந்தகச் சோழன் காலத்தில் (10—ம் நூற்றாண்டு) நான்கு வேதங்களில் சிறந்து விளங்கிய வேத விற்பன்னர்களுக்குத் இத்தலம் உருவாக்கப்பட்டு பரிசளிக்கப் பட்டதால், இது வீரநாராயண சதுர்வேதிமங்கலம் என்று அழைக்கப்பட்டது.

வணங்கியவாறு மதுரகவியாழ்வார் சன்னதி உள்ளது. அதன் பின் நாதமுனி சன்னதியும், தொடர்ந்து நரசிம்மர் சன்னதி, ஸ்ரீ ராமர் சன்னதி, ஆண்டாள் நாச்சியார் சன்னதி, ஆஞ்சநேயர் சன்னதி உள்ளன.

பெருமாள் வீரநாராயணர் மூல ஸ்தானத்தில் ஸ்ரீதேவி, பூதேவி நாச்சியாருடன் நின்ற கோலத்தில் கிழக்கு நோக்கி காட்சியளிக்கிறார். மரகதவல்லி தாயார் கிழக்கு நோக்கி தனிச் சன்னதியில் உள்ளார்.

கல்வெட்டு

வீரநாராயண பெருமாள், காட்டுமன்னார்கோயில் தொடர்பாகப் பல கல்வெட்டுகள் கோயிலின் உள்ளேயும், மற்ற கோயில்களிலும் உள்ளன. சோழர் காலத்துக் கல்வெட்டுகளில் இத்தலத்தை

கோயில்

ஐந்து நிலை ராஜ கோபுரம் கிழக்கு நோக்கியுள்ளது. எதிரே பெரிய குளம். கோபுரத்தைத் தாண்டி உள்ளே சென்றால் கொடிமரம், பலிபீடம். அதற்கடுத்து பெரிய திருவடியான கருடாழ்வார். அவரைக் கடந்து உள்ளே சென்றால், இக்கோயில் உருவாகக் காரணமாக இருந்த மாதங்கி முனிவர் தனி சன்னதியில் உள்ளார். அடுத்து நம்மாழ்வாரை

விண்ணகரம் என்றும், சுந்தரபாண்டியன் காலத்தில் மன்னனார் என்றும் குறிப்பிட்டுள்ளன. கிருஷ்ண தேவராயர் ஆட்சியில் இங்குள்ள இறைவனை அழகியமன்னார் என்றும் இத்தலத்தை வீரநாராயணசேரி என்று தெரிவிக்கின்றது. இதன் பின்னர் வீர நாராயணபுர சதுர்வேதி மங்கலமாக மாறியது. முதலாம் குலோத்துங்க சோழன் ஆட்சியின்போது இது வீரநாராயணபுரம்



என்றானது. வீரநாராயணன் என்கிற முதலாம் பராந்தகச் சோழன் மன்னனார் கோயிலைச் செங்கல்லால் கட்டி புதுப்பித்தார். ஆனால் அதற்கு முன்பே மன்னார் பெருமாள் கோயில் இருந்ததாக தெரிவிக்கின்றது.

கி.பி. 1250 — 1274 ஆட்சி செய்த சடையவர்ம சுந்தரபாண்டியன், வீரநாராயணப் பெருமாள் காட்டு மன்னார் கோயிலுக்கும் விரிவான திருப்பணிகள் செய்துள்ளார். கோயில் வளர்ச்சிக்கு சோழர்கள், ராயர் மற்றும் நாயக்கர்களும் பெரும் பங்களித்துள்ளனர்.

நாதமுனி

தமிழ் தொன்மையான மொழி. இதற்கு இலக்கணம் வகுத்து கொடுத்து செம்மையாக்கிவர் அகத்தியர். தமிழை மேலும் சிறப்பிக்க வேண்டும் என்பதற்காக மகாவிஷ்ணுவை நோக்கி அன்ன ஆகாரமின்றி தவத்தை மேற்கொண்டார் அகத்தியர். பல வருடம் கடந்து அவருக்கு காட்சி கொடுத்தார் விஷ்ணு.

'என்னுடைய பஞ்ச ஆயுதங்களான சங்கம், சக்கரம், சார்ங்கம்(வில்), நந்தகம் (வாள்) கௌமோதகம் (கதை) முதலியவற்றைத் தருவதுடன் எனக்கு நித்ய தொண்டு செய்யும் சூரிகளான அனந்தன், கருடன், விஷ்வச்சேனர்களை தமிழகத்தில் ஆழ்வார்களாக எழுந்தருளச் செய்து, திவ்ய தேசங்களில் எழுந்தருளியிருக்கும் எம்மைத் தமிழிலேயே பாடுவார்கள். இது தேவ பாஷையான சமஸ்கிருத வேதத்துக்குச் சமமாகத் தமிழ் வேதம் என்று போற்றப்படும்!' என்றார்.

அதன்படி ஸ்ரீ வைகுண்டத்தில் உள்ள நாராயணனின் நித்திய சூரியான சுஜாநநர், என்னும் ஆனைமுகம் உடையவரின் அம்சமாக நாதமுனிகள் வீரநாராயணபுரத்தில் (காட்டுமன்னார் கோயில்) ஈஸ்வர பட்டர் என்பவருக்கு கி.பி 823 —ல் மகனாகப் பிறந்தார். இவருக்கு ரங்கநாதர் எனப் பெயரிட்டனர். இவர் முனிவர் போன்று யோக மார்க்கத்தில் தலைசிறந்தவராகத் திகழ்ந்ததால், இவரை முனி என்றும், ரங்கநாத முனி என்றும் அழைத்தனர். அதுவே நாளடைவில் மருவி நாதமுனியானார். அரவிந்தப் பாவை என்பவரை திருமணம் செய்து கொண்டு இங்கு வீற்றிருக்கும் வீரநாராயண பெருமாளுக்கு நித்திய தொண்டு கைங்கரியம் செய்து வந்தார்.

கிருஷ்ண பக்தியில் திளைத்த இவர், குடும்பத்துடன் கண்ணன் அவதரித்த, சஞ் சரித்த தலங்களான மதுரா, கோவர்த்தனம், கோகுலம் மற்றும் பிருந்தாவனம் முதலிய திவ்ய தேசங்களுக்குச் சென்று தரிசித்தார். அதன் பின் அயோத்தி, பூரி, ஜெகன்நாதர், அகோபிலம், திருமலை, காஞ்சி போன்ற தலங்களுக்குச் சென்று சேவித்து காட்டுமன்னார்குடி திரும்பினார்.

இவர் மகன் ஈசுவரமுனிக்கும், மருமகள் ரங்கநாயகிக்கும் பிறந்த குழந்தைக்கு யமுனைத் துறைவன் என்று பெயரிட்டு வளர்த்தனர். அவர்தான் பின்னாளில் சோழ மன்னனிடம் ராஜ பண்டிதராக இருந்த கர்வம் கொண்ட அக்கி ஆழ்வான் என்பவரை வேதாந்த வாதத்தில் வென்று சோழ மன்னனிடம் பாதி ராஜ்யத்தைப் பெற்ற ஆளவந்தார்.

நாதமுனிகள், பெருமாளுக்கு நித்திய கைங்கரியம் செய்து வந்த நிலையில் ஒருநாள், பெருமாளை தரிசிக்க தென்திசையில் இருந்து வந்த வைணவர்கள், கும்பகோணம் ஸ்ரீ சார்ங்கபாணி பெருமாளைப் போற்றி நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழியான 'ஆராவமுதே..' எனத் தொடங்கும் பாசுரத்தைத் தொடங்கி பத்துப் பாசுரங்களை பெருமாள் முன் சேவித்தனர்.

இப்பாசுரங்களில் பொதிந்துள்ள அசை, சீர், இசை மற்றும் பொருட்சுவையை உணர்ந்த நாதமுனி, பாடியவர்களிடம் 'இது இசையில் பாட வல்லதாக அமைந்துள்ளது. பத்தாவது பாசுரத்தில் 'குழலின் மலியச் சொன்ன ஓர் ஆயிரத்துள் இப்பத்தும்' என்று முடிகிறது. இதன்படி இன்னும் 1000 பாடல்கள் உள்ளது. எனவே மற்ற பாசுரங்களையும் பாடுங்கள்!' என்று கூற, 'எங்களுக்கு இந்த பத்து

பாடல்கள் மட்டும்தான் தெரியும்!' என்று அவர்கள் சொன்னார்கள்.

நாதமுனிகள் கும்பகோணம் சாரங்கபாணியை தரிசித்து அந்த பத்து பாடல்களையும் சேவித்தார். 'தாமிரபரணி கரையில் உள்ள திருக்குருகூரில் (ஆழ்வார் திருநகரி) சடகோபர் என்னும் பக்தரால் இயற்றப்பட்டது. அங்கு போய்ப் பெற்றுக்கொள்ளவும்!' என்றது அசரீரியான குரல்! அதைக் கேட்டதும் அங்கு சென்று ஆதிநாதப் பெருமாளைத் தரிசித்துவிட்டு அங்குள்ள புளிய மரத்தடியில் அர்ச்சா ரூபியாக (சிலை வடிவமாக) இருந்த சடகோபர் என்னும் நம்மாழ்வாரைத் தரிசித்தார். அப்போது அங்கு வந்த வைணவரிடம், 'சடகோபர் இயற்றிய பாடல்களைக் கற்றவர் இவ்வூரில் யாரேனும் உண்டா? அந்த ஏடுகள் கிடைக்குமா?' எனக்கேட்க, 'பாடல்களைக் கற்றவர்களும் இல்லை. ஏடுகளும் இல்லை. இங்கிருந்து தென்கிழக்கே திருக்கோளூர் உள்ளது. அவ்வூரில் அவதரித்தவர் நம்மாழ்வாரின் சீடர் மதுரகவி ஆழ்வார். அவர் வாரிசுகளில் ஒருவர் பராங்குச தாசர் ஒருவர் இருக்கிறார். அவரிடம் கேள்' என்றார்.

உடனே திருக்கோளூர் சென்று பராங்குச தாசரைச் சந்தித்து, தான் வந்த காரணத்தைக் கூறினார். 'நீர் கேட்கும் பாடலுக்கான ஏடுகள் எதுவும் இல்லை. ஆனால் என் முன்னோர்

மதுரகவிகள் சடகோபரை பற்றி 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்னும் 11 பாடல்கள் மட்டும் உள்ளது. இவற்றை 12,000 முறை பக்தியுடன் பாடினால், சடகோபர் காட்சி கொடுப்பார் எனச் சொல்ல கேட்டிருக்கிறேன். எனவே இப்பாடல்களை ஏக சிந்தையாக அனுசரித்து ஓரிடத்தில் அமர்ந்து இடையில் எழாமல் தொடர்ந்து 12,000 முறை பாடினால் சடகோபரின் தரிசனத்தைப் பெற்று வேண்டிய பாடல்களை அவரிடம் பெற்றுக்கொள்ளும்!' என்று கூறி பாடல்களை தந்தார்.

பாடல்களைப் பெற்று ஆழ்வார் திருநகரிக்கு வந்து புளிய மரத்தடியில் சிலை வடிவில் இருந்த சடகோபர் முன் பராங்குசதாசர் சொன்னபடி 12,000 முறை பாட, சடகோபர் காட்சி தந்தார். அவரிடம் அவர் 8000 பாடல்களை அருளுமாறு வேண்ட அவர் இயற்றிய 1000 பாசுரங்கள் உடன் மேலும் தான் இயற்றிய பாசுரங்களையும், பத்து ஆழ்வார்கள் அருளிய ஏனைய பாசுரங்களையும் தேவ கானமாக இசைத்து அருளியதுடன், வைணவ கோட்பாடுகளையும் உபதேசித்து அருளினார்.

யோகப் பயிற்சியில் வல்லவரான நாதமுனிகள் ஏகாந்தகிரகியாக (ஏகாந்தகிரகி என்றால், ஒருவர் ஒன்றை ஒருமுறை கேட்ட அல்லது படித்த மாத்திரத்திலேயே மனதில் நிலை நிறுத்தும் தன்மை) அனைத்து பாசுரங்களையும் உள்வாங்கித்துடன் அங்கேயே தங்கி செய்து வந்தார். ஒருநாள் இவர் கனவில் ஸ்ரீ நாராயண பெருமாள் காட்டுமன்னார் கோயிலுக்கு வரச்சொல்லி கட்டளையிட, காட்டுமன்னார்குடிக்கு சென்று பெருமாள் சன்னதியில் தாம் தெரிந்துகொண்ட பாசுரங்களைப் பாடி மகிழ்ச்சி கொண்டார்.

வைணவத்தை உலகெங்கும் பரப்பும் பொருட்டு நாலாயிரம் பாசுரங்களையும் தொகுத்து தன் மருமக்களான மேலையகத்தாழ்வான் மற்றும் கீழையகத்து வாழ்வான் என்ற இருவரின் துணைகொண்டு ராகம் மற்றும் தாளங்கள் அமைத்து இயலும் இசையுமாக்கி அனைவரும் பாடும் வண்ணம் பகுத்துக் கொடுத்தார். இந்தப் பாசுரங்களை ராகத்துடனும், தாளத்துடனும், அபிநயத்துடனும் பாடிய இவர்களின் வழித்தோன்றல்களே அரையர்கள் என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் செய்யும் திவ்ய பிரபந்த சேவை, அரையர் சேவை என்று அழைக்கப்படுகிறது.

நாதமுனி, பெருமாளுக்கு தினமும் கைங்கரியம் செய்தபடி வாழ்ந்து வந்தார். அவர் வீட்டுக்கு ஒரு

படைப்பாளிகளுக்கு...
* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!
*இதழில் வெளியாகிற
கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள்
யாவும் படைப்பாளிகளின்
பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!
தொடர்புகளுக்கு
editor@ithamil.com

வேடன் வில்லுடனும், வேடுவச்சி குரங்குடனும் சென்று அவரை விசாரித்து கேட்க, நீராட சென்றுள்ளதாக அவர் மகள் கூறினார். வந்தவர்கள் சென்றுவிட்டனர். நாதமுனிகளிடம் இந்தத் தகவலை மகள் சொல்ல, வந்தவர்கள் ராமன், சீதை, அனுமன் என எண்ணி அவர்கள் சென்ற வழியில் நாதமுனி சென்றார்.

வருபவர்களிடம் 'மூவரைக் கண்டீரா? கண்டீரா?' எனக் கேட்க பார்த்தவர்கள் 'கண்டோம் கண்டோம்' என்று சொன்ன இடமே கண்டமங்கலம். அனுமார் திருவடி பதித்த இடமே குரங்கடி என்னும் குறுங்குடி என்று வழங்கப்படுகிறது.

வெகுதூரம் மேற்கு திசையில் உள்ள கங்கை கொண்ட சோழபுரத்தின் கீழ் வாசலின் அருகில் சென்றவர், அங்குள்ளவர்களைப் பார்த்து 'கண்டீரா?' எனக் கேட்க அங்கோ அவர்கள், 'காணவில்லை!' எனக் கூறவும், அதுவே ஏக்கமாகி மனம் தளர்ந்து 93 வயதில் இறந்துவிட்டார். அந்த இடம் தற்போது 'சொர்க்கப்பள்ளம்' என்று அழைக்கப்படுகிறது.

வீராணம் ஏரி

தமிழகத்தில் உள்ள ஏரிகளில் மிக அதிக பரப்பளவு கொண்ட பெரிய ஏரி. 12 கி.மீ. நீளம், 4 கி.மீ. அகலம் கொண்ட 48 சதுர கி.மீ. கொண்டது. 1000 ஆண்டுகளுக்கு முன்பே வீரநாராயண ஏரி என்று அழைக்கப்பட்டது. பத்தாம் நூற்றாண்டில் (907 — 955) சோழ நாட்டை ஆண்ட முதலாம் பராந்தகச் சோழன், சிதம்பரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் பாசன வசதிகளை மேம்படுத்த விரும்பி, வீரநாராயண சதுர்வேதி மங்கலம் என்ற கிராமத்தை உருவாக்கினார்.

வீராணம் ஏரியின் தென்கிழக்கு ஓரத்தில் காடு இருப்பதால், காட்டு மன்னார் கோயில் என்று அழைக்கப்படுகிறது. பின் அந்த ஏரியை பெரிதாக்கி, வீர நாராயண ஏரி என பெயரிட்டார். வீரநாராயணன் என்பது முதலாம் பராந்தகச் சோழனின் வீரத்திற்கு வழங்கப்பட்ட பெயர். கடல் போல் காட்சியளிக்கும் இந்த ஏரிக்கரையில் இருந்துதான், அமரர் கல்கி 1950—ல் எழுதிய பொன்னியின் செல்வன் புதினம் தொடங்குகிறது. அதில் இந்த ஏரியைப் பற்றி சிறப்பித்து எழுதியுள்ளார். ஏரியில் பல ஆறுகள் கலக்கும் விதம் பற்றியும், வந்தியத்தேவன், குந்தவை நாச்சியார் மற்றும் சிலருக்கும் இந்த ஏரிக்கும் தொடர்பு இருப்பதுபோல் எழுதியுள்ளார்.

வீரநாராயணப் பெருமாள் கோயிலுக்கு வந்து சேவித்தால் திருமணத்தடை, குழந்தையின்மைக்கு பூரண அருள் கிட்டும்.

கோயில் காலை 7 மணி முதல் மதியம், 12 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் இரவு 9 மணி வரையிலும் திறந்திருக்கும்.

இருப்பிடம்

சிதம்பரத்தில் இருந்து 25 கி.மீ. தூரத்திலும், ஸ்ரீமுஷ்ணத்தில் இருந்து 25 கி.மீ. தூரத்திலும், சேத்தியாத்தோப்பில் இருந்து 17 கி.மீ. தொலைவிலும் உள்ளது.

புத்தக விமர்சனம்

வேங்கைமார்பன்

ஆசிரியர்: வில்லரசன்

வெளியீடு:
சீதை பதிப்பகம்,
சென்னை –5

விலை : ரூ. 640

சரித்திரம் எழுதுவதென்பது எப்போதுமே உன்னதமானது! எல்லா எழுத்தாளர்களுக்கும் அது கைவந்த கலையமன்று. ஆனால் இருபத்தியொரு வயதில் வில்லரசன் வடித்திருக்கும் 'வேங்கைமார்பன்' புதுவரவுப் புதினம், தமிழ் இலக்கிய உலகில் சீர்மிகு இடத்தைப் பிடிக்கத்தக்கப் புதினமாக மலர்ந்துள்ளது. தமிழிலக்கிய உலகில் அகவை இருபதுகளில் சரித்திரப் புதினம் வடித்தவர், கடந்த அரைநூற்றாண்டுகளில் இவராகத்தான் இருக்கக்கூடும். சரித்திரப் புதினம் எழுதுபவர்கள் எடுத்துக்கொள்ளும் கதாபாத்திரங்கள் வரலாற்றில் நீடுபுகழ் தேடிய கதாப்பாத்திரங்களாகவே இருந்திருக்கின்றன. ஆனால் வெகு சொற்பமாகத்தான் குறுநில மன்னர்களை ஓட்டிய புதினங்கள் வெளிவந்துள்ளன. அந்த வகையில் வேங்கைமார்பனைப் பற்றி வந்திருக்கும் இச்சரித்திரப் புதினம், ஏற்புடைய நடையாலும், கற்பனையின் அதிசய ரசவாதத்தோடும் தமிழ் கூறும் நல்லுலகம் கொண்டாட வேண்டிய ஒரு புதினமாகப் பொலிகின்றது.

பழந்தமிழர்களின் கோட்டை அமைப்பு, படைக்கலன்கள், போர் முறைகள் இவற்றோடு என்றென்றும் வாழும் காதலையும், வீரத்தையும் கலந்து கனிரசமாகத் தந்திருக்கும் வில்லவனின் 'வேங்கைமார்பனை' வெகுவாக ரசிக்கலாம். வில்லரசன் எழுத்துலகில் வல்லரசனாகப் பெரும் புகழ் பெறுவார். அடுத்தடுத்து அவரது படைப்புகள் அதனை வெளிப்படுத்தி நிற்கும்! தமிழிலக்கிய உலகில் தனித்த அடையாளத்துடன் வில்லரசன் சொல்லரசனாகவும் நிலைத்திருப்பார் என்பதற்கு இந்த 'வேங்கைமார்பன்' அச்சாரம் தருகின்றான்.

சிறுகதை

சுகமான சுமைகள்

சாந்தி நாதன்

"யாரு போன்? உன் ஆருயிர் தோழி திரிபுர சுந்தரி தானே?" சதாசிவனின் கிண்டல் கேள்வியால் சிறிது கோபம் வந்தாலும், "எப்படி இவ்வளவு சரியா கண்டுபிடிச்சீங்க? அவதான்!" இந்த வாரம் முழுக்க மாதங்கி ஆபிசிலிருந்து லேட்டா வரதால நான் கோயிலுக்கே போக முடியலை. அதான் ஒரு தகவல் சொன்னா....." என்றாள் அகிலா.

"என்னவாம்?"

"நம்ப கோவில் கமிட்டி ஒரு ஆன்மிக டூர் ஏற்பாடு பண்றாங்களாம். கர்நாடக கோவில் சுற்றுலா. மங்களூர் வரை ரயில், அங்கிருந்து டூலக்ஸ் பஸ்ஸில் உடுப்பி, தர்மஸ்தலா, சுப்ரமண்யா, சிருங்கேரின்னு அஞ்சாறு கோவில் போயிட்டு திரும்ப மங்களூர் வந்து சென்னைக்கு ரயில். இன்னும் ரெண்டு வாரத்துல கிளம்பறதால சீக்கிரமா பேர் கொடுக்கணுமாம். அவ போகப் போறாளாம்!"

"இங்க பாரு அகிலா, நம்ப மருமக மாதங்கி ஒரு பெரிய பிராஜெக்டுக்கு தலைமை ஏத்துண்டு ராப்பகலா அதுக்கு வேலை பாத்துண்டு இருக்கா. பையன் கல்யாண் பாதி நாள் ஆபிஸ் டூர் போயிடறான். நாம குழந்தைகளையும் வீட்டு நிர்வாகத்தையும் பொறுப்பா பார்த்துப்போம்ங்கற தைரியத்துலதான் அவாரெண்டு பேரும் முழுமையா தங்கவேலையில ஈடுபட முடியுது. பெற்றோர்களைப் பாத்துக்கறது பிள்ளைங்க கடமைங்கறது போல பெற்றோர்களும் தங்களால முடிஞ்ச வரைக்கும் பிள்ளைகளுக்கு உதவியா இருக்கணும்னு நான் நினைக்கிறேன்."

"எனக்கும் இதெல்லாம் தெரியும். ஏதோ ஆன்மீகப் பயணம் போறாங்கன்னு கேட்டதும் ஒரு நிமிஷ நப்பாசை அவ்வளவுதான். இதோட இந்தப் பேச்சு வேண்டாம்." அகிலா சிறிது கோபமாக இடத்தை விட்டு நகர்ந்தாள்.

இரண்டு நாட்களுக்குப் பின் இரவு சாப்பாட்டு மேஜையில் எல்லாரும் கூடியிருக்க, "கோயில்ல ஏதோ டூர் அரேஞ் பண்ணியிருக்காங்களாமே, நீங்க போகணம்னு ஆசைப் படறீங்களா?"என்று மாதங்கி கேட்க அகிலா திகைப்படைந்தாள்.

"உனக்கு இது எப்படித் தெரியும்? முதல்ல அதைச் சொல்லு"

"நான் ஆபிசிலிருந்து வரும் போது திரிபுரா மாமியைப் பாத்தேன். வீட்டில் டிராப் செய்யறேன்னு சொல்லி காரில் ஏத்திக்கிட்டேன். ஊருக்குப் போறதுக்கு ஷாப்பிங் போயிட்டு வரதாகவும் வந்த ஆட்டோ ரிப்பேர் ஆனதால வேற ஆட்டோ வருமான்னு பார்த்திட்டு நிக்கறதா சொல்லி இந்த டூர் பத்தி சொன்னாங்க. அவங்க

மருமக பாங்கில் வேலை பார்க்கறாங்க இல்லையா? அவங்களுக்கு இயர் எண்டிங் என்பதால வேலை நிறைய இருக்குமாம். அவளுக்கு லீவு கிடைக்காவிட்டா மாமியின் கணவரும் மகனுமாக வீட்டையும் குழந்தைகளையும் பார்த்துக்க வேண்டியதுதான் இந்த மாதிரி சான்ஸ் கிடைக்காது அதனால் நான் போகத்தான் போறேன் என்று சொன்னாங்க. அத்தை நீங்க இதைப் பத்தி ஒண்ணுமே சொல்லலையே " என்று கேட்ட மருமகளுக்கு பதிலாக, "என் சின்ன வயசில எங்க பாட்டி சொன்ன ஒரு கதை இப்ப எனக்கு நினைவுக்கு வரது"

"ஹேய்!... என்ன கதை சொல்லுங்க" குழந்தைகளும் மகன் மருமகள் கணவரும் சுவாரஸ்யமாய் கேட்டனர்.

"ஒரு கிராமத்தில் ஒரு பொறுப்பான குடும்பத் தலைவி! கணவர், குழந்தைகளே தன் உலகம் என வாழ்ந்து வந்தாளாம். ஐப்பசி மாத துலா ஸ்தானம் மிக நல்லது என்பதால் அவர்கள் ஊரிலிருந்து தொலைவில் இருந்த காவேரி ஆற்றுக்கு நிறையபேர் கூட்டமாகக் கிளம்பினார்களாம். இவளையும் கூப்பிட்டபோது தன் கணவருக்கு இதில் எல்லாம் விருப்பம் இல்லை என்றும் கணவர், குழந்தைகளை விட்டுவிட்டு தான்வர இயலாது என்று மறுத்து விட்டாள். "துலா ஸ்தானம் செய்ய உனக்குக் கொடுப்பினை இல்லை பாவம் நீ" என்று கிண்டல் செய்து பக்கத்து வீட்டுப் பெண்மணியும் அவர்களோடு சென்றுவிட்டாள். ஐப்பசி மாதப் பிறப்பன்று அதிகாலையில் எழுந்துத் தன் வீட்டுக் கிணற்று நீரை இறைத்து காவிரித் தாயை மனமாரப் பிரார்த்தித்தவாறே ஸ்நானம் செய்தாள். குடம் குடமாய் தலையில் விழுந்த நீரில் இருந்து ஏதோ அவள் தலையில் விழ, எடுத்துப் பார்த்தால் ஒரு மோதிரம் இருந்தது. அதைக் கொண்டு சுவாமி பிறையில் வைத்துவிட்டுத் தன் வேலைகளை அவள் பார்க்கத் துவங்கினாள். இரு நாட்கள் கழித்து யாத்திரை சென்றவர்கள் உற்சாகமாய் திரும்பி வந்தனர். தங்கள் பயண அனுபவத்தை அவளிடம் கூறும் போது பக்கத்து வீட்டுப் பெண் முகவாட்டத்தோடு காணப்பட்டாள். விசாரித்ததில் காவிரியில் குளிக்கும் போது அவள் கையிலிருந்த மோதிரம் நழுவி நீரில் விழுந்து விட்டதாக வருத்தத்தோடு கூறினாள். உடனே உள்ளே சென்று சுவாமி பிறையில் வைத்திருந்த மோதிரத்தை எடுத்து வந்து காட்ட, மோதிரத்தைத் தொலைத்தவள் "இதுதான் என் மோதிரம்," என்று கூவினாள். மோதிரம் தன்னிடம் வந்த விபரத்தை இவள் கூற, அனைவரும் வியப்படைந்தனர். அவளது கடமை தவறாத குணத்தையும் ஆழ்ந்த இறைபக்தியையும் உணர்ந்த இறைவன் அவள் வீட்டுக் கிணற்றுக்குள் காவிரி நீரைப் பாயச் செய்துள்ளார் என்று யாவரும் உணர்ந்தனர். இந்தக் கதை வெறும் கற்பனையாக இருக்கலாம். ஆனால் என்னைப் பொறுத்தமட்டில் நமக்குரிய கடமைகளை உள்ளன்போடு செய்வதே கடவுளை நெருங்க அடிப்படையாகும் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொண்டிருக்கிறேன். இந்த ஆன்மிகப் பயணம் போகவேண்டும் என்ற விருப்பம் எனக்கு இல்லவே இல்லை. இனி போய் அவரவர் வேலைகளைப் பாருங்கள்" அகிலா செல்ல அதட்டலோடு எல்லாரையும் இயல்பு நிலைக்குத் திரும்பச் செய்தாள்.

அடுத்து வந்த நாட்களில் மாதங்கியின்

ப்ராஜெக்ட் மும்பையில் உள்ள தலைமை அலுவலகத்தில் பெறும் பாராட்டைப் பெற்று அவளை மும்பாய்க்கு கூப்பிட்டு ஒரு பாராட்டு நிகழ்ச்சி ஏற்பாடு செய்தது. "உங்கள்

ஒத்துழைப்பால் தான் நான் இதில் வெற்றிபெற முடிந்தது" என்று மாதங்கி மாமனார் மாமியாரை பாராட்டி, "நாளை நான் வந்தபிறகு உங்களுக்கு ஒரு சர்ப்ரைஸ்" என்று போனில் பேசும்போது அகிலா மிகவும் பெருமிதமடைந்தாள்.

"கோயிலுக்குக் கிளம்பி மனமார இறைவனுக்கு நன்றி கூறி வீடு திரும்பிய அகிலாவுக்கு டூர் சென்றவர்கள் திரும்பி இருப்பார்கள் என்பது நினைவுக்கு வர, திரிபுராவை தொடர்பு கொண்டாள்.

"அகிலாவா," என்றாள் மெல்லிய குரலில் அவள்.

"என்ன பயணக் களைப்பா? நான் அப்புறமா பேசட்டுமா?" என்றாள் அகிலா.

"போனை வைச்சுடாதே!" என்றவள், "என் நேரமே சரியில்லை. எவ்வளவு ஆசையா கிளம்பினேன். ஆனா மங்களூரில் ரயிலை விட்டு இறங்கும் போதே கால் பிசகி விழுந்துட்டேன். ஒத்தருக்காக நம்ம ப்ரோக்கிராமை மாற்றக்கூடாதுன்னு எல்லாரும் முணுமுணுக்க, டூர் மானேஜர் தெரிந்தவர் ஒருவர் வழியாக நடக்கவே முடியாமல் இருந்த என்னை ஆம்புலன்ஸ் ஏற்பாடு பண்ணி ஆஸ்பத்திரிக்குக் கூட்டிண்டு போக வைச்சுட்டு மத்தவளோட கோயிலுக்குப் போயிட்டார். விழுந்ததில் காலில் பிராக்ச்சர் என்று தெரிந்ததில் எம் பையனுக்குத் தகவல் சொன்னா. அவன் கிளம்பி வருவதற்குள் கட்டுப் போட்டு மருந்து மாத்திரையெல்லாம் கொடுத்து பார்த்துண்டா. மறுநாள் வந்த பிள்ளை எங்கிட்ட முகம் கொடுத்துப் பேசவேயில்லை. டாக்டர்கள் அனுமதியோடு அங்கிருந்து ஆம்புலன்ஸ் ஏற்பாடு பண்ணி இங்க கூட்டிண்டு வந்துட்டான். மத்தவாளைப் பத்திக் கொஞ் சம்கூட கவலைப்படாம போனியே, இப்ப உன்னால எல்லாருக்கும் எவ்வளவு தொல்லைன்னு இவர் கரிச்சுக் கொட்டறார். மருமக பார்வையாலேயே எரிக்கறா. கடனுக்கு எல்லாத்தையும் பண்ணி என் ரூமில் வைச்சுட்டு மாமனாரிடம் சொல்லிண்டு அவ பாட்டுக்கு ஆபிஸ் போயிடறா....."

"அடப் பாவமே, கவலைப்படாம பகவானை நினைச்சிண்டு இரு. கூடிய சீக்கிரம் கால் சரியாகி பழைய மாதிரி நடக்க ஆரம்பித்து விடுவே பார். நம்ப குழந்தை, கணவன் கோபத்தில் ஏதோ சொல்றான்னு நினைச்சிண்டு பொறுமையா இரு. நாளைக்கு நான் வந்து உன்னைப் பாக்கறேன்" போனை வைத்தாள் அகிலா.

மறுநாள் மும்பையிலிருந்து திரும்பி வரும் மாதங்கியின் வரவை யாவரும் ஆவலோடு எதிர் பார்த்திருக்க, அகிலா சமையலறையில் ஒரு விருந்தே தயாரிப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தாள். "அத்தே, மாமா" என்று கூப்பிட்டவாறே உள்ளே வந்த மாதங்கி இருவரையும் நமஸ்கரித்தாள்.

"இந்த சவாலான வேலையை கொடுத்த காலக் கெடுவில் சரிவர முடித்துக் கொடுத்தற்கு எனக்கும் என் டீமிற்கும் ஹெட் ஆபிஸில் ஒரே பாராட்டு. எல்லாருக்கும் ஊக்கத் தொகை. எனக்குப் பதவி உயர்வு. இதெல்லாம் உங்க ஒத்துழைப்பால தான்

நடந்ததது.”

“உன் திறமையால நீ ஜெயிச்சிருக்க. நாங்க என்னம்மா பெரிசா செஞ்சிட்டோம்?”

“இல்லை மாமா, கிட்டத்தட்ட ஒரு மாசமா வீட்டைப் பத்தியோ குழந்தைகளைப் பத்திய கவலையோ இல்லாம நான் இதில் முழு கவனம் காட்டமுடிஞ்சதுக்குக் காரணம் நீங்க அந்தப் பொறுப்பை பார்த்துக் கொண்டதால் தானே....” சொன்னவாறே ஒரு கவரை அவர்களிடம் “என்னோட அன்புப் பரிசு” என்று கொடுத்தாள்.

“அப்பா! சஸ்பென்ஸ் தாங்கலையா? நானே

சொல்றேன். உங்க இரண்டு பேருக்கும் காசி, ரிஷிகேஷ், ஹரித்வார் போக ஒரு நல்ல டிராவல் ஏஜென்சி மூலமாக ஏற்பாடு செஞ்சிருக்கோம். நீங்க தேதி பார்த்து சொன்னா பிளைட்டிக்கெட் கைக்கு வந்துடும். நீங்க வசதியா தங்கறது, மத்த வசதிகள் எல்லாம் அவங்க கச்சிதமா பாத்துப்பாங்க. மாதங்கி அந்த சமயம் லீவு போட்டுட்டு வீட்டைப் பார்த்துப்பா. நீங்க ஜாலியா எந்தக் கவலையும் இல்லாம போயிட்டு வரலாம்“ மகன் கூறுவதைக் கேட்டுப் பெரியவர்கள் இருவரும் புன்னகையோடு ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

“ஆனா பாட்டி, எனக்கும் அக்காவுக்கும்தான் சிரமம்...” பேரன் கவலைப் படுவது போல் சொன்னான்.

“உங்களுக்கு என்னடா கஷ்டம்“ என்றாள் அகிலா.

“நீங்க டூர் போயிட்டு வர்ற வரைக்கும் அம்மாவோட சமையலை சாப்பிடணுமே அதான்” என்று குறும்புச்சிரிப்போடு கூற, அந்த இடமே சிரிப்பலைகளால் அதிர்ந்தது.

சிவகாமியின்

மூன்றாம் பாகம் : பிக்ஷுவின் காதல்

யோக மண்டபம் 8

நீண்ட காலத்திற்குப் பிறகு நாம் மறுபடியும் கண்ணபிரானுடைய வீட்டுக்குள் பிரவேசிக்கும் போது, அங்கே 'குவா குவா' என்ற சப்தத்தைக் கேட்டுத் திடுக்கிடுகிறோம்.

வாசற்படியில் சிறிது தயங்கி நின்று விட்டு உள்ளே சென்றோமானால், அஸ்தமன வேளையின் மங்கிய வெளிச்சத்தில் அங்கே ஓர் அபூர்வமான காட்சியைக் காண்கிறோம்.



விபூதி ருத்ராட்சமணிந்து கனிந்த சிவப்பழமாய்த் தோற்றமளித்த ஒரு சைவப் பெரியார் நிற்கிறார். அவருடைய நீட்டிய இரு கரங்களிலும் ஒரு பச்சைக் குழந்தை — ஆறு மாதத்துக் குழந்தை காணப்படுகிறது — மூக்கும் முழியுமாக வெண்ணெய் தின்ற கண்ணனைப் போல் கிண்ணென்றிருந்த அந்தக் குழந்தைதான் 'குவா குவா' என்று அழுகிறது. அந்தச் சைவப் பெரியாருக்கு எதிரில் கண்ணபிரானும், கமலியும் நின்று புன்னகை புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

பெரியவர், குழந்தையைக் கமலியின் கைகளில் விட்டு விடப் பார்க்கிறார். கமலி குழந்தையை வாங்கிக் கொள்ள மறுத்துப் பின்வாங்குகிறாள். "நான் என்ன செய்வேன்? பாட்டனைக் கண்டால் பேரனுக்கு அவ்வளவு ஆசை, என்னிடம் வர மாட்டேனென்கிறான்" என்று சொல்கிறாள் கமலி. இதையெல்லாம் பார்த்துக் கண்ணபிரான் சந்தோஷப்பட்டுக் கொண்டே நிற்கிறான்.

குழந்தை 'குவா குவா' என்று கத்திக் கொண்டே காலையும் கையையும் உதைத்துக் கொள்கிறது. கிழவர்..."கமலி! உன்னுடைய பொல்லாத்தனம் உன் குழந்தையிடமும் இருக்கிறது!" என்கிறார்.

அச்சமயம், வீட்டின் கொல்லைப்புறத்திலிருந்து அதாவது அரண்மனைத் தோட்டத்திலிருந்து மணி அடிக்கும் சப்தம் கேட்கிறது. பெரியவர் அதைக் கேட்டதும் அதிக பரபரப்பை அடைகிறார். அப்பால் இப்பால் பார்க்கிறார், குழந்தையைத் திடீரென்று தரையில் விட்டு விட்டுத் தோட்டத்தைப் பார்க்க ஓட்டம் பிடிக்கிறார்.

கமலி தன் கண்களில் தீப்பொறி பறக்க, "பார்த்தாயா, உன் தகப்பன் சாமர்த்தியத்தை? பச்சைக் குழந்தையைத் தரையிலே போட்டு விட்டு ஓட எப்படித்தான் மனம் வந்ததோ?" என்றாள்.

"கமலி! அப்பாவின் பேரில் குற்றம் இல்லை. நாதப் பிரம்மம் நேரிலே வந்து கூப்பிடும் போது அவர் என்ன செய்வார்?"

"நாதப் பிரம்மமும் ஆச்சு! நாசமாய்ப் போனதும் ஆச்சு! வெறும் ஆஷாடபூதி. அவ்வளவு வைராக்கிய புருஷராயிருந்தால், காட்டுக்குத் தபசு செய்யப் போவதுதானே? அரண்மனைத் தோட்டத்தில் சிங்கார மண்டபத்தில் என்ன வேலை? சமாதி கட்டிக் கொள்ள இங்கேதானா இடம் அகப்பட்டது? அது போகட்டும், என் பொல்லாத்தனமெல்லாம் என் குழந்தைக்கும் வந்திருக்கிறதாமே! கிழவரின் வாய்த் துடுக்கைப் பார்த்தாயா? இவருடைய மகன் மட்டும் ரொம்பச் சாதுவாம்! பார்! நான்

போய் விடுகிறேன். என் தங்கை சிவகாமியைப் பார்க்க வேண்டுமென்று எனக்குக் கூட ஆசையாய் இருக்கிறது. கோட்டைக் கதவு திறந்ததும் இந்தப் பொல்லாத பிள்ளையையும் அழைத்துக் கொண்டு போய் விடுகிறேன்! இந்த அரண்மனைச் சிறையில் யார் இருப்பார்கள்?"

இப்படி கமலி மூச்சு விடாமல் பேசிக் கொண்டே தரையில் கிடந்த குழந்தையை எடுக்கப் போனாள். கண்ணனும் அதே சமயத்தில் குழந்தையை எடுப்பதற்காகக் கீழே குனிந்தான். இருவருடைய தலைகளும் மோதிக் கொண்டன. "இந்தப் பொல்லாதவனை நீ ஒன்றும் எடுக்க வேண்டாம்!" என்றாள் கமலி. "அப்படித்தான் எடுப்பேன்; நீ என்ன சொல்கிறது?" என்றான் கண்ணன். இப்படி இவர்கள் குழந்தையைத் தரையிலிருந்து யார் எடுப்பது என்று சண்டை போட்டுக் கொண்டிருக்கும்போதே, வாசலில் குதிரைச் சப்தம் கேட்டது. சற்று நேரத்துக்கெல்லாம் யாரோ உள்ளே வந்தார்கள். யார் என்று திரும்பிப் பார்த்த கண்ணபிரானும் கமலியும் அப்படியே பார்த்தது பார்த்தபடி பிரமித்து நின்றார்கள்.

ஏனெனில், அவ்விதம் திடீரென்று வந்தவர் சாஷாத், மகேந்திர பல்லவ சக்கரவர்த்திதான்!

"ஓஹோ! இங்கேயும் ஒரு யுத்தமா? நாட்டிலே யுத்தம் நின்று விடும் போல் இருக்கிறது. ஆனால்,

உங்கள் வீட்டு யுத்தம் மட்டும் நிற்கவே நிற்காது போலிருக்கிறதே!" என்று சக்கரவர்த்தி கூறியதும் தம்பதிகள் இருவரும் பெரிதும் வெட்கமடைந்து மறுமொழி சொல்ல முடியாமல் நின்றார்கள்.

பிறகு மகேந்திர பல்லவர், "கமலி! உன் குழந்தை சௌக்கியமாயிருக்கிறதா?" என்று கேட்டுக் கொண்டே அருகில் வந்து குழந்தையின் முகத்தைப் பார்த்து விட்டு, "கண்ணனை அப்படியே உரித்து

வைத்திருக்கிறது! சின்னக் கண்ணன் என்றே பெயர் வைத்து விடலாம். மாமல்லனுக்கும் கலியாணமாகி இந்த மாதிரி ஒரு குழந்தை பிறந்தால், அரண்மனை கலகலவென்று இருக்கும். அரண்மனையில் குழந்தை அழுகைச் சப்தம் கேட்டு வெகுகாலம் ஆயிற்று!" என்று தமக்குத் தாமே பேசிக் கொள்கிறவர் போல் சொல்லி விட்டு, "கண்ணா உன் தகப்பனார் எங்கே?" என்று கேட்டார்.

"இப்போதுதான் வசந்த மண்டபத்துக்குப் போனார், பிரபு!" என்றான் கண்ணன்.

"ஆ! மகரிஷி யோக சாதனைக்குப் போய் விட்டாரா!" என்று மகேந்திரர் கேட்டபோது, கமலி இலேசாகச் சிரித்தாள்.

"கமலி சிரிக்கிறாள்! உங்களைப் போல் இளம் வயதாயிருப்பவர்களுக்கு யோகம், சமாதி என்றால் சிரிப்பாய்த்தான் இருக்கும். வயதாகி உலகத்தில் விரக்தி ஏற்பட்டால் அப்புறம் நீங்களும் போகும் வழிக்குக் கதி தேடலாமென்று யோசிப்பீர்கள். போகட்டும்; உங்களுடைய யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துங்கள். நான் யோகியைப் பார்த்து விட்டுப் போகிறேன்" என்று சொல்லிக் கொல்லைப்பக்கம் நோக்கிச் சென்றவர், வாசற்படியண்டை சற்று நின்று, "கமலி! உன் சிநேகிதி சிவகாமியைக் கூடிய சீக்கிரத்தில் நீ பார்க்கலாம்!" என்று கூறி விட்டு மேலே நடந்தார்.

சக்கரவர்த்தி மறைந்ததும், கமலி, "கண்ணா! இதென்ன சக்கரவர்த்தி திடீரென்று வந்து நம் மானத்தை வாங்கி விட்டார்! சிவகாமி கூடிய சீக்கிரம் வருவாள் என்று அவர் சொன்னதைக் கேட்டாயா, கண்ணா? யுத்தம் சீக்கிரத்தில் முடிந்து விடப் போகிறதா? சளுக்கர்கள் தோற்று ஓடிப் போய் விட்டார்களா?" என்று ஏதேதோ கேட்டாள்.

அந்தக் கேள்விகளையெல்லாம் காதில் வாங்கிக் கொள்ளாதவனாய்க் கண்ணபிரான் ஏதோ யோசித்துக் கொண்டிருந்தவன், சட்டென்று யோசனையை நிறுத்தி, "கமலி! கொஞ்ச நாளாகவே எனக்கு ஒரு மாதிரி சந்தேகம் இருந்தது. அது இன்றைக்கு ஊர்ஜிதமாயிற்று!" என்றான்.

"என் பேரில் சந்தேகம் வந்து விட்டதா? அது என்ன சந்தேகம்?"

"உன் பேரில் எனக்கு யாதொரு சந்தேகமும் இல்லை. சந்தேகம் என் தகப்பனார் பேரில்தான். அவர் ஏதோ யோகம், தியானம் நாதப்பிரம்ம உபாசனை என்றெல்லாம் சொல்லிக் கொண்டு நந்தவன மண்டபத்துக்குப் போய் இரவு பகலாய் உட்கார்ந்திருக்கிறாரே, அதில் ஏதோ அந்தரங்கம் இருக்க வேண்டுமென்று சந்தேகித்தேன். அந்தச் சந்தேகம் ஊர்ஜிதமாயிற்று இன்று."

"என்ன சந்தேகம்? எப்படி ஊர்ஜிதமாயிற்று?"

"கிட்ட வா, சொல்கிறேன். ரொம்ப ரொம்ப அந்தரங்கமான விஷயம். இந்தப் பயலின் காதிலே கூட விழக் கூடாது! கமலி, அப்பாவின் யோக மண்டபத்தில் ஒரு சுரங்க வழி இருக்கிறது. அது கோட்டைக்கு வெளியே போகிறது. சக்கரவர்த்தியின் ஒற்றர்கள் அதன் வழியாக அடிக்கடி வந்து போய்க் கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். பார்த்தாயா? இந்தப் பயல் நான் சொல்வதை எப்படி ஒற்றுக் கேட்டுக் கொண்டிருக்கிறான்...!" என்று கண்ணபிரான் சொல்லிக் குழந்தையின் கன்னத்தை இலேசாகக் கிள்ள, குழந்தை வீர் என்று கத்த ஆரம்பிக்க, கமலி கண்ணபிரானைச் சண்டை பிடிக்க, கண்ணபிரான், 'அவனும் என் கன்னத்தை வேணுமானால் கிள்ளட்டும்!' என்று கூற, கமலி குழந்தையைப் பார்த்து, 'என் கண்ணே!' என்று அதற்கு முத்தம் கொடுக்கப் போக, குறுக்கே கண்ணபிரான் கன்னத்தை நீட்ட, கமலி அவனைச் சண்டை பிடிக்க, இப்படி ஏகப் பூசலாகி விட்டது.

இதற்கிடையில் மகேந்திர சக்கரவர்த்தி அரண்மனைத் தோட்டத்திற்குள் புகுந்து வசந்த மண்டபத்துக்குச் சென்றார். காலடிச் சப்தத்தைக் கேட்டதும், சிவனடியாராக விளங்கிய அசுவபாலர் வெளியில் தலையை நீட்டி, "பிரபு, தாங்கள்தானே. நல்ல சமயத்தில் வந்தீர்கள்; இப்போதுதான் மணி அடித்தது!" என்று கூறி, மண்டபத்தின் நடுமத்தியில் இருந்த சிவலிங்கத்தை அப்பால் நகர்த்தவும், சிவலிங்கம் இருந்த இடத்தில் ஒரு பள்ளமும் அதற்குள் மங்கிய இலேசான வெளிச்சமும் தெரிந்தன. சில விநாடிகளுக்கெல்லாம் அந்தப் பள்ளத்திலிருந்து சத்ருக்னனுடைய தலை எழுந்தது. பிறகு சத்ருக்னனின் முழு உருவமும் வெளியில் வந்தது.

"சத்ருக்னா? உனக்காகக் காத்திருந்து காத்திருந்து போதும் போதும் என்று ஆகிவிட்டது. ஏன் இவ்வளவு தாமதம்? போன காரியம் என்ன? காயா? பழமா?" என்று மகேந்திர பல்லவர் கேட்டார்.

"பல்லவேந்திரர் எடுத்த காரியம் ஏதாவது காயாவது உண்டா? பழந்தான். சுவாமி! எல்லாம் தாங்கள் போட்ட திட்டப்படியே நடந்தது. வேங்கித் தூதனுடன் போன சளுக்க வீரர்களிடம் குண்டோதரன் அகப்பட்டுக் கொண்டான். இருவரும் கொள்ளிடக் கரையில் புலிகேசியின் முன்னிலைக்குக் கொண்டு போகப்பட்டார்கள்."

"குண்டோ தரனை அப்புறம் பார்த்தாயா? அல்லது அவனிடமிருந்து ஏதேனும் செய்தி உண்டா?"

"அதுதான் இல்லை; அவனுக்காகத்தான் இத்தனை நேரம் காத்துப் பார்த்தேன். புலிகேசி மகா மூர்க்கன் என்று கேள்வியாச்சே, சுவாமி! குண்டோ தரனுடைய கதி என்ன ஆயிற்றோ என்று சிறிது கவலையாயிருக்கிறது."

"குண்டோ தரனுக்கு ஒன்றும் நேர்ந்திராது, சத்ருக்னா!"

"எப்படிச் சொல்லுகிறீர்கள்? பிரபு?"

"நம்முடைய யுக்தி நாம் எதிர்பார்த்ததைக் காட்டிலும் மகத்தான பலனை அளித்துவிட்டது. கேள், சத்ருக்னா! புலிகேசி சமாதானத் தூது அனுப்பியிருக்கிறான்! இந்த நேரம் அவனுடைய தூதர்கள் என் மறு மொழிக்காகத் தெற்குக் கோட்டை வாசலில் காத்திருக்கிறார்கள். நான் உன்னைச் சந்தித்து விட்டுப் பிறகு முடிவாக மறுமொழி சொல்லலாம் என்றெண்ணி அவசரமாக இங்கே வந்தேன்."

"பிரபு! புலிகேசியை நம்பலாமா? மகா வஞ்சகன் என்று சொல்லுகிறார்களே?" என்றான் சத்ருக்னன்.

"அவநம்பிக்கை கொள்வதற்கு இடமே இல்லை, சத்ருக்னா! ஆனாலும், குண்டோதரன் திரும்பி வந்தால் அவனைச் சில விஷயம் கேட்டு உறுதிப்படுத்திக் கொள்ளலாம் என்று நினைத்தேன்."

இவ்விதம் மகேந்திரர் சொல்லிக் கொண்டிருந்தபோதே சத்ருக்னன் எந்தப் பள்ளத்திலேயிருந்து வெளிவந்தானோ, அந்தப் பள்ளத்திற்குள் இருமல் சப்தம் கேட்டது. பேசிக்கொண்டிருந்த இருவரும் திடுக்கிட்டார்கள். அடுத்த வினாடி அந்தப் பள்ளத்தில் குண்டோ தரனுடைய தலை தெரியவே, அளவிறந்த வியப்போடு ஓரளவு அமைதியும் அடைந்தார்கள்.

"குண்டோ தரா! உனக்கு நூறு ஆயுசு! இப்போதுதான் உன்னைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். நீ எப்படித் திடீரென்று முளைத்தாய்?" என்று சக்கரவர்த்தி கேட்க, "பிரபு! தாங்கள் அடிக்கடி 'சத்ருக்னரைப் பின்பற்றி நட! சத்ருக்னரைப் பின்பற்றி நட!' என்று சொல்லுவீர்களே, அது மிகக் கடினமான காரியம். இந்த இருட்டுச் சுரங்க வழியில் இவரைப் பின்பற்ற முயன்று நான் ஓடோ டி வந்தும் இவரைப் பிடிக்க முடியவில்லை!" என்றான் குண்டோதரன்.

"உன் வேடிக்கையெல்லாம் அப்புறம் ஆகட்டும்; நீ போன இடத்தில் என்ன நடந்ததென்று விவரமாகச் சொல்லு" என்று மகேந்திர சக்கரவர்த்தி கேட்க, குண்டோ தரனும், நாம் முன்னமே அறிந்த அவன் வரலாற்றை விவரமாக கூறி முடித்தான்.

(சபதம் தொடரும்)

கலங்கும்

மனித குலம் காக்க ஓர் அருமருந்து!

‘நவீன கால டார்வின்’, ‘டார்வினின் வாரிசு’ என்றெல்லாம் புகழப்படும் இ.ஓ.வில்சன் (எட்வர்ட் ஆஸ்போர்ன் வில்சன்) ஒரு பரிணாமவியலர், உயிரி—புவியியலர், சமூக உயிரியலர், எறும்பியலர். கடந்த நூற்றாண்டின் சிறந்த அறிவியல் எழுத்தாளர்களில் ஒருவரும்கூட.

அமெரிக்காவின் மாசசூசிட்ஸ் மாகாணத்தில் 2021 கிறிஸ்துமஸுக்கு அடுத்த நாள் 92 வயதில் காலமான அவர், உயிரியலின் வழியாக உலகைப் புரிந்துகொள்ள முயன்றவர். அறிவியல் ஆராய்ச்சிகளின் மூலம் தான் பெற்ற வெளிச்சத்தை வாழ்நாள் முழுவதும் உலகுக்குக் கடத்திக்கொண்டிருந்த அவர், உலகம் இன்றைக்கு எதிர்கொண்டுள்ள அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வாக ‘பூவுலகில் பாதி’யை (Half-Earth) இயற்கைக்கு அர்ப்பணித்தல் என்கிற கருத்தாக்கத்தை முன்வைத்தார்.

அந்தக் கருத்தாக்கத்தைத் தெளிவுபடுத்தி அவர் வலியுறுத்திய விதத்துக்குப் பின்னால், நீண்டதொரு ஆராய்ச்சிப் பயணம் இருக்கிறது.

சிற்றுயிர் உலகம்

‘ஒவ்வொரு குழந்தைக்கும் பூச்சிகளைப் பின்தொடர்ந்த பால்ய காலம் ஒன்றிருக்கும். அந்தப் பால்ய கால ஆர்வத்தைத் தாண்டி நான் வெளியே வரவில்லை. சூழலியலை ஆராய்ந்து பார்ப்பதிலும் குழந்தைகளுக்குப் பெருவிருப்பம் இருக்கும். பூச்சியியலை நான் தேர்ந்தெடுத்ததற்கு இப்படிக் குழந்தை மனத்துடன் இருந்தது ஒரு காரணம் என்றால், மற்றொரு காரணம், என்னால் ஒரு கண்ணால் மட்டுமே பார்க்க முடியும் என்பது. அதனால்தான் சிறிய விஷயங்களை உற்றுநோக்குவதில் கவனம் செலுத்தினேன்’ என்று சுயசரிதையில் வில்சன் குறிப்பிட்டுள்ளார். அவருடைய ஏழு வயதில் தூண்டிலிட்டு மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, வலுவாக இரையைக் கடித்த ஒரு முள்மீனை நீரிலிருந்து வேகமாகப் பிடித்து இழுத்தபோது, மீனின் துடுப்பிலிருந்த கூர்மையான முள் அவருடைய வலது கண் பாவையை வெட்டிவிட்டது. அதனால் வாழ்நாள் முழுக்க ஒரு கண்ணால் மட்டுமே தெளிவாகப் பார்க்கக்கூடிய நிலை அவருக்கு உண்டானது.



இயற்கை

ஆதி வள்ளியப்பன்

பால்ய காலத்தில் அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டன் பகுதியில் உள்ள ராக் கிரீக் பூங்கா பகுதிக்கு வில்சன் அடிக்கடி சென்று திரும்பினார். 'ஒரு நாள் மக்கிக்கொண்டிருந்த ஒரு மரக்கிளையை வெளியே எடுத்தேன். அதன் அடியில் சிட்ரோனெல்லா எறும்புகள் இருந்தன. அந்தக் கூட்டத்திலிருந்த உழைப்பாளி எறும்புகள் சிறிதாக, பருத்து, மஞ்சள் நிறத்தில் புத்திசாலிகளாகச் செயல்பட்டுக்கொண்டிருந்தன. அந்த எறும்புகளிலிருந்து எலுமிச்சைவாசம் வந்தது. அன்று எறும்புகள் குறித்து மனத்தில் பதிந்த அந்த பிம்பம் என் வாழ்நாள் முழுக்கத் திரும்பத் திரும்ப ஒரு நீங்காத காட்சியாக மனத்தில் பளிச்சிட்டுக்கொண்டே இருந்தது' என்கிறார்.

பதின்ம வயதின் இறுதியில் பூச்சியியலர் ஆகும் ஆர்வத்துடன் ஈக்களைச் சேகரிக்கத் தொடங்கினார். அப்போது இரண்டாம் உலகப் போர் நடந்துகொண்டிருந்ததன் காரணமாகப் பூச்சி மாதிரிகளைக் குத்திவைக்கும் குண்டூசிகள் கிடைப்பது சிக்கலாக இருந்தது. இதன் காரணமாகச் சிறு குப்பிகளில் சேகரித்து ஆராயக்கூடிய எறும்புகளின் மீது அவருடைய கவனம் திரும்பியது.

உயிரினச் சமநிலை

புகழ்பெற்ற ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் 1956—ல் பயிற்றுவிக்கும் பணியில் சேர்ந்தார். எறும்பு வகைப்பாட்டியலராகவும் அவற்றின் பரிணாமவியல் வளர்ச்சி குறித்தும் ஆராயத் தொடங்கினார். சக எறும்புகளுடன்

தொடர்புகொள்வதற்காக பெரமோன் எனும் வேதிப்பொருளை எறும்புகள் பயன்படுத்துகின்றன என்பதை முதலில் கண்டறிந்தவர் அவர்தான். 1960—களில் பிரபலக் கணிதவியலரும் சூழலியலருமான ராபர்ட் மெக்ஆர்தருடன் இணைந்து வில்சன் பணியாற்றினார். ஃபுளோரிடா கீஸ் என்கிற சிறு தீவில் 'உயிரின வகைகள் சமநிலைக் கோட்பாடு' குறித்து அவர்கள் ஆராயத் தொடங்கினார்கள்.

இதற்காக அங்கிருந்த அலையாத்தித் தீவுகளில் பரிசோதனை மேற்கொண்டார்கள். முதலில் அந்தத் தீவுகளில் இருந்த பூச்சி வகைகளைக் கணக்கெடுத்தார்கள். பிறகு, அங்கிருந்த சிற்றுயிர்கள் அனைத்தையும் புகையூட்டி அழித்தார்கள். பிறகு புதிய உயிரின வகைகள் அந்தத் தீவுக்கு எப்படி வந்து, பெருகத் தொடங்குகின்றன என்பதை ஆராய்வதற்காக அவர்கள் காத்திருந்தார்கள். ஒரே ஆண்டில் அந்தச் சிறு தீவுகளில் இருந்த பல்லுயிர் வகைகள் ஒரு யுகத்துக்கு முந்தைய நிலைக்குத் திரும்பின. பிறகு, உயிரினப் பன்மை சமநிலையை எட்டி, அந்த இடத்தில் அவை நிலைத்திருக்கத் தொடங்கின.

இந்த நேரடிக் கள ஆய்வு முடிவுகள் அடிப்படையில், உயிரின வகைகள்—அவை வாழும் நிலப்பரப்பு இடையிலான சமன்பாடு எனும் கோட்பாடு முன்வைக்கப்பட்டது. இந்த ஆய்வு முடிவின்படி, ஒரு தீவில் வாழும் உயிரின வகைகளில் சமநிலை நிலவுகிறது என்பதுடன், அந்தத் தீவு சுருங்கினால், சில உயிரின வகைகளுக்கு இடமில்லாமல் போகும் என்பதும் உண்மையானது. அதாவது, ஓர் அளவுக்கு மேல் தீவுகளால் கூடுதல் உயிரின வகைகளைத் தாங்க முடிவதில்லை, அப்படித் தாக்குப்பிடிக்க முடியாத உயிரினங்கள் அழிந்துபோகின்றன. இந்த ஆய்வு அடிப்படையிலான 'தீவு உயிரி—புவியியல் குறித்த கோட்பாடு' என்கிற புத்தகம், சூழலியலர்களுக்கு நிரந்தரப் பாடமாக மாறியது.

சமூக நடத்தைகள் மரபணுக்களால்



தீர்மானிக்கப்படுகின்றன என்கிற கருதுகோள் அடிப்படையில், 1975—ல் அவர் எழுதிய 'Sociobiology: The New Synthesis' (சமூக உயிரியல்) என்கிற நூல் பெரும் சர்ச்சைக்குள்ளானது. சுயநலமற்றுப் பிறருக்கு உதவும் குணம் மரபணு வழியாகவும் இயற்கைத் தேர்வு மூலமாகவும் வந்திருக்கலாம் என்று விலங்கு சமூகங்களை முன்வைத்து வில்சன் கூறினார். குறிப்பாக, அந்த நூலின் கடைசி அத்தியாயத்தில் மனித சமூகத்தில் அதிகாரப் படிநிலை நிலவுவதற்கு மரபணுரீதியிலான காரணங்கள் இருக்கலாம் என்கிற கருதுகோளை அவர் முன்வைத்திருந்தார். மனித சமூக நடத்தைகளுக்கும் மரபணுக்கள் காரணமாக இருக்கலாம் என்று அவர் கூறியதே சர்ச்சைக்குள்ளானது.

சமூக உயிரியல் அடிப்படையில் அவர் எழுதிய 'On Human Nature' (1978) புலிட்சர் பரிசைப் பெற்றது. பிறகு, பெர்ட் ஹால்டாப்ளருடன் இணைந்து அவர் எழுதிய 'ஜிலீமீ கிஸீமீஷ்' (1990) நூலும் புலிட்சர் பரிசைப் பெற்றது. சர்ச்சைக்குரிய சமூக—உயிரியல் கருதுகோளுக்கு மாறாக, உயிரி—புவியியல் சார்ந்த வில்சனின் பங்களிப்பே பரவலான கவனத்தைப் பெற்றது, குறிப்பிடத்தக்க ஒன்றாகவும் மாறியது.

பெரும் கொடை

புத்தாயிரத்துக்குப் பிந்தைய ஆண்டுகளில் மட்டும் 14 புத்தகங்களை அவர் எழுதியிருக்கிறார்.



'பூவுலகில் பாதி'யை இயற்கைக்கு அர்ப்பணித்தல் என்கிற கருத்தாக்கத்தை முன்வைத்து 'Half-Earth: Our Planet's Fight for Life' *(2016)* என்கிற நூலை எழுதியபோது அவருடைய வயது 87. பருவநிலை மாற்றத்தைத் தீவிரமடைய வைக்கும் உயிரினங்கள் திரளாக அற்றுப்போதலையும், சூழலியல் உருக்குலைவையும் தடுத்து நிறுத்த முடியும் என்று வில்சன் நம்பினார். அவரது கடைசி ஆசை, நிறைவேறாக் கனவு என்று இந்தக் கருத்தாக்கத்தை கூறலாம் என்கிறார் அமெரிக்க சூழலியல் எழுத்தாளர் ஜெரிமி ஹான்ஸ்.

மக்களின் நன்மைக்காகவும் இயற்கையின் நன்மைக்காகவும் பூவுலகில் பாதியை இயற்கைக்கு அர்ப்பணித்துப் பாதுகாக்க வேண்டும். அந்தப் பகுதியில் மனிதர்களைத் தவிர்த்த மற்ற உயிரினங்கள் செழித்து வாழ்வதற்கு இடமளிக்க வேண்டும். இதன் மூலம் இயற்கை தனக்குத் தானே புத்துயிர் ஊட்டிக்கொள்ளும். தன் வாழ்நாளின் பெரும் பகுதியைப் பரிணாமவியல் ஆராய்ச்சிக்காகச் செலவிட்ட ஒருவர், பூவுலகுக்கும் மனித குலத்துக்கும் அளித்த மிகப் பெரிய கொடை இந்தக் கருத்தாக்கம் என்று ஜெரிமி குறிப்பிடுகிறார்.

பூவுலகில் பாதியை இயற்கைக்கு அர்ப்பணித்தால் 80% உயிரினங்களைக் காப்பாற்ற முடியும். குறிப்பாக, உயிரினப் பன்மை மிகுந்த கடல் பவளத் திட்டுகள், வெப்பமண்டல மழைக்காடுகள் உள்ளிட்டவற்றைக் காப்பது அவசியம். இது சாத்தியமானால் உயிரினங்கள் திரளாக அற்றுப்போதலையும் ஒட்டுமொத்த சூழலியல் சீர்குலைவையும் தவிர்க்க முடியும். மனித நாகரிகமும் பேரழிவிலிருந்து தப்பும்.

சாத்தியமற்றதா?

மனிதத் தூண்டுதலால் உலகில் பேரழிவு (Anthropocene) நடைபெற்றுவரும் காலம் என்று நாம் வாழும் காலம் அடையாளப்படுத்தப்படுகிறது. இந்தப் பின்னணியில் பூவுலகில் பாதியை இயற்கைக்கு அர்ப்பணிப்பது என்பது நடைமுறை சாத்தியமற்ற அறிவியல் புனைவைப் போல் தோற்றமளிக்கலாம். இன்றைய தேதிக்குப் பூவுலகின் நிலப்பரப்பில் 17% காடுகளும் 7% பெருங்கடல்களும் ஏதோ ஒரு வகையில் பாதுகாப்பைப் பெற்றுள்ளன. அப்படியென்றால், பூவுலகில் பாதியைக் காப்பதற்கான இடைவெளி பெரிது. அதேநேரம் இது சாத்தியமற்றதல்ல. உலக சராசரி வெப்பநிலை மேலும் 1.5 டிகிரி செல்சியஸ் அதிகரிக்காமல் தடுத்து நிறுத்த, '30—க்கு 30' என்கிற திட்டத்தை மார்ஷல் தீவுகள் 2016—ல் முன்மொழிந்தன. அதன்படி பூவுலகின் 30% நிலப் பகுதியையும் 30% கடல் பகுதியையும் பாதுகாக்க 50 நாடுகள் முன்வந்துள்ளன.

இப்படிச் செய்வதன்மூலம் புவியை வெப்பப்படுத்திவரும் கரியமிலவாயு கூடுதலாகக் கிரகிக்கப்படும், தூய தண்ணீர் கிடைக்கும், மண் வளம் பெறும், உயிரினங்கள் செழிக்கும், இன்னும் என்னென்ன வகைகளிலெல்லாம் இயற்கை மீள வழியுண்டோ அத்தனை வழிகளிலும் இயற்கை மீண்டெழும். அதன் பலனாக மனித குலம் உட்பட அனைத்து உயிரிகளும் காக்கப்படும், உயிரைக் கையில் பிடித்துக்கொண்டிருக்கும் பூவுலகு இழந்த ஆரோக்கியத்தைத் திரும்பப்பெறும்.

பூவுலகுக்குப் புத்துயிர் ஊட்டுவதற்கு இ.ஓ.வில்சன் முன்வைத்த இந்த அருமருந்து, உத்தரவாதமாகப் பலன் கொடுக்கும். ஆனால், அந்தத் தீர்வைச் செயல்படுத்துவது யாரோ சிலருடைய கைகளில் இல்லை. நம் ஒவ்வொருவர் கைகளிலுமே உள்ளது.

அறிவோம் தமிழர்

ராஜராஜ சோழனை சந்திக்க நேர்ந்தால்...

ஏறத்தாழ 18 ஆண்டுகளுக்கு முன்னர், சர்வதேச மகாபாரத மாநாடு ஒன்று, சென்னை எம்.ஓ.பி. மகளிர் வைணவக் கல்லூரியில் நடைபெற்றது. தொல்லியல் பேரறிஞர் பெரியவர் நாகசாமிதான் அம்மாநாட்டு ஏற்பாட்டாளர். மாநாட்டுக் குழுவில் இடம்பெற்று, பெரியவரின் வழிகாட்டுதலில் பல்வேறு பணிகளைச் செயல்படுத்துகிற வாய்ப்பு கிட்டியது. அதைவிட, இரண்டு வார காலம், குருகுலத்தில் பாடம் கேட்கும் பேறு கிட்டியது எனலாம்.

நாகசாமி ஐயா என்றாலேயே, கட்டுப்பாடு மிக்கவர், சரியானவற்றையும் சரியான முறையிலும் செய்தாலும்கூட, என்ன சொல்லப் போகிறார் என்னும் தவிப்பு இருக்கும். ஒருவேளை, தவறாக ஏதாவது செய்துவிட்டோமோ என்னும் பதைபதைப்புடன் நிற்கும்போது, ஒன்றுமே பேசாமல், சில கணங்கள் இருப்பார்; இன்னும் சில கணங்கள், ஆழமாகப் பார்ப்பார்; அதன் பின்னர், மெல்ல மெல்ல ஒரு புன்சிரிப்பு மலரும் பாருங்கள் குறும்புத்தனமும் குழந்தைத்தனமும் கலந்ததொரு புன்சிரிப்பு அந்தத் தருணத்தில், ஆசானாக நின்று வழிநடத்துவார்.

இந்திய தென்னிந்திய தமிழகப் பண்பாட்டிற்குக் கிடைத்த தனிக் கருவூலம், பெரியவர் நாகசாமி அவர்கள். வேத விற்பன்னராகத் திகழ்ந்த இராமசந்திர சாஸ்திரிகளின் மகனாகப் பிறந்த நாகசாமி, தம்முடைய இளங்கலைப் பட்டப்படிப்பில், சமஸ்கிருதம் பயின்றார். பின்னர், தொல்லியலில் பயிற்சி பெற்றார். இதனைத் தொடர்ந்து, 1959—இல் சென்னை அருங்காட்சியகத்தில் பணியில் சேர்ந்தார்.

பெருமை!

டாக்டர்

கதா சேஷய்யன்

கலை மற்றும் தொல்லியல் காப்பாளர் பணியில், குறிப்பாக இவருக்கு ஒதுக்கப்பட்ட உள்துறைகள், ஓவியம் மற்றும் சிற்பம். இந்த நிலையில்தான், 1960—களின் தொடக்கத்தில், தமிழ்நாடு மாநிலத்தின் தொல்லியல் துறை உருவாக்கப்பட்டது. நாகசாமியின் குருவும், தொல்லியல் வித்தகருமான டி.என்.இராமசந்திரன், புதிய துறையின் சிறப்பு அலுவலராக நியமிக்கப்பட்டார். 1963—இல், உதவிச் சிறப்பு அலுவலராக இராமசந்திரனோடு இணைந்த நாகசாமி, தம்முடைய குரு ஓய்வு



பெற்றபின்னர், 1966—இல், தமிழ்நாடு தொல்லியல் துறையின் முதல் இயக்குநராகப் பொறுப்பேற்றார்.

நாகசாமி இயக்குநராகச் செயலாற்றிய 22 ஆண்டுகளில், தொல்லியல் துறை, பல்வேறு புதுமைகளையும் சிறப்புகளையும் கண்டது. கல்வெட்டியல், அரும்பொருள் பாதுகாப்பு, அகழாய்வு, தொல்லியல் பொறியியல், புகைப்படப் பதிவு என்று பல்வேறு பிரிவுகள் தோற்றுவிக்கப்பட்டு விரிவாக்கப்பட்டன. கலைச் சின்னங்களை எவ்வாறு பார்க்கவேண்டும், எவ்வாறு பராமரிக்கவேண்டும் என்பன போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டன. கோயில்களை எவ்வாறு காணவேண்டும், எப்படியெல்லாம் சுத்தப்படுத்த வேண்டும், எப்படி சுத்தப்படுத்தினால் கல்வெட்டுகளையும் ஓவியங்களையும் சிற்பங்களையும் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம் போன்ற விவரங்களைப் புரிய வைத்தார்; கற்றும் கொடுத்தார்.

நம்முடைய பண்பாட்டைச் சரியாகப் புரிந்து கொள்ளவேண்டுமானால், வரலாற்றையும்

கலைகளையும் முறையாக உணரவேண்டும் என்பதே நாகசாமியின் நம்பிக்கை. இதன்பொருட்டு, பள்ளிக் குழந்தைகளையும் இளைஞர்களையும் கோயில்களுக்கும் கலைச் சின்னங்களுக்கும் அழைத்துச் சென்று, ஆய்வுப் பணிகளிலும், தூய்மைப் பணியிலும் ஈடுபடுத்தினார்.

ஏறத்தாழ 35 ஆண்டுகளுக்கு முன்னரே, பல்வேறு ஆலயங்கள், கலைச் சின்னங்கள், பண்டைய கால பொம்மைகள், விளையாட்டுகள், நாணயங்கள் ஆகியவை குறித்து, படங்களோடு கூடிய கையேடுகளைத் தயாரித்து, பள்ளிப் பிள்ளைகளிடம் விநியோகிக்கச் செய்தார்.

தஞ்சை பெருவுடையார் கோயிலில் யுனெஸ்கோ செயல்திட்டம், சிதம்பரம் நாட்டியாஞ்சலி விழா, மதுரை திருமலை நாயக்கர் மஹால் ஒலி — ஒளி காட்சி என்று அவரின் கைவண்ணம் பல்வேறு வகைகளில் மிளிர்ந்தாலும், பத்தூர் நடராஜரை மீண்டும் பாரத தேசத்திற்கும், தமிழ்நாட்டிற்கும் மீட்டுக் கொணர்ந்ததில், திருக்கைலாயத்துச் சிவபெருமானே புளகாங்கிதம் அடைந்திருப்பார் எனலாம்.

திருவாரூர் கொரடாச்சேரிக்கு அருகில் உள்ளது பத்தூர். இந்த ஊரின் அருள்மிகு நடராஜர் நிமித்தமாக, லண்டன் நீதிமன்றத்தில் ஏறத்தாழ 15 ஆண்டுகளுக்கு வழக்கு நடந்தது. இந்த வழக்கினை இந்தியாவிற்குச் சாதகமாக மாற்றிய சாதனையாளர் நாகசாமி.

1976—இல், பத்தூரில் நிலத்தைத் தோண்டிக் கொண்டிருந்தார் ராமமூர்த்தி என்னும் தொழிலாளி. ஏதோ தட்டுப்பட்டது. மண்ணில் புதைக்கப்பட்டிருந்த சிலைகள் சிலவற்றைக் கண்டார். தன்னுடைய அப்போதைய தேவைக்குப் பணம் கிடைக்கும் என்பதனால், சிலைகளில் பெரியதாக இருந்த வெண்கல நடராஜரை விற்றுவிட்டார்.

கைமாறி, கடத்தல் பாதைகள் வழியாகப் பயணப்பட்ட நடராஜரை, கனடா நாட்டைச் சேர்ந்த தனியார் நிறுவனம் ஒன்று, காட்சிப்படுத்துவதற்காக வாங்கியது. கனடாவுக்குக் கொண்டு போவதற்கு முன்னர், சீரமைப்புக்காக, லண்டன் அருங்காட்சியகம் ஒன்றில் நடராஜர் தங்க வைக்கப்பட்டார். இந்த நிலையில்தான், அந்த அம்பலவாணரின் ஆட்டம் ஆரம்பமானது.

லண்டன் போலீஸுக்குச் சிலை திருட்டு பற்றிய புகார் வந்தது. கனடா நிறுவனம், லண்டன் போலீஸ் மீது வழக்கு தொடுத்தது. நடராஜர் சிலை என்பதால், இந்தியக் கருத்துகள் நாடப்பட்டன.

அதே சமயம், இந்திய அரசாங்கம், நம்முடைய

நாட்டிலிருந்து கடத்தப்பட்டிருந்த சிலை, மீண்டும் நம்மிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று விண்ணப்பித்தது. இதற்கிடையில், நடராஜரோடு புதையுண்டிருந்து, அதே ராமமூர்த்தியால் கண்டெடுக்கப்பட்டு, விற்கப்படாமல் இருந்த பிற சிலைகளை அரசு கையகப்படுத்தியது. ஒப்பீட்டுக்காக, இந்தச் சிலைகளும் லண்டன் கொண்டு செல்லப்பட்டன.

வழக்கின் நீதிபதி இயன் கென்னடி, பல்வேறு வகையிலும் வழக்கினை ஆராய்ந்தார். நாகசாமியின் வித்தகம் முழுமையாக வெளிப்பட்டது. வெண்கலச் சிலைகளின் அமைப்பு, கோயில் சிற்பங்களோடு ஒப்பிட்டால் இருக்கக்கூடிய ஒற்றுமைகள், சிற்பக் கலையின் நுணுக்கங்கள் என்று பலவற்றையும் பொருத்திக் காட்டி, நாகசாமி சாட்சியம் அளித்தார். நாகசாமியின் நிபுணத்துவம் மட்டுமல்லாமல், இந்தியப் பண்பாடு மற்றும் கலையின்மீது அவர் கொண்டிருந்த பிடிமானத்தையும் கண்டு நீதிபதி கென்னடி அசந்து போனார். நடராஜர் அசலான பத்தூர்க்காரர்தான் என்று தீர்ப்பளித்தார்.

பல்லாண்டுகால போராட்டத்திற்குப் பின்னர், பத்தூர் நடராஜர் நாடு திரும்பினார். முகலாயப் படையெடுப்பின்போது, சிலைகளை பத்திரப்படுத்துகிற முயற்சியில் புதைக்கப்பட்ட நடராஜர், நாடு திரும்பி, தற்போது திருவாரூர்ப் பகுதியில் பத்திரமாக இருக்கிறார்.

செப்பேடுகள், கல்வெட்டுகள் பலவற்றின்

தகவல்களை முறையாகப் படித்து உறுதிப்படுத்தியதில் நாகசாமியின் பங்கு மிகப் பெரியது. தமிழ் மொழியும் வடமொழியும் நன்கு தெரிந்த காரணத்தால், இரண்டு மொழி இலக்கியங்களையும் ஒப்பிட்டு ஆராய்வதிலும், முழுமையாகக் காண்பதிலும் அவரின் அணுகுமுறை ஆழ — அகலப் பரிமாணங்கள் கொண்டதாகவே இருக்கும்.

பாஞ்சாலங்குறிச்சி, கொற்கை, கரூர் ஆகிய இடங்களின் அகழ்வாய்வுகளை மிகத் திறம்பட வழிநடத்தினார். இன்று, இவ்வூர்கள் குறித்த வரலாற்றுச் சிறப்புகள் குறித்துத் தமிழர்கள் பெருமிதப்படுவதற்கு நாகசாமியின் பங்கு அளப்பரியது. தென்னிந்திய வெண்கலச் சிலைகள் பற்றிய கலைக்களஞ்சியமாகவே திகழ்ந்தார். காஞ்சி சங்கராசார்யர்களிடம் நிரம்ப பக்தி பூண்டவர்.

கல்வெட்டுகளையும் செப்பேடுகளையும் வெற்றுப் பதிவுகளாக மட்டுமே அவர் காணவில்லை. நம்முடைய பண்பாடு எவ்வாறு வளர்ந்தது, எப்படியெல்லாம் பக்குவப்பட்டது என்பதைக் காட்டுகிற காலக் கண்ணாடிகளாகவே அவற்றைக் கண்டார். இந்தியாவிலும், தமிழ்நாட்டிலும் என்று மட்டுமில்லை, எங்காவது வரலாற்றுச் சின்னங்களுக்குச் சேதம் ஏற்பட்டால், நாகசாமியின் நெஞ்சம் அழும்.

வரலாறு, தொல்லியல், கலை ஆய்வு, இலக்கிய கலை ஒப்பு போன்றவற்றை எண்ணும்போது, நாகசாமி ஐயாவின் வடிவத்தை மறந்துவிட்டோ, மறைத்துவிட்டோ எண்ண முடியாது. சிலவற்றை அடிக்கடிக் கூறுவார்:

இளைஞர்கள், தொல்லியலிலும் வரலாற்றிலும் ஆர்வம் காட்டினால், வருங்கால வளர்ச்சிக்கு மிக்க துணையாக இருக்கும். குறிப்பாக, இரண்டு மூன்று மொழிகளைக் கற்றுக் கொண்டு, ஒப்பிட்டு ஆராய்ந்தால், மனித நாகரிகம் குறித்த தகவல்கள் பல வெளிப்படும்.

தெற்காசியப் பகுதிகளில் புழங்கும் மொழிகளைப் பயின்று ஒப்பிட்டு ஆராய்ந்தால், நம்முடைய நாட்டின் பண்பாடு குறித்தும் இலக்கியம் குறித்தும் இன்னமும் அறியலாம்.

தொல்லியல் ஆய்வுகளிலும், கலைச் சின்னப் பராமரிப்பிலும், மேற்கத்திய நெறிமுறைகளைக் காட்டிலும், நம்முடைய பண்டைய முறைகளையும் அவற்றின் நுணுக்கங்களையும் ஈடுபடுத்துதல் நல்லது.

இராஜராஜ சோழன் ஆயிரத்தாண்டு விழாவில், விழா மேடையின் பக்கத்து அறையில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தபோது, சிரித்துக் கொண்டே அவர் வினவியது நினைவு வருகிறது:

'இராஜராஜ சோழனைச் சந்திக்க நேர்ந்தால், என்ன கேட்பாய்?'

அன்றும் விடை தெரியவில்லை; இன்றும் விடை தெரியவில்லை. ஆனால், நாகசாமி ஐயாவிடம் இப்போது கேட்கத் தோன்றுகிறது:

'ஐயா, மாமன்னரைச் சந்தித்து விட்டீர்களா? அவரிடம் என்ன கேட்டீர்கள்? வரலாற்று ஆய்வுக்கும் தொல்லியல் பயிற்சிக்கும் புதிய திட்டம் ஏதாவது தீட்டிக்கொண்டிருக்கிறீர்களா?'

மருத்துவம்

ஆஸ்துமா வருவது ஏன்?

பனிக்காலத்தில் ஏற்படுகிற நோய்களில் ஆஸ்துமாவுக்கு முக்கிய இடமுண்டு. வயது வித்தியாசமின்றி எல்லோரையும் பாதிக்கிற நோய் இது. இந்தியாவில் சுமார் 2 கோடிப் பேர் ஆஸ்துமாவால் அவதிப்படுகின்றனர். பத்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளில் சுமார் 1.5 சதவீதம் பேருக்கு ஆஸ்துமா பாதிப்பு உள்ளது.



காரணங்கள்

ஒவ்வாமையும் பரம்பரைத் தன்மையும்தான் ஆஸ்துமா வருவதற்கு முக்கியக் காரணங்கள். உணவு, உடை, தூசு, புகை, புகைபிடித்தல், தொழிற்சாலைக் கழிவுகள் போன்றவை ஒவ்வாமையைத் தூண்டும்போது ஆஸ்துமா வருகிறது. குளிரான தட்பவெப்ப நிலை, கடுமையான வெப்பம் இந்த இரண்டுமே ஆஸ்துமாவை வரவேற்பவை.

நுரையீரலில் நோய்த்தொற்று இருந்தால் அது ஆஸ்துமாவைத் தூண்டும். அடிக்கடி சளி பிடிப்பது, அடுக்குத் தும்மல், மூக்கு ஒழுகல், மூக்கடைப்பு, வறட்டு இருமல் போன்றவற்றுக்கு முறையாக சிகிச்சை எடுக்காதபட்சத்தில் இவை ஆஸ்துமாவுக்கு வழி அமைத்துவிடும். டான்சில் வீக்கம், அடினாய்டு வீக்கம், சைனஸ் தொல்லை, பிரைமரி காம்ப்ளக்ஸ் போன்ற நோய்களால் குழந்தைகளுக்கு ஆஸ்துமா வருகிறது.

இவை தவிர கவலை, பதற்றம், மன அழுத்தம், கோபம், பயம், அதிர்ச்சி, பரபரப்பு, மனக் குழப்பம், அதிகமாக உணர்ச்சிவசப்படுதல் போன்ற மனம் சார்ந்த பிரச்சினைகள் ஆஸ்துமாவை வரவேற்கும். நாம் சாப்பிடும் சில மருந்துகளால்கூட ஆஸ்துமா

வரலாம். சிலருக்கு விஷக்கடிகள் காரணமாகவும், இன்னும் சிலருக்கு அதிகமாக உடற்பயிற்சி செய்வதாலும் ஆஸ்துமா வருகிறது.

ஏற்படும் விதம்

இதுவரை சொன்ன காரணங்களில் ஒன்றோ, பலவோ சேர்ந்து நுரையீரலில் உள்ள மூச்சுக்குழல் (Bronchus) தசைகளைச் சுருக்கிவிடுகின்றன. அப்போது மூச்சுச் சிறுகுழல்கள் (Bronchioles) இன்னும் அதிகமாகச் சுருங்கிவிடுகின்றன. அதேவேளையில் மூச்சுக்குழலில் உள்சவ்வு வீங்கிவிடுகிறது. இந்தக் காரணங்களால் மூச்சு செல்லும் பாதை சுருங்கி விடுகிறது.

இந்த நேரத்தில் வீங்கிய மூச்சுக்குழல் சவ்விலிருந்து நீர் சுரக்கிறது. இது ஏற்கெனவே சுருங்கிப்போன மூச்சுப்பாதையை இன்னும் அதிகமாக அடைத்துவிடுகிறது. இதனால் மூச்சு விடுவதில் சிரமம் உண்டாகிறது. குறிப்பாக அதிலும் மூச்சை வெளிவிடுவதில்தான் மிகவும் சிரமமாக இருக்கும். ஆஸ்துமா உள்ளவர்களுக்கு இளைப்பு, இருமல், மூச்சுத்திணறல் போன்ற தொல்லைகள் ஏற்படுவது இதனால்தான். அடுத்து, மிகக் குறுகிய மூச்சுக் குழல்கள் வழியாக மூச்சை வெளிவிடும்போது 'விசில்' (வீசிங்) போன்ற சத்தம் கேட்பதும் உண்டு.

தவிர்ப்பது எப்படி?

ஆஸ்துமாவை முழுவதுமாகக் குணப்படுத்த முடியாது. இதைக் கட்டுப்படுத்தவே வழிகள் உள்ளன. ஆஸ்துமா உள்ளவர்களுக்கு வீடு, அலுவலகம், தெரு, சுற்றுச்சூழல்ஞ்.. இவை எல்லாமே சுத்தமாக இருக்க வேண்டியது மிகமிக அவசியம். தூசு, குப்பை, அழுகிய உணவுப்பொருட்களை



உடனடியாக அப்புறப்படுத்திவிட வேண்டும். வீட்டில் தேவையில்லாமல் சாமான்களை அடுக்கி வைக்கக் கூடாது. சுவர்களில் படங்களைத் தொங்கவிடக் கூடாது. இவற்றில் ஒட்டடை சேரும் வாய்ப்பு அதிகம். ஒட்டடை இவர்களுக்குப் பரம எதிரி.



படுக்கை விரிப்புகளையும் தலையணை உறைகளையும் அடிக்கடி மாற்றிவிட வேண்டும். இந்த இரண்டும் சுத்தமில்லாவிட்டால் அதில் 'மைட்' எனும் கண்ணுக்குத் தெரியாத பூச்சிகள் புழங்கும், அவை ஆஸ்துமாவைத் தூண்டும்.

இவர்கள் கம்பளிப் போர்வையைப் பயன்படுத்தக் கூடாது. சில்லென்ற காற்று நேரடியாக அறைக்குள் வருவதைத் தடுக்க வேண்டும். இவர்கள் சுழல் விசிறிக்கு நேராகப் படுக்கக் கூடாது. வாசனை திரவியங்களை அதிகமாகப் பயன்படுத்தக் கூடாது. ஊதுவத்திகள், கொசுவிரட்டிகள், சாம்பிராணிப் புகை, கற்பூரம் போன்றவற்றால்கூட ஆஸ்துமா அதிகரிக்கலாம். எனவே, இவற்றைப் பயன்படுத்தாமல் இருப்பது நல்லது.

ஒட்டடை அடித்தல், வெள்ளை அடித்தல், வர்ணம் பூசுதல் போன்றவற்றை ஆஸ்துமா உள்ளவர்கள் கண்டிப்பாகச் செய்யக் கூடாது. இரண்டு சக்கர வாகனங்களில் வெளியில் செல்வதாக இருந்தால், முகத்தில் சுகாதார மாஸ்க் அணிந்துகொள்ள வேண்டும்.

பூக்களின் மகரந்தம் ஆஸ்துமாவைத் தூண்டுகிற முக்கியமான காரணி. ஆகவே பூக்கள் பூக்கின்ற இளங்காலை நேரத்தில் தோட்டம் பக்கம் போகக் கூடாது. இதுபோல் வளர்ப்புப் பிராணிகளும் இவர்களுக்கு ஆகாது. பூனை, கோழி, வாத்து, நாய், புறா, கிளி போன்ற சில உயிரினங்களின் இறகு, ரோமம், கெட்ட வாசனை மற்றும் கரப்பான் பூச்சியின் எச்சம் ஆஸ்துமாவுக்கு வரவேற்பு சொல்லக்கூடியவை.

பஞ்சுத் தூசு, ரைஸ்மில் தூசு, மாவுமில் தூசு, சிமெண்ட் புகை, ஆஸ்பெஸ்டாஸ் புகை, நூற்பாலைக் கழிவு போன்றவை ஆஸ்துமா உள்ளவர்களுக்கு ஆகாதவை. இந்த மாதிரி இடங்களில் வசிப்பதையும் வேலை செய்வதையும் இவர்கள் தவிர்க்க வேண்டும்.

ஆஸ்துமாவை ஏற்படுத்துவதில் உணவுக்கு முக்கியப் பங்கு உண்டு. எந்த உணவால் ஆஸ்துமா வருகிறது என்பதைக் கண்டுபிடித்து, அந்த உணவைத் தவிர்த்தால் ஆஸ்துமா அடிக்கடி தொல்லை தராது.

ஆஸ்துமா உள்ளவர்கள் தவிர்க்க வேண்டிய பொதுவான உணவு வகைகள்: பால், தயிர், முட்டை, மீன், கருவாடு, நண்டு, கடல் மீன், கடலை, பருப்பு வகைகள், கொட்டை வகைகள், வாழைப்பழம், திராட்சைப்பழம், எலுமிச்சை, நெல்லிக்காய், கத்திரிக்காய், கொய்யா, தக்காளி, டால்டா, குளிர்பானங்கள், சர்பத், ரோஸ்மில்க், லஸ்ஸி, கோக் பானங்கள்.

வயிறு முட்ட சாப்பிடக்கூடாது. எளிதாகச் செரிக்கும் வகையில் உணவு இருக்க வேண்டும். உறங்கச் செல்வதற்கு 2 மணி நேரத்துக்கு முன்பு இரவு உணவை முடித்துக்கொள்ள வேண்டும். இவர்கள் இளஞ்சூடான தண்ணீரை அடிக்கடி அருந்தினால் நுரையீரலில் சேருகின்ற சளி உடனுக்குடன் வெளியேற வாய்ப்பு கிடைக்கும். நீராவி பிடிப்பதும் நல்ல பலன் தரும்.

புகை — பெரிய பகை!

ஆஸ்துமாவைத் தடுக்க விரும்பினால் புகைப்பதை முற்றிலும் தவிர்க்க வேண்டும். புகை பிடிப்பவர்களுக்கு மத்தியில் செல்லக் கூடாது. வீட்டில் விறகு அடுப்பைப் பயன்படுத்தக் கூடாது. ஆஸ்துமா உள்ளவர்களுக்கு மதுவும் ஆகாது. மதுவில் இருக்கிற 'மால்ட்' எனும் பொருள் ஆஸ்துமாவைத் தூண்டுகிற காரணி.



மூச்சுப்பயிற்சி முக்கியம்!

தினமும் காலையில் எழுந்ததும் முறைப்படி பிராணாயாமம் செய்வது நல்லது. அல்லது காற்றுத் தலையணைக்குள் காற்றை ஊதி நிரப்பும் பயிற்சியைச் செய்யலாம். பெரிய ரப்பர் பலூனை ஊதிப் பயிற்சி செய்யலாம். சிறிய ஊதுகுழல் மூலம் தண்ணீரில் குமிழ்கள் வருமாறு ஊதிப் பயிற்சி செய்யலாம். இதன் மூலம் நுரையீரலின் திறனை அதிகப்படுத்த முடியும்.

'ஸ்பைரோமெட்ரி' (Spirometry) எனும் பரிசோதனை மூலம் மூச்சுக்குழலின் சுருக்க அளவைத் தெரிந்துகொண்டு, அதற்கேற்ப சிகிச்சை முறைகளை அமைத்துக் கொள்வது நடைமுறை.

ஆஸ்துமா உள்ளவர்களுக்கு 'இன்ஹேலர்' ஒரு வரப்பிரசாதம். ஆஸ்துமாவுக்கு மாத்திரை, மருந்து, ஊசிகளைப் பயன்படுத்தும்போது, அவை ரத்தத்தில் கலந்து நுரையீரலைச் சென்றடையும். அதன்பின்புதான் அவை பலன் தரும். இதற்குச் சிறிது நேரம் ஆகலாம். ஆனால், இன்ஹேலரைப் பயன்படுத்தும்போது அதிலிருக்கும் மருந்து நேரடியாக நுரையீரலுக்குச் சென்று மூச்சுக்குழல் தசைகளைத் தளர்த்திவிடும். இதன் பலனால் மூச்சுத் திணறல் உடனடியாக கட்டுப்படும்.

ஒருவருக்கு ஒவ்வாமை காரணமாக ஆஸ்துமா வருமானால் எதற்கு ஒவ்வாமை என்று கண்டுபிடித்து, அதற்கான சிகிச்சையை எடுத்துக்கொண்டால் நல்ல நிவாரணம் கிடைக்கும்.

ஆஸ்துமா பல வகைப்படும் அதில் ஒரு சில லேசான ஆஸ்துமாவானது அதற்கு மருத்துவ முறைகள் எதுவும் தேவைப்படாது. அதுவாகவே சரியாகிவிடும். அதன் அறிகுறிகள் மிகவும் லேசாக காணப்படும். ஆஸ்துமா பலவிதமான சூழ்நிலைகளால் ஏற்படுகிறது குறிப்பாக அலர்ஜி எரிச்சல் வைரஸ் உடற்பயிற்சி மன அழுத்தம் மற்றும் பல விஷயங்கள் மூலமாக ஆஸ்துமா ஏற்படுகிறது. இதுபோன்ற ஆஸ்துமா நோய் உள்ளவர்களுக்கு அதன் தாக்கத்தை கட்டுப்படுத்த அல்லது அதன் அறிகுறியை குறைப்பதற்காக சில வீட்டு மருத்துவ முறைகள் உள்ளது அதை பற்றி தற்பொழுது பார்க்கலாம்.

இஞ்சி மற்றும் வெள்ளைப் பூண்டு

இஞ்சி மிகவும் நம்பகம் வாய்ந்த மருத்துவ குணங்கள் நிறைந்த ஒன்றாகும். இஞ்சியில்

இயற்கையாகவே கிருமிநாசினிகள் அதிகமாக இருக்கிறது.

அரை துண்டு இஞ்சி டீயில் இரண்டு முதல் மூன்று வெள்ளைப் பூண்டு துண்டுகளை அரைத்து அதை குடித்து வருவது மூச்சுக்குழாயில் ஏற்பட்டிருக்கும் பிரச்சனைகளை முற்றிலுமாக சரிசெய்து சுவாசிக்கும் போது ஏற்படும் பிரச்சினைகளையும் முழுமையாக சீர் செய்து வருகிறது.

மூச்சு விடுதலில் ஏற்படும் பிரச்சினைகள் இதன் மூலம் குறைந்து காணப்படுகிறது.

இஞ்சி மற்றும் மஞ்சள் தூள்

இஞ்சி மற்றும் மஞ்சளை கலந்து நீங்களே ஒரு தேநீர் தயாரிக்கலாம்.

ஒரு கப் தண்ணீரில் இஞ்சி போட்டு அதை நன்றாகக் கொதிக்க வைத்து விட்டு அதில் அரை டீ ஸ்பூன் அளவுக்கு மஞ்சள் தூள் விடவேண்டும்.

பின்பு அதை காய்ச்சிய பாலில் சேர்த்து சிறிதளவு தேவைப்பட்டால் சீனி சேர்த்துக் கொண்டு, இதை தேநீராக தயாரித்துக் கொள்ள வேண்டும்.

தினமும் இரண்டு முறை இதுபோல் குடித்து வந்தால் சிறிது நாட்களிலேயே ஆஸ்துமா நோய்க்கு அதற்கான அறிகுறிகள் குறைய ஆரம்பித்துவிடும்.

இலவங்கப்பட்டையும் தேனும்

இந்த இரண்டும் சேரும் பொழுது மிகவும் சக்தி வாய்ந்த எதிர்ப்பு சக்தி நிறைந்த ஒரு தேநீர் நமக்கு கிடைக்கிறது.

லவங்கப்பட்டையை நன்றாக மாவு போல் அரைத்து கொள்ள வேண்டும்.பின்பு ஒரு கப் வெந்நீரில் கொதிக்க வைத்து அந்த நீரில், ஒரு கால் டீஸ்பூன் அளவுக்கு லவங்கப்பட்டையை சேர்த்துக் கொள்ள வேண்டும்.பின்பு ஒரு 10 நிமிடம் ஊற வைக்க வேண்டும். பின்னர் அதில் ஒரு டீஸ்பூன் தேன் கலந்து குடிக்க வேண்டும்.

இப்படி தினமும் இரண்டு வேளை அல்லது ஒரு வேளை குடித்து வந்தால் நிச்சயம் நல்ல முன்னேற்றம் தெரியும் என்று கூறுகின்றனர்.

அதிமதுரம் மற்றும் இஞ்சி

அதிமதுரம் என்பது ஒரு வகை செடியில் உள்ள வேராகும். இவை ஆஸ்துமாவுக்கு பல வருடங்களாக இயற்கை வைத்தியத்தில் உதவி செய்கிறது என்று இயற்கை வைத்தியர்கள் பலரும் கூறியுள்ளனர்.

அதிமதுரம் மற்றும் தேன் கலந்து ஒரு சுவையான தேநீர் உருவாக்கி தினமும் 2 வேளை குடித்துவர ஆஸ்துமா நோயாளிகளுக்கு அவர்களுக்கு தெரியக்கூடிய அறிகுறிகளை வெகுவாகக் குறைத்துவிடும் என்று கூறுகின்றனர்.

பிரியாணி இலை

பிரியாணி இலையை பெரும்பாலும் பிரியாணி செய்வதற்கு நமது வீடுகளில் பலரும் உபயோகம் செய்து வருகின்றனர்.

ஆனால் ஆஸ்துமா உள்ளவர்களுக்கு பிரியாணி இலை மூலம் ஒரு தேநீர் செய்து அதை குடித்து வந்தால் ஆஸ்துமாவிற்கான அறிகுறிகள் நாளடைவில் குறைந்து விடும் என்பது நம்மில் பலருக்குத் தெரியாது.

பிரியாணி இலையை நன்றாக அரைத்துக் கொண்டு அதை கால் ஸ்பூன் அளவு கொதிக்க வைத்த தண்ணீரில் சேர்த்துக் கொள்ளவும்.

அதில் தேவைப்படும் அளவுக்கு தேன் கலந்து கொண்டு தினமும் குடித்து வந்தால் ஆஸ்துமாவின் அறிகுறிகள் நாளடைவில் குறைந்து விடும்.

தேவி!

வானுலகில், பூவுலகில், வேறெங்கும்
தேடினாலும் கிடைக்காத

indian express foods

இட்லி / தோசை மா

இலண்டனில் மட்டுமே கிடைக்கும்

indian express foods

+44 20 8133 5144

+44 7878 89 68 37

முதிர்ந்தோர்

முதியோர் அருமை அறிவோம்!

சமீப காலமாக பெருநகரங்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாக வேர்விட்டு முளைக்கத் தொடங்கியிருக்கிறது முதியவர்களுக்கான பகல் நேர மையங்கள் (டே கேர் சென்டர்). இதென்ன புதியதாக இருக்கிறதே என விசாரிக்கத் தொடங்கியதில் பல சிறப்பான தகவல்கள் கிடைத்தன.

'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே' என்று சொல்வார்கள். குழந்தைகளைப் போல முதியவர்களை நாம் கொண்டாடத் தவறியதன் விளைவு, கடந்த காலங்களில் ஊருக்கு ஊர் முதியோர் இல்லங்கள் பெருகின. அதற்கு மாற்றாக வந்திருக்கும் இந்த முதியோர் பகல் நேர மையம் பல சாதகங்களை தாங்கி நிற்கிறது.

'பெரியவங்க சொன்னா பெருமாள் சொன்னா மாதிரி' என்று வீட்டுக்கு வீடு பெரியவர்களின் வாய்ச்சொல்லை வேதவாக்காக மதித்து நடந்த காலம் ஒன்று உண்டு. ஆனால் இன்று முதியவர் ஒருவர் பேருந்தில் ஏறினால் 'ஏன் பெருசு, நீ வீட்டுலயே இருக்க வேண்டியதுதான. நீ நிதானமா நடந்து ஏறி நான் எப்ப வண்டிய எடுக்கறது' என நடத்துனர்கள் அவர்கள் மீது பாய்கிறார்கள்.

கூட்டுக்குடும்ப வாழ்வு முறை குறையத் தொடங்கியதால் அவர்களுக்கான முக்கியத்துவமும் படிப்படியாக அருகிவிட்டது. தனிக்குடித்தன பெருக்கம் காலத்தின் கட்டாயமானதால் யாரையும் குறை சொல்ல முடியாது. இன்றைய நிலையில் முதியவர்களின் உணர்வுகளை புரிந்து நடந்து கொண்டாலே அவர்கள் மகிழ்ச்சி அடைவர்.

'வயசாயிடுச்சுல்ல.. மூலையில உக்காரு. போதும் ஊர சுத்தினது. கைய கால உடைச்சிக்கிட்டு வந்தா யார் கவனிச்சுக்கறது' என்ற வசனத்தை தொலைக்காட்சித்தொடர் ஒன்றில் கேட்க நேர்ந்தது. இதைப் போன்ற பேச்சுக்கள் அவர்களை பெரிதும் அவமானப் படவைக்கின்றன. பொது இடங்களில் இப்படி கேட்க நேரிட்டால் கூனிக்குறுகி விடுகின்றனர்.

இந்த பரபரப்பான உலகில் முதியவர்களை கவனிக்க அதிக பொறுமை தேவைப்படுகிறது. அவர்களிடம் உரையாட, அன்பாக விசாரிக்க, இளைய தலைமுறையினரிடம் பொறுமை இல்லை. கால மாற்றத்திற்கு ஏற்ப அவர்களும் இதையெல்லாம் தற்போது இளையவர்களிடம் எதிர்பார்ப்பது இல்லை. நம்மை எப்படி



பெருமை

பவித்ரா நந்தகுமார்

பலப்படுத்திக் கொள்வது என யோசிக்கின்றனர். இதற்கு ஒரு சிறந்த வடிகால்தான் இந்த மையம்.

நாமெல்லாம் பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்பி வைப்பது போலவே முதியவர்களையும் இந்த மையத்துக்கு அனுப்பி வைக்கிறார்கள். நல்ல பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் பணி நிறைவுக்குப் பிறகு வீட்டில் முடங்கிக் கிடக்க விரும்புவதில்லை. ஓய்வு தேவை என பிறர் சொல்லக் கேட்டு தன்னுடைய அனைத்து வேலைகளுக்கும் பிறரை நம்பி இருந்து காலப்போக்கில் அதுவே பழகிவிடுகிறது. பிறகு மனதளவில் பலவீனப்பட்டு விடுகிறார்கள். தம்மால் முடியும் என்பதையே மறக்கின்றனர்.

காலை 10 மணியிலிருந்து மாலை 5 மணி வரை வேலைக்குச் செல்வது போலவே இந்த மையத்துக்கும் முதியவர்கள் சென்று வருகிறார்கள். அவர்கள் வயதுடைய முதியவர்கள் இதே நேரத்தில் அங்கு வருகிறார்கள். ஒருவருக்கொருவர் மனம் விட்டு மணிக்கணக்கில் பேசுகிறார்கள். நல்ல காற்றோட்டமான இடத்தில் இம்மையம் செயல்படுகிறது. இதற்கென கட்டணம் உண்டு. மதிய உணவை அவரவர் வீட்டிலிருந்தே கொண்டுவர வேண்டும். காலை, மாலை இடைவெளி நேரத்தில் சுண்டல், பணியாரம் போன்ற ஆரோக்கியமான சிற்றுண்டிகள் மட்டும் கொடுக்கிறார்கள்.

இங்கே பல விதமான புத்தகங்களை வாசிக்கலாம்; விரும்பிய படங்களைப் பார்க்கலாம்; மனம் நினைப்பதை எழுதலாம். விரும்பினால் பிறருக்குப் பாடம் நடத்தலாம். இத்துடன் அங்கேயே தேவைக்கேற்ப மருத்துவர்கள் வருகிறார்கள். மனநல ஆலோசகர்கள் வாரம் ஒருமுறை வந்து அவர்களுடன் அளவளாவுகிறார்கள். அவர்களை மகிழ்விக்கும் நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

வயதான காலத்தில் உடல் அனைத்துக்கும் ஒத்துழைப்பு கொடுக்காது. அதுவே மனநலனையும் குலைத்துப் போடும். ஒருவர் மனதளவில்

பலவீனப்பட்டுப் போனால் தேற்றுவது மிகக் கடினம். வீட்டில் பெரியவர்கள் இருப்பது ஒரு பெரிய அகராதி இருப்பதற்கு சமம். தம் அனுபவங்களின் மூலம் அனைத்துக்கும் பொருள் தருவார்கள். சில நேரங்களில் வாழ்க்கையில் நம் வழி தவறினாலும் நம்மை சரியான திசைக்கு மாற்றுவார்கள்.

இவை மட்டுமல்ல, பல்வேறு இடங்களில் பல சிறப்பான காரியங்களை பெரியவர்கள் செய்வது மகிழ்ச்சியளிக்கிறது. காலையில் நடைப்பயிற்சி குழு உருவாக்கி உடல்நலனை பராமரிப்பது, சிரிக்கும் குழு அமைத்து விதவிதமாக சிரித்து பழகுவது, ஒன்றாக இணைந்து மரம் நடுவது, வாழ்விடங்களை தூய்மைப்படுத்துவது, நட்ட மரங்களுக்கு தண்ணீர் பாய்ச்சுவது, நீர் நிலைகளைப் பராமரித்து தூர் வாருவது, குடியரசு தினம் போன்ற முக்கிய தினங்களில் வசிப்பிட மக்களுக்கிடையே போட்டிகள் நடத்தி பரிசு கொடுப்பது என தங்களை எப்பொழுதும் சுறுசுறுப்பாக வைத்துக் கொள்பவர்களுக்கு வயது என்பது வெறும் எண்தான்.

'வீட்டடங்கி கிடங்க' போன்ற வார்த்தைகளை அவர்களிடத்தில் பிரயோகிக்காமல் அவர்கள் நம்பிக்கை கொள்ளும் வார்த்தைகளை விதைத்தால் அது அவர்களை மேலும் மகிழ்ச்சிப்படுத்தும். நம்மைப் பெற்று வளர்த்தவர்களுக்கு நாம் செய்யும் சிறு கைம்மாறு இதுதானே!

முதியவர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளுள் ஒன்று தம்முடன் பயணித்த வாழ்க்கைத் துணையை இழப்பது. முதுமையில் தனிமை கொடுமை. இளமைக் காலங்களில் மனைவி என்பவள் கணவனை சார்ந்து இருப்பதுபோல் தெரியும். ஆனால் முதுமையில் தன் அனைத்து தேவைகளுக்கும் மனைவியையே ஒரு ஆண் சார்ந்து இருக்கிறான். பெண் மனவலிமையுடன் தனித்து வாழ்ந்து விடுகிறாள்.

மனைவியை முதுமையில் இழந்து தவிக்கும் ஆண்களின் நிலை பரிதாபம். ஆணுக்கு உடல் வலிமை உண்டே தவிர மனவலிமை குறைவு. அதனாலேயே தனி மனிதனாக நீண்ட நாள் அவனால் வாழமுடிவதில்லை. இப்படி இணையை இழந்தவர்களுக்கு இது போன்ற மையங்கள் பெரும் வரப்பிரசாதம். இதனால் அவர்களின் வாழ்நாள் நீடிக்கிறது. வாழும் நாட்களை மகிழ்ச்சியுடன் கழிக்கிறார்கள்.

பல வீடுகளில் இன்னும் மகனின் கடனை அடைக்க பெற்றோரின் பணம் தேவைப்படுகிறது. ஆனால், பணிநிறைவுக்குப் பின் தனக்கான செலவுக்கு பெற்றோர் தங்கள் பணத்தை தங்களுக்கென செலவழித்துக்கொள்ள முடிவதில்லை. அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பு கொடுப்பதையே பலரும் மறந்து போயினர். இன்னும் சில இடங்களில் பேரப்பிள்ளைகளை வளர்த்தெடுப்பதற்காக விருப்பம் இருந்தோ இல்லாமலோ தம் இணையை பிரிந்து வாழ்கின்றனர்.

இன்றைய இளைய தலைமுறையினர் முதியவர்கள் பற்றி முன்வைக்கும் விமர்சனங்களையும் புறந்தள்ளிவிட முடியாது. ஒருபுறம் நவீன உலகின் வேகம் கழுத்தை இறுக்குகிறது. மற்றொருபுறம் முதுமை அடைந்த பெற்றோர் தம்மீது வைத்திருக்கும் அத்தனை எதிர்பார்ப்புகளையும் பூர்த்தி செய்ய முடியாத தவிப்பில் உழல்வது என இருதலைக்கொல்லி எறும்பாக துடிக்கிறார்கள். சில நேரங்களில் முதியவர்கள் காட்டும் பிடிவாதம் அளவிடமுடியாததாக இருக்கிறது.

முதியவர்களின் பிடிவாதத்தை தகர்ப்பதென்பது முரட்டுக்காளையை அடக்குவதற்கு சமம். அவர்கள் வாழ்ந்த அந்த காலத்திலிருந்து வெளிவராமல் ஒரு



வட்டத்துக்குள்ளாகவே நிற்பார்கள். காலத்திற்கேற்ற நடைமுறை மாற்றங்களை சொன்னாலும் ஏற்றுக்கொள்வதில்லை. நம் உணர்வுகளை, எண்ணங்களை அவர்களிடத்தில் சொல்லியும் புரியவைக்க முடியவில்லை என இளைஞர்கள் கூறுகிறார்கள்.

பெற்றவர்களைப் பராமரிப்பதற்காக தங்கள் வாழ்க்கையையே கேள்விக்குறியாக்கிக்கொண்டு எண்ணற்ற தியாகங்களைச் செய்தவர்களும் இருக்கிறார்கள். ஆள்பலம், பணபலம் இருப்பவர்களுக்கே, படுக்கையில் விழுந்துவிட்ட முதியவர்களை பராமரிப்பது பெரும் சிரமமாய் இருக்கும் போது, அதுபோன்ற எவ்வித சிறப்பு வசதிகளும் இல்லாத நடுத்தர மக்களின் நிலை மிக மிக கவலைக்குரியது. இதனால் இளையவர்களும் பெரும் மனஅழுத்தத்திற்கு ஆளாகின்றனர். வீட்டிலுள்ள பெரியவர்களும் சில விஷயங்களில் அனுசரித்துச் செல்ல வேண்டும்.

இருப்பினும் முதியோர் உணர்வுகளுக்கு கூடுதல் முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய நிலையில் உள்ளோம். ஏனெனில் இளையவர்கள் தம் வயதில் எதையும் தாங்கிக் கொள்ளும் உறுதி படைத்தவர்களாக இருப்பதால் அவர்கள் முதியவர்களை பராமரிப்பதையே ஒரு வாழ்வனுபவமாக, வாழ்க்கைப் பாடமாக எடுத்துக்கொள்ள வேண்டும். இப்படி வாழ்ந்து நிறைந்தவர்களைப் பராமரிப்பதால் இறைவன் நமக்கு வழங்கும் ஆசி நமக்கு மாபெரும் மனபலத்தைக் கொடுக்கும். உள்ளத்தில் கோபத்தைத் தேக்காமல், அன்பை மிகுதியாகத் தேக்கி வைப்பதே இவை அனைத்திற்குமான தீர்வாக இருக்கும்.

முதியவர்களுக்கு வரப்பிரசாதமாக இருக்கும் இதைப் போன்ற பகல் பொழுது மையங்கள் அவர்களுக்கு புத்துணர்ச்சியை கொடுப்பதாகவும் புது ரத்தம் பாய்ச்சுவதாகவும் இருக்கிறது. ஊர்தோறும் இதைப்போன்ற மாற்று ஏற்பாடுகள் தோன்றினால் அவர்களின் உணர்வுகளுக்கு இந்த சமூகம் உண்மையிலேயே மதிப்பளித்தது போல் இருக்கும்.

தமிழ் 2022

நற்றமிழரின் நாடித்துடிப்பு

JANUARY

FEBRUARY

Su	Mo	Tu	We	Th	Fr	Sa
	1	2	3	4	5	6
7	8	9	10	11	12	13
14	15	16	17	18	19	20
21	22	23	24	25	26	27
28						

MARCH

Su	Mo	Tu	We	Th	Fr	Sa
	1	2	3	4	5	6
7	8	9	10	11	12	13
14	15	16	17	18	19	20
21	22	23	24	25	26	27
28	29	30	31			

APRIL

Su	Mo	Tu	We	Th	Fr	Sa
				1	2	3
4	5	6	7	8	9	10
11	12	13	14	15	16	17
18	19	20	21	22	23	24
25	26	27	28	29	30	

MAY

Su	Mo	Tu	We	Th	Fr	Sa
						1
2	3	4	5	6	7	8
9	10	11	12	13	14	15
16	17	18	19	20	21	22
23	24	25	26	27	28	29
30	31					

JUNE

Su	Mo	Tu	We	Th	Fr	Sa
		1	2	3	4	5
6	7	8	9	10	11	12
13	14	15	16	17	18	19
20	21	22	23	24	25	26
27	28	29	30			

JULY

Su	Mo	Tu	We	Th	Fr	Sa
				1	2	3
4	5	6	7	8	9	10
11	12	13	14	15	16	17
18	19	20	21	22	23	24
25	26	27	28	29	30	31

AUGUST

Su	Mo	Tu	We	Th	Fr	Sa
1	2	3	4	5	6	7
8	9	10	11	12	13	14
15	16	17	18	19	20	21
22	23	24	25	26	27	28
29	30	31				

SEPTEMBER

Su	Mo	Tu	We	Th	Fr	Sa
			1	2	3	4
5	6	7	8	9	10	11
12	13	14	15	16	17	18
19	20	21	22	23	24	25
26	27	28	29	30		

OCTOBER

Su	Mo	Tu	We	Th	Fr	Sa
					1	2
3	4	5	6	7	8	9
10	11	12	13	14	15	16
17	18	19	20	21	22	23
24	25	26	27	28	29	30
31						

NOVEMBER

Su	Mo	Tu	We	Th	Fr	Sa
	1	2	3	4	5	6
7	8	9	10	11	12	13
14	15	16	17	18	19	20
21	22	23	24	25	26	27
28	29	30				

DECEMBER

Su	Mo	Tu	We	Th	Fr	Sa
			1	2	3	4
5	6	7	8	9	10	11
12	13	14	15	16	17	18
19	20	21	22	23	24	25
26	27	28	29	30	31	

editor@ithamil.com

அய் தமிழ் முகநூல்:
http://www.facebook.com/pages/Ithamil-Magazine
www.ithamil.com


VARSHA™
IDLI/DOSA BATTER
Eat Fresh!
Eat the Best!
VARSHA
Ready to Cook
Idli / Dosa Wet Mix
1Kg
Traditional taste that Lingers